பக்கங்கள் : பதினாறு

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 20 வள்ளுவர் ஆண்டு 2036 மாசி 03 செவ்வாய்க்கிழமை (15.02.2005) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் :81

## முஸ்லிம்களுக்கும் உரித்தானதே தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு!

### பிரபா அதில் உறுதியாக இருக்கின்றார் என்று தமிழ்ச்செல்வன் தெரிவிப்பு

காத்தான்குடி,பெப்.15

தமிழ் மக்களுக்கான விடுதலை அமைப்பே புலிகள் இயக்கம் என்ற தப்பபிப்பிராயத்தை முஸ்லிம்கள் கைவிடவேண்டும். விடுதலைப் புலிகள் முஸ்லிம்களுக்கும் உரித்தான ஓர் இயக்கம். இதில் எமது தலைவர் மிக உறுதியாக இருக்கின்றார். தமிழ்-முஸ்லிம் மக்கள் இணைந்து செயற்படும்போதுதான் எமது இலக்குகளை அடையமுடியும்.

- இப்படித் தெரிவித்தார் விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தற்போது கிழக்கில் தங்கியுள்ள தமிழ்ச்செல்வன் அங்கு வைத்தே இந்தக் கருத்தைத் தெரிவித்தார்.

மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட முஸ்லிம் சமூகப் பிரதிநிதிகளுடான உயர்மட்டச் சந்திப்பு ஒன்று நேற்றுக்காலை மட்டக்களப்பு. கொக்கட்டிச்சோலை விடுதலைப் புலிகளின் மாவட்டச் செயலகத்தில் நடைபெற்றது.

விடுதலைப் புலிகளின் தரப்பில் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தலைமையில் புலிகளின் சிரேஷ்ட உறுப்பினர் வே.பாலகுமார், நீதி நிர்வாகத்துறைப் பொறுப்பாளர் பரா.மட்டு-அம்பாறை மாவட்ட விசேட தளபதி கேணல் பானு.அரசியல் துறைப் பொறுப்பாளர் இளந்திரையன் உள்ளிட்ட பல தளபதிகளும், பொறுப்பாளர்களும் கலந்துகொண்டனர்.

முஸ்லிம் சமூகப் பிரமுகர்கள் சார்பில் மட்டக்களப்பு மாவட்ட முஸ்லிம் பள்ளிவாசல்கள்

(16 ஆம் பக்கம் பார்க்க)

## கிணற்றிலிருந்து தாய், குழந்தையின் சடலங்கள் மீட்பு!

யாழ்ப்பாணம்,பெப்.15

அரியாலை - முள்ளி வீதிப் பகுதியில் உள்ள கிணறு ஒன்றில் இருந்து மீட்கப்பட்டதாகத் தெரிவித்து, 7 மாத ஆண் குழந்தையின் சடலமும் அதனது தாயாரினது சடலமும் நேற்றிரவு 8 மணியளவில் யாழ்.ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டன.

முள்ளி வீதியைச் சேர்ந்த செல்வநாயகம் அயடின் கெலன் (வயது 34). செல்வநாயகம் கனிஷ்டன் (7 மாதம்) ஆகியோரின் சடலங்களே இவ்வாறு ஒப்படைக்கப்பட்டன.

மரண விசாரணை மற்றும் பிரேத பரிசோதனைகளின் நிமித்தம் சடலங்கள் யாழ். ஆஸ்பத்திரியின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளன. (எ-12-190)

# அரசுக்கு சர்வதேச சமூகம் அழுத்தம் தருவதே ஒரேவழி!

## எரிக்சொல்ஹெய்மிடம் நேற்று மதியுரைஞர் பாலா விளக்கம்

லண்டன்,பெப்ரவரி15

**“இலங்கை இனப்பிரச்சினைக்கு அமைதி வழியில் தீர்வுகாண்பதற்கான சமாதான முயற்சிகள் தடைப்பட்டுப் போயிருக்கின் றன. இந்த விடயத்தில் இலங்கை அரசை ஆக்கபூர்வமான முறையில் நடவடிக்கைகளை முன்னெடுக்கும்படி சர்வதேச சமூகம் அழுத்தம் தர வேண்டும். தேங்கிப் போயுள்ள சமாதான முயற்சிகளை முன்னெடுக்க இதுவே ஒரேவழி.”**

**விடுதலைப் புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம் நேற்று தமது லண்டன் இல்லத்தில் தம்மைச் சந்தித்த எரிக் சொல்ஹெய்ம் தலைமையிலான நோர்வே அனுசரணைக்குழுவிடம் இவ்வாறு எடுத்துரைத்தார்.**

நோர்வே அனுசரணைக் குழுவின் பிரதிநிதிகளான எரிக்சொல்ஹெய்ம், லிஸா கோல்டன் அம்மையார் ஆகியோர் நேற்றுக்காலை லண்டனில் மதியுரைஞர் பாலசிங்கத்தைச் சுமார் மூன்று மணி நேரம் சந்தித்துப் பேசினார்.

தேங்கிப்போயுள்ள சமாதான முயற்சிகளை முன்னெடுப்பதற்கான வழிவகைகள் குறித்து அவர்கள் பாலசிங்கத்திடம் வினாவினர். அதற்குப் பாலசிங்கம் அளித்த பதில் வருமாறு:-

சமாதான முயற்சிகளைத் தொடர்வதற்கான சூழ்நிலையை உருவாக்க வேண்டுமானால் அரசு தனது நல்லெண்ண நடவடிக்கைகளை வெளிப்படுத்த வேண்டும். இரண்டு வகையில் அரசின் நல்லெண்ண நடவடிக்கையை எதிர்பார்க்கிறோம்.

முதலாவது - கிழக்கில் உள்ள ஆயுதக் குழுக்களின் ஆயுதங்களைக் களைந்து, அவற்றை நிராயுதபாணிகளாக்க வேண்டும். அல்லது அரச ஆதரவுடன் இயங்கும் அக் குழுக்களை அரசு அங்கிருந்து - தமிழர் தாயகத்திலிருந்து - அகற்ற வேண்டும்.

புரிந்துணர்வு ஒப்பந்தம் இதைத்தான் வலியுறுத்துகிறது. இதை அரசு விரைந்து செயற்படுத்த வேண்டும்.

இதுவிடயத்தில் எமது இயக்கம் பொறுமையின் எல்லையில் உள்ளது. இனிமேலும் எமது முக்கியமான உறுப்பினர்கள் இவ்வாறு கொல்லப்பட்டால் பொறுத்துக்கொள்ளும் நிலையில்

(16 ஆம் பக்கம் பார்க்க)

## எரிக்சொல்ஹெய்ம் ஞாயிறன்று வருகிறார்

கொழும்பு,பெப்.15

நோர்வே அனுசரணைக்குழுவின் விசேட பிரதிநிதியான எரிக்சொல்ஹெய்ம் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை (20 ஆம் திகதி) இலங்கை வருகின்றார். அவர் இந்தத் தடவை இலங்கையில் ஒரு வாரம் தங்கியிருப்பார்.

அவர் வடக்கு-கிழக்கு உட்பட நாட்டின் பல்வேறு பகுதிகளுக்கும் விஜயம் செய்வார்.

கொழும்பில் இலங்கை அரசுத் தலைவர்களையும், கிளிநொச்சியில் விடுதலைப் புலிகளின் தலைவர்களையும் அவர் சந்தித்து விரிவான பேச்சுக்களில் ஈடுபடுவார்.

தமிழர் தாயகத்தில் ஆழிப்பேரலை அனர்த்தத்தினால் ஏற்பட்ட அழிவுகளை பார்வையிடும் அவர், இப்பிரதேச மீள்கட்டுமானம் தொடர்பாக அமைக்கப்பட்டிருக்கும் பொதுக்கட்டமைப்புச் சம்பந்தமான அரசு மற்றும் புலிகள் தரப்போடு விரிவாக ஆராய்வார் என்றும் -

இது விடயத்தில் இரு தரப்பினருக்கும் இடையில் இணக்கத்தை ஏற்படுத்தும் முயற்சியில் இம்முறை அவர் தீவிரமாக ஈடுபடுவார் என்றும் - தெரிவிக்கப்பட்டது. (எ-க)

## யாழ். நகரில் நேற்று வாகனப் பேரணி!

நூற்றுக்கணக்கான ஓட்டோக்கள், மினிபஸ்கள்,கார்கள் இணைந்து நேற்று யாழ்.நகரில் பேரணி ஒன்றை நடத்தின.

விடுதலைப் புலிகளின் மட்டு - அம்பாறை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் லெப்டினன்ட் கேணல் கௌசல்யன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மாமனிதர் அ.சந்திரநேரு மற்றும் புலிகளின் இயக்க உறுப்பினர்கள் ஆகியோர் படுகொலை செய்யப்பட்ட சம்பவத்தைக் கண்டித்தும் -

ஆழிப்பேரலை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட வடபகுதி மக்களுக்கு அரசின் ஒதுக்கீடுகள் வழங்கப்படாமைக்கு ஆட்சேபம் தெரிவித்தும் -

யாழ்.மாவட்ட முச்சக்கரவண்டிகள் சங்கம், தனியார் மினிபஸ் சங்கம்,மோட்டார் கார்ச் சங்கம் என்பன இணைந்து நேற்று யாழ்.நகரில் இந்தக் கண்டனப் பேரணியை நடத்தின.

யாழ்.கோட்டை முனியப்பர் ஆலய முன்றிலிலிருந்து முற்பகல் 11 மணிக்கு ஆரம்பமான இந்தக் கண்டனப் பேரணி, 11.30 மணியளவில் யாழ்.கோயில் வீதியிலுள்ள போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் அலுவலகத்தைச் சென்றடைந்தது.

இந்தப் பேரணியில் இருநூறுக்கு மேற்பட்ட ஓட்டோக்கள் மற்றும் மினிபஸ்கள், கார்கள் என்பன கலந்துகொண்டன. முனியப்பர் ஆலய முன்றிலிலிருந்து ஆரம்பமான பேரணி, அங்கிருந்து யாழ்.வைத்தியசாலை வீதியை அடைந்து பின்னர் கோயில் வீதியூடாகக் கண்காணிப்புக்குழு அலுவலகத்தைச் சென்றடைந்தது. அங்கு போர்நிறுத்தக் கண்காணிப்புக்

(16 ஆம் பக்கம் பார்க்க)

## அடுத்தகட்ட நகர்வு குறித்து ஜே.வி.பி. மந்திராலோசனை!

கொழும்பு,பெப்.15

அரசுக் கூட்டமைப்பில் இருக்கப் பிடிக்காவிட்டால், அதிலிருந்து ஜே.வி.பி. வெளியேறலாம் என்று ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க பகிரங்கமாக அறிவித்திருப்பது ஜே.வி.பி.தலைமையைப் பெரும் அதிர்ச்சிக்குள் ஆழ்த்தியிருக்கின்றது.

ஜனாதிபதியின் பகிரங்க அறிவிப்பால் விசனமுற்றுள்ள ஜே.வி.பி. தலைவர்கள் அடுத்தகட்ட நடவடிக்கை குறித்துத் தீர்மானிப்பதற்காகத் தமக்குள் கூடிக்கூடி மந்திராலோசனை நடத்தி வருகின்றார்கள் எனத்தெரிகின்றது.

நேற்றுமுன்தினம் அத்தனகலையில் நடை.

(16 ஆம் பக்கம் பார்க்க)

## வெலிகந்தப் பகுதியில் புலிகளின் ஊடுருவல்

### இராணுவப் பேச்சாளர் தெரிவிப்பு

கொழும்பு,பெப்.15

வெலிகந்த பகுதியில் விடுதலைப் புலிகளின் ஊடுருவல் அதிகரித்துவிட்டது என அரச தரப்புத் தெரிவித்துள்ளது.

கௌசல்யன் உட்படப் புலிகளின் முக்கிய உறுப்பினர்கள் கொலைசெய்யப்பட்டதையடுத்து, விடுதலைப் புலிகள் இப்பகுதிகளில் தீவிர தேடுதல் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர் என இராணுவப் பேச்சாளர் தெரிவித்தார்.

இதுபற்றி இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் தயா ரத்நாயக்க உதயனுக்குக் கருத்துத் தெரிவிக்கையில் கூறியதாவது:-

விடுதலைப் புலிகளின் உறுப்பினர்கள் எனக் கருதப்படும் முப்பதுக்கும் அதிகமான ஆயுதம் தாங்கியோர் வெலிகந்தவில் உள்ள தங்கும் விடுதி ஒன்றிற்குள் புகுந்து அங்கிருந்தவர்களை அச்சுறுத்தியுள்ளனர். விடுதி மேற்பார்வையாளரைத் தாக்கியுள்ளனர். விடுதியில் தங்கியிருந்தவர்களின் விவரங்கள் அடங்கிய பதிவேடு மற்றும் காசாளரிடமிருந்த பணம் என்பனவற்றை எடுத்துச்சென்றுள்ளனர். விடுதியின் பொருள்களையும் அடித்து நொருக்கி விட்டுச் சென்றுள்ளனர்.

புலிகளின் இச்செயல் குறித்து போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரிடம் முறைப்பாடு செய்துள்ளோம். இராணுவச் சோதனைச்

(16 ஆம் பக்கம் பார்க்க)

## மன்னாரில் இன்று வீதி மறியல் போர்!

மன்னார், பெப்.15

விடுதலைப் புலிகளின் மட்டு-அம்பாறை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் லெப்டினன்ட் கேணல் இ.கௌசல்யன் உட்பட 4 போராளிகளும் மாமனிதர் சந்திரநேருவும் சுட்டுக்கொல்லப்பட்டமையைக் கண்டித்து மன்னாரில் இன்று வீதி மறியல் போராட்டம் இடம்பெறவுள்ளது.

காலை 8.30 மணிக்கு மன்னார் நகர பஸ் நிலையத்தில் கூடும் மக்கள் அங்குள்ள வீதிகளின் குறுக்கே அமர்ந்திருந்து மறியல் போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர் என்று ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

மன்னார் வெகுஜன அமைப்புகளின் ஒன்றியம், தொழிற் சங்கங்களின் இணையம், மாதர் சங்கங்களின் ஒன்றியம், தமிழ் மாணவர் ஒன்றியம், தேசிய எழுச்சிப் பேரவை, மீனவர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் ஆகியன இணைந்து இந்த வீதி மறியல் போராட்டத்தை ஏற்பாடு செய்துள்ளன. (எ-க)

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



யாழ். ரெலிக்கொம் அலுவலகத்தில் அமைக்கப்பட்டுள்ள புதிய கோபுரத்துக்கான நினைவுக்கல்லை ரெலிக்கொம் நிறுவனப் பிரதான நிறைவேற்று அதிகாரி சுகி அனன் திறந்துவைப்பதையும் பின்னர் எஸ்.ரி.எம்.இணைப்பின் அலுவலகத்தை நாடாவெட்டித் திறந்துவைப்பதையும் தொடர்ந்து புதிதாக அமைக்கப்பட்ட தொலைத் தொடர்புப் பரிவர்த்தனை நிலையத்தை இயக்கி ஆரம்பிப்பதையும் முதல் மூன்று படங்களிலும் காணலாம். (படங்கள்: கங்கா)

### இலங்கை - இந்தியா இடையே விரைவில் சேவை விஸ்தரிப்பு:

# இராமேஸ்வரத்திலும், தலைமன்னாரிலும் புதிதாக தொலைத் தொடர்பு கோபுரங்கள் நிறுவப்படும்

## 'ரெலிகொம்' நிறைவேற்றுப்பணிப்பாளர் சுகி அனன் யாழ்ப்பாணத்தில் தகவல்

யாழ்ப்பாணம்,பெப்.15

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையே தொலைத்தொடர்பு சேவை விருத்தி செய்யப்படும். இதற்காக தலைமன்னாரிலும் இராமேஸ்வரத்திலும் கோபுரங்கள் அமைக்கப்படும். இதன் மூலம் வடபகுதி மக்கள் பயன்பெற வழி ஏற்படும்

ஸ்ரீலங்கா ரெலிகொம் நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரியான சுகி அனன் இத்தகவலை நேற்று யாழ்ப்பாணத்தில் வெளியிட்டார்.

வன்னி மற்றும் குடாநாட்டுக்கான தொலைபேசிச் சேவைகளைச் சீராக்குவதற்காக கிளிநொச்சியிலும், யாழ். நகரிலும் புதிதாக நிறுவப்பட்ட தொலைத்தொடர்புக் கோபுரங்களை நேற்று அவர் திறந்துவைத்தார். யாழ்ப்பாணத்துக்கும் மடுகந்தைக்கும் இடையிலான தொலைத்தொடர்பு மார்க்கத்தை கிளிநொச்சி கோபுரத்துடன் இணைக்கும் சேவை நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந்த வைபவம் யாழ்.நகரில் கொட்டடிப் பகுதியில் உள்ள ஸ்ரீலங்கா ரெலிக்கொமின் யாழ. பிராந்திய அலுவலகத்தில் நேற்று முற்பகல் நடைபெற்றது.

யாழ். ரெலிக்கொம் அலுவலகக் கட்டடத்தில் அமைக்கப்பட்டுள்ள 150 மீற்றர் உயரமான கோபுரத்தையும், அதற்கான உபகரணங்களையும் சம்பிரதாயபூர்வமாக அவர் இயக்கி வைத்தார்.

அத்துடன், யாழ். நகரப் பகுதிக்கு மேலும் 500 தொலைபேசி இணைப்புக்களை வழங்கக்கூடிய பரிவர்த்தனை நிலையத்தையும், 'மொபிட்டல்' சேவையையும் அவர் திறந்து வைத்தார்.

அதன்பின்னர் ரெலிக்கொமின் வடக்கு - கிழக்கு பிராந்திய முகாமையாளர் எஸ். கனக சூரியர் தலைமையில் நடந்த கூட்டத்தில் உரையாற்றிய அனன் மேலும் கூறியதாவது:-

புரிந்துணர்வு உடன்படிக்கை நடைமுறைக்கு வரமுன்னர் இங்கு விஜயம் செய்து, குடாநாட்டு மக்களுக்குத் தொலைத்தொடர்புச் சேவையை ஆரம்பித்தோம்.

இந்தச் சேவை படிப்படியாக ஒவ்வொரு கட்டமாக முன்னெடுக்கப்பட்டு தற்போது ஓரளவு திருப்திகரமான சேவையை வழங்கி வருகின்றோம். நவீன கருவிகளைப் பொருத்தி மேலும் இந்தச் சேவையை விரிவுபடுத்த இருககின்றோம்.

தெற்கில் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தி போன்றே ரெலிக்கொம் இங்கும் பணிகளை மேற்கொண்டுவருகின்றது. இதில் பாகுபாடு ஏதும் காட்டுவதில்லை.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களுக்கான சேவையை நவீனப்படுத்த, புதிய தொழில்நுட்பங்களை அறிமுகம் செய்ய முடிவுசெய்துள்ளோம். இதற்கான அனுமதியை அரசிடம் கோரியுள்ளோம். அரசின் அனுமதி கிடைத்ததும் இவ்வருட இறுதிக்குள் பிந்திய தொழில்நுட்பத்துடனான சேவையை வழங்குவோம் என நம்புகிறோம்.

கிளிநொச்சியில் புதிய கட்டடம் ஒன்றை அமைத்துவருகின்றோம். முல்லைத்தீவிலும் புதிய கட்டடம் அமைக்க இருக்கின்றோம்.

யாழ். மாவட்டத்தில் சுன்னாகம், சித்தன்கேணி, சாவகச்சேரி ஆகிய இடங்களில் பரிவர்த்தனை நிலையங்களை விரைவில் அமைக்க உத்தேசித்துள்ளோம்.

இலங்கைக்கும் - இந்தியாவுக்கும் இடையில் தொலைத்தொடர்பு சேவையை விருத்தி செய்ய தலைமன்னார், இராமேஸ்வரம் ஆகிய இடங்களில் தொலைத்தொடர்பு கோபுரங்களை அமைக்கவிருக்கின்றோம். அந்தப் பணி முடிவடைந்ததும், அக்கோபுரங்கள் ஊடாக வடக்கு மக்களுக்குப் பயன் ஏற்படும் - என்றார் அவர்.

இந்த வைபவத்தில் ரெலிக்கொமின் யாழ் அலுவலக முகாமையாளர் என்.சரவணபவன் நன்றி தெரிவித்து உரையாற்றினார். (ஐ-3)

### தொலைபேசி வசதிகள் விஸ்தரிப்பு!

# சுன்னாகம் பரிவர்த்தனை நிலையம் ஓகஸ்ட் மாதம் முதல் செயற்படும்



யாழ்ப்பாணம்,பெப்.15

சுன்னாகம் தொலைத் தொடர்புப் பரிவர்த்தனை நிலையம் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் இயங்கும் என்று ரெலிக்கொம் வலைப்பின்னல் பிரிவுத தலைவர் கிறிஸ்டி அல்விஸ் தெரிவித்தார்.

யாழ். ரெலிக்கொம் அலுவலகத்தில் நேற்று நடந்த நிகழ்வில் பேசுகையில் அவர் இத்தகவலைத் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது:-

சுன்னாகத்தில் தொலைத் தொடர்புப் பரிவர்த்தனை நிலையம் ஒன்றை அமைப்பதற்கான உடன்பாடுகள் இவ்வாரம் கைச்சாத்திடப்படவுள்ளன.

அந்த நிலையம் ஊடாக 2 ஆயிரத்து 500 இணைப்புக்கள் வழங்கப்படும். இந்த நிலையத்தை அமைக்க 22 கோடியே 50 லட்சம் ஒதுககப்பட்டுள்ளது.

இந்த நிலையத்தின் முதல் பிரிவு எதிர்வரும் ஓகஸ்டில் இயங்கத் தொடங்கும். படிப்படியாக அது விஸ்தரிக்கப்படும்.

ரெலிக்கொம் மூலம் ஏனைய பிரதேசங்களுக்கு வழங்கப்படும் வசதிகள் வடக்கு மக்களுக்கு கிடைப்பதை உறுதிசெய்துள்ளோம்.

இந்தவருட முடிவுக்குள் யாழ்ப்பாணத்தில் புதிய நவீன வசதிகளுடன் பரிவர்த்தனை நிலையம் அமைக்கப்படும் - என்றார் அவர். (3)

### முறைப்பாடு கிடைத்த 4 மணிநேரத்துக்குள்

# தொலைபேசித் தடங்கல்களை சீர்செய்வதற்கு நடவடிக்கை



யாழ்ப்பாணம்,பெப்.15

குடாநாட்டில் தொலைபேசி இணைப்புக்களில் ஏதாவது தடங்கல் ஏற்பட்டால் 3 அல்லது 4மணி நேரத்தில் அவற்றைச் சீர்செய்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்று ரெலிக்கொம் நிறுவனத்தின் பிரதம செயற்பாட்டு அதிகாரி எஸ்.பி.றொற்றிக்கோ தெரிவித்தார்.

யாழ்.ரெலிக்கொம் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற பரிவர்த்தனை அங்குரார்ப்பண வைபவத்தில் உரையாற்றுகையில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் பேசுகையில் மேலும் கூறியதாவது:-

தொலைபேசிச் சேவை தொடர்பாகப் பல முறைப்பாடுகள் கிடைக்கின்றன. தொலைபேசிச சேவையில் தடங்கல் ஏற்பட்டால் அது தொடர்பாகப் பாவனையாளர் முறைப்பாடு செய்தால் முறைப்பாடு கிடைத்து மூன்று அல்லது நான்கு மணி நேரத்துக்குள் அதைச் சீராக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பாவனையாளர்களின் பிரச்சினைகளைக் கையாள, பாவனையாளர்களுக்கும் ரெலிக்கொம்முக்கும் இடையில் நட்புறவைக் கட்டி வளர்க்க ஏற்பாடுசெய்துள்ளோம்.

யாழ். பரிவர்த்தனை நிலையத்தில் சில மாற்றங்களைச் செய்துள்ளோம். இதன்மூலம் தொலைபேசிச் சேவையில் இருந்த நெருக்கடி நிலை நாளை செவ்வாய்க்கிழமையுடன் நீங்கும் - என்றார் அவர். (ஐ-3)

# கண்டாவளை மகாவித்தியாலயத்தில் மாவீரர்களின் நினைவாலயம் திறப்பு

பரந்தன்,பெப்-15

கண்டாவளைப் பிரதேசத்தைச் சேர்ந்த 46 மாவீரர்களின் நினைவாக கண்டாவளை மகா வித்தியாலயத்தில் நினைவாலயம் ஒன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது.

நேற்றுக்காலை 9.30 மணியளவில் வித்தியாலய அதிபர் சி.சிறிதரன் தலைமையில் இந்த நிகழ்வு நடைபெற்றது.

கிளிநொச்சி வலயக் கல்விப்பணிப்பணிப்பாளர் ப.அரியரத்தினம், கண்டாவளைக் கோட்டக் கல்விப் பணிப்பாளர் குலராஜசிங்கம் ஆகியோர் விளக்கேற்றினர்.

பொதுச்சுடரை கடல் உணவு வாணிபத்துறை பொறுப்பாளர் ந.மகேந்திரன் ஏற்றி னார். தமிழீழத் தேசியக் கொடியை சாள்ஸ் அன்ரனி படைப் பிரிவின் தளபதி நகுலன் ஏற்றினார். மாவீரர் நினைவாலயத்தை வட போர் முனைக் கட்டளைத் தளபதி கேணல் ஜெயம் திரை நீக்கம் செய்து வைத்தார். 46 மாவீரர்களினதும் திருவுருவப் படங்களுக்கு அவர்களது பெற்றோர் மற்றும் உரித்துடையவர்கள் மலர்மாலை அணிவித்து சுடர் ஏற்றினர். அதனைத் தொடர்ந்தும் மலர் வணக்கம் இடம்பெற்றது.

தொடர்ந்து நடைபெற்ற அரங்க நிகழ்வில் பொதுச் சுடரினை கேணல் ஜெயம் ஏற்றினார்.

அங்கு ஈகச்சுடர்களை கிளிநொச்சி மாவட்டக் கல்விக்கழகப் பொறுப்பாளர் ஜீவராஜ், விசுவமடுப் பிரதேச அரசியல் துறைப் பொறுப்பாளர் ரூபன், கிட்டுப் பீரங்கிப் படைப் பிரிவின் பயிற்சி ஆசிரியர் இளம்பரிதி மற்றும் போராளிகளான காண்டீபன், ஈழவன் ஆகியோர் ஏற்றி வைத்தனர். கண்டாவளை மகாவித்தியாலய மாணவியின் வரவேற்பு நடனம் இடம்பெற்றது. புளியம்பொக்கணை ஆலயகுரு சிவலோகநாதக குருக்கள் ஆசியுரை வழங்கினார்.

இந்த நிகழ்வில் மேற்படி 46 மாவீரர்களின் நினைவாக நூல் ஒன்றும் வெளியிட்டு வ்வைக்கப்பட்டது. இந்த நூலுக்கான வெளியீட்டுரையை ப.அரியரத்தினம் ஆற்றினார். மதிப்பீட்டுரைகளை கவிஞர் பொன்.காந்தன் அரங்கச் செயற்பாட்டுக்குழுவைச் சேர்ந்த விந்தன் ஆகியோர் நிகழ்த்தினர். இறுதியாக சிறப்புரைகளை தளபதி கேணல் ஜெயம், கிளிநொச்சி மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் பூவிழி ஆகியோர் நிகழ்த்தினர்.

(த-352-402)

## வழிகாட்டல் செயலமர்வு

புதுக்குடியிருப்பு,பெப்.15

கடந்த ஆண்டு ஜி.சீ.ஈ. சாதரணப் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுக்கான வழிகாட்டல் செயலமர்வு இன்று செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்குப் புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரியிலும், உடையார்கட்டு மகா வித்தியாலயத்திலும் நடைபெறவுள்ளது.

முல்லைத்தீவுக் கல்வி வலயத்தின் ஏற்பாட்டில் நடைபெறவுள்ள இந்தச் செயலமர்வில் ஜி.சீ.ஈ. உயர்தரத்தில் கற்கவிருக்கும் பாடத்துறையைச் தெரிவு செய்வதற்கான வழிகாட்டல்கள் வழங்கப்படும். (எ-353-202)

## மெய்வன்மைப் போட்டி

யாழ்ப்பாணம்,பெப்.15

யாழ்.சென்பற்றிக்ஸ் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி நாளை புதன் கிழமை பிற்பகல் 2 மணியளவில் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

சென்பற்றிக்ஸ் கல்லூரியின் லண்டன் பழைய மாணவர் சங்கத்தின் உபபோசகர் டிலிப் திஸ்ஸ வீரசிங்க இந்தப் போட்டியில் பிரதமவிருந்தினராகக் கலந்துகொள்வார். (எ-190)

## 'பேபி - 81' பெற்றோரிடம்!

கல்முனை,பெப்.15

ஆழிப்பேரலை அனர்த்தத்தில் சிக்கி அநாதையான 'பேபி - 81' என்றழைக்கப்பட்ட குழந்தையின் உண்மையான பெற்றோர் கண்டறியப்பட்டு விட்டனர். நாளை குழந்தை அதனது பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டுவிடும்.

அந்தக் குழந்தையைத் தொடர்ச்சியாக உரிமை கோரிப் போராடி வந்த ஜெயராஜ் ஜெனிற்றா தம்பதிகளே குழந்தையின் உண்மைப் பெற்றோர் என்பது மரபணுச் சோதனையில் சந்தேகத்துக்கிடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து, கடந்த 7 வாரங்களாகத் தொடர்ந்த சர்ச்சை முடிவுக்கு வந்துள்ளது. குழந்தை மற்றும் பெற்றோரிடம் நடத்தப்பட்ட மரபணுப் பரிசோதனை அறிக்கை குழந்தையின் பெற்றோர் ஜெயராஜ் - ஜெனீற்றா தம்பதியினரே என்பதை உறுதிப்படுத்தியுள்ளது என கல்முனை நீதிமன்றப் பதிவாளர் எம்.எஸ். எம்.நஸீர் நேற்றுத் தெரிவித்தார்.

கடந்த 9 ஆம் திகதி கொழும்பிலுள்ள தனியார் மருத்துவமனையில் இந்த மரபணுப் பரிசோதனை நடத்தப்பட்டது. அதன் அறிக்கை கடந்த வெள்ளிக்கிழமை மாலை கல்முனை நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்பட்டது.

நேற்று இந்த வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்ட போது பரிசோதனை அறிக்கை பரிசீலிக்கப்பட்டது. அதன் பின்னர் வழக்கை நாளை புதன்கிழமைக்கு ஒத்திவைத்தார் நீதிவான். (எ-க)

உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி, தொலைநகல் — 222 2030, 222 2083, 222 3837.

# சுட்ட மண் ஆகிற்று சு.க.-ஜே.வி.பி.உறவு

ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்புக்குள் புகைந்துகொண்டிருந்த முரண்பாடுகள் அம்பலத்துக்கு வந்துவிட்டன. ஊடகங்களில் கசிந்துகொண்டிருந்த விவகாரம் உயர்மட்டத் தலைவர்களினால் பகிரங்கமாக உறுதிப்படுத்தப்பட்டு விட்டது.

ஆறு வருடகால ஆட்சிக்குத் தெரிவுசெய்யப்பட்ட ஐக்கிய தேசிய முன்னணி அரசை நான்கு வருடங்கள் முன்னதாகக் கலைத்து, ஆட்சிப்பீடத்தைக் கைப்பற்றுவதற்காக கூடாத கூட்டத்துடன் கூட்டுச்சேர்ந்தார் ஜனாதிபதி குமாரதுங்க. அதன் மூலம் நாட்டின் தேசியப் பிரச்சினைக்கு - இந்த நாட்டை பெரும் போரழிவுக்குள்ளும், பேரழிவுக்குள்ளும் தள்ளிய இனச்சிக்கலுக்கு - அமைதித்தீர்வு காணும் வரலாற்றுச் சந்தர்ப்பத்தை அவர் முடக்கினார்.

தனது சுயலாப அரசியலுக்காக - அதிகாரத்தைக் கைப்பற்றும் அவாவை நிறைவுசெய்வதற்காக - பௌத்த, சிங்கள மேலாண்மைப் போக்குடைய பேரினவாதிகளுடன் கைகோர்த்துக் கூட்டமைத்து, அவர்களோடு அதிகாரத்தைப் பகிர்ந்துகொண்டார். காலைச் சுற்றிய பாம்பு கடிக்காமல் விடாது என்று இப்பத்தியில் நாம் முன்னரே சுட்டிக்காட்டியது போன்று பேரினவாதப் பாம்பு இப்போது அவரைத் தீண்டத் துடிக்கிறது. அதைக் கழற்றிவிடப்பார்க்கிறார் அவர்.

அத்தனகலையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற பொது நிகழ்வு ஒன்றில் பகிரங்கமாக அவர் விடுத்த அறிவிப்பு இதனையே வெளிப்படுத்துகின்றது.

"தேசத்தை மீளக்கட்டியெழுப்புவதில் அரசுடன் இணைந்து செயற்பட விரும்பாதவர்கள் அரசிலிருந்து வெளியேறலாம்.

"உள்ளிருந்து என்னை விமர்சித்துக்கொண்டு, அரசுக்கு அபகீர்த்தி ஏற்படுத்துவதைவிட அவர்கள் ஒதுங்கி விடுவது நல்லது. அதனால் எமக்குப் பாதிப்பு ஏற்படப்போவதில்லை.

"தங்களுடைய இலக்குகளை அடையமுடியாமல் போனதால்தான் அவர்கள் அரசுக்குள்ளிருந்து கொண்டு எமது காலை வாரிவிடும் செயற்பாடுகளில் இறங்கியிருக்கின்றார்கள். அவர்கள் பூச்சாண்டி காட்டத்தேவையில்லை. அவர்கள் போக விரும்பினால் அரசிலிருந்து போய்விடலாம்.

"புலிகளின் தலைவர் பிரபாகரனுடன் அரசு இணக்கத்துக்கு வரவிருந்த சமயத்தில், அந்த உடன்பாட்டில் இருந்த ஒரு வார்த்தையைக் காட்டி அரசை விட்டு வெளியேறிவிடுவோம் என அவர்கள் எச்சரிக்கின்றார்கள்.

"இது ஒரு கேலிக்கூத்தான விடயம். இந்தவகையில் செயற்பட்டு நாம் நாட்டை முன்னேற்றமுடியாது. புலிகளுடனான ஒப்பந்தத்தில் ஒரு வார்த்தையைக் காட்டி அவர்கள் சண்டை பிடிக்கின்றார்கள். அவர்கள் விரும் பினால் அரசை விட்டு வெளியேறலாம்"

- இப்படி முழங்கியிருக்கின்றார் ஜனாதிபதி குமாரதுங்க. அதன் மூலம் ஜே.வி.பியை எட்டி உதைத்துக் கூட்டிலிருந்து வெளியே தள்ளமுயன்றிருக்கிறார் அவர்.

அரசுடன் இணக்கநிலை ஒன்று எட்டப்படுவதில் பேரினவாதப் போக்குக் கொண்ட ஜே.வி.பியே முட்டுக்கட்டை, தடங்கல் என்பதை விடுதலைப் புலிகளின் தலைவர்கள் - அரசியல் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன், மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம் உட்படத் தமிழர் தரப்பில் அனைவருமே - திரும்பத் திரும்ப வலியுறுத்திச் சுட்டிக்காட்டி வந்தனர்.

இலங்கைக்கு உதவும் நாடுகள் சமூகத்தின் நான்கு இணைத் தலைமை அமைப்புகளில் நோர்வே தவிர்ந்த மூன்றும் - அமெரிக்கா, ஜப்பான், ஐரோப்பிய ஒன்றியம் ஆகிய மூன்றும் - கூட இதையே வெளிப்படையாகச் சுட்டிக்காட்டியிருந்தன.

அதனை இப்போது அந்த ஜே.வி.பியோடு கூட்டு வைத்த கட்சியின் தலைவியே - நாட்டின் தலைவியே - உறுதிப்படுத்தி, ஊர்ஜிதப்படுத்தியிருக்கின்றார் அவ்வளவே!

ஜே.வி.பியைப் பொறுத்தவரை இன்று அதற்கு இரண்டும்கெட்டான் நிலைமை. அரசுத் தரப்பிலும் இல்லை; எதிர்க்கட்சி அணியிலும் இல்லை என்ற திரிசங்கு சொர்க்கநிலை.

ஜனாதிபதி சந்திரிகா அரசின் ஆட்சியைக் கலைப்போம்; கவிழ்ப்போம் என்று மிரட்டித் தொடர்ந்தும் காரியம் சாதிக்கமுடியாத சூழல். அந்த மிரட்டல் நாடகத்திற்கு சிறிதும் இடங்கொடுக்காத விதத்தில் தூக்கி எறிந்து பேசி இருக்கிறார் ஜனாதிபதி.

அரசை விட்டு வெளியேபோய், அரசைக் கவிழ்ப்போம் என்று ஜே.வி.பி. சிந்தித்தாலும் அரசு கவிழுமா என்பது கேள்விக்குறியே. ஆட்சியிலுள்ள அரசைக் கவிழ்த்து புதிய அரசை உடனே அமைக்கும் தயார் நிலையில் பிரதான எதிர்க்கட்சியான ஐ.தே.கட்சியும் இல்லை.

அரசை விட்டு ஜே.வி.பி. வெளியே போனாலும் அக்கட்சிக்கு அதன் பின்னர் சாதிக்கக்கூடியது ஏதுமில்லை - இனவாதக் காட்டுக் கூச்சலை எழுப்புவதைத் தவிர!

எனவே, தூக்கி எறிந்து பேசிய ஜனாதிபதியின் - கூட்டமைப்புத் தலைவரின் - போக்குத் தொடர்பாக அடுத்து என்ன நடவடிக்கை எடுப்பது என்று தெரியாமல் குழப்பித் திணறிப்போய் நிற்கிறது ஜே.வி.பி.

எது எப்படியென்றாலும் ஜனாதிபதியின் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி - ஜே.வி.பி. ஒட்டுறவு, இப்போதைய கசப்பால் எழுந்த சூடு காரணமாக, சுட்டமண் ஆகி விட்டது. அது இனி ஒட்டுவது சாத்தியமல்ல.

# மா தட்டுப்பாடு ஓரளவு நீங்கியபோதும் சிற்றுண்டிகளின் விலை குறையவில்லை

அரியாலை,பெப்.15

குடாநாட்டில் கோதுமை மாவுக்கு நிலவி வந்த தட்டுப்பாடு ஓரளவு நீங்கி விட்டது.

கூட்டுறவுக் கடைகளிலும் ஏனைய வர்த்தக நிலையங்களிலும் மாவினைப் பெற்றுக் கொள்ளக் கூடியதாக உள்ளது.

பேக்கரிகளுக்கும் மா சீராக விநியோகிக்கப்படுவதால் பாண் தயாரிப்பும் முழுமையாக இடம்பெற்றுவருகிறது. ஆனால், கோதுமை மாவுக்குப் பலத்த தட்டுப்பாடு நிலவி வந்த சமயத்தில் திடீரென அதிகரிக்கப்பட்ட சிற்றுண்டிகள் மற்றும் உணவு வகைகளின் விலைகள் குறைக்கப்படாமல் இப்போதும் அப்படியே விற்பனை செய்யப்படுகின்றன என்று பொதுமக்கள் பலரும் சுட்டிக்காட்டுகின்றனர்.

'பிறிமா' நிறுவனம் மாவிநியோகத்தைக் கட்டுப்படுத்தியதால் குடாநாட்டில் மாவுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டது. இதனால் தேநீர்க் கடை உரிமையாளர்களும், உணவுச்சாலைகளை நடத்துவோரும் உடனடிப் பாதிப்புகளைச் சந்தித்தனர். மா தட்டுப்பாட்டைக் காரணம் காட்டி சிற்றுண்டிகளின் விலைகள் மளமளவென உயர்த்தப்பட்டன. சாதாரண வடையில் இருந்து கொத்துரொட்டி வரை விலைகள் அதிகரிப்புச் செய்யப்பட்டன. அந்தச் சமயத்தில் அதனைப் பாவனையாளர்கள் ஏற்றுக் கொண்டார்கள்.

ஆனால், சிற்றுண்டிகளின் விலைகள் குறைக்கப்படவில்லை.

வர்த்தகர்களின் இந்த நடவடிக்கை பொதுமக்கள் மத்தியில் கடும் விசனத்தை ஏற்படுத்தி உள்ளது.

பாவனையாளர், பாதுகாப்புச் சங்கங்கள் இது விடயத்தில் கவனம் எடுக்க வேண்டும் என வலியுறுத்தப்பட்டுள்ளது. (ஐ-17)

# இறால் இனங்கள் அழியாமல் காப்பதற்கு 'ட்றோலர்' முறையைத் தடுப்பது அவசியம்

## கடற்றொழில் சம்மேளனத் தலைவர் கூறுகிறார்

குருநகர்,பெப்.15

எமது கடற்பரப்பில் இறால் இனத்தை அழியாமல் பாதுகாப்பதற்கு ட்றோலர் தொழில் தடை அவசியமானதாகும். இப்படித் தெரிவித்தார் வடமாகாணக் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சமாசங்களின் சம்மேளனத் தலைவர் சின்னையா நவரட்ணம்.

வடமாகாணக் கடற்பரப்பில் ட்றோலர் மூலம் தொழில் செய்வது தடைசெய்யப்பட்டு இத்தொழிலில் ஈடுபட்டவர்களுக்கு மாற்றுத் தொழிலில் ஈடுபடுவதற்கான வலைகள் மற்றும் உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இத் தொழிலாளர்கள் தற்போது நைலோன் தொழில்களில் ஈடுபட்டுள்ளார்கள். நைலோன் வலைமூலம் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டுவரும் குருநகர் தொழிலாளர்கள் சிலர் இத் தொழில் செய்வதில் அதிருப்தி அடைந்து காணப்படுவதுடன், மீண்டும் ட்றோலர் தொழில் செய்வதிலேயே தமது விருப்பத்தை காட்டியுள்ளனர்.

இது தொடர்பாக வடமாகாணக் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சமாசத்தின் சம்மேளனத் தலைவர் சி.தவரட்ணம் உதயனுக்குத் தெரிவித்த கருத்துக்கள் வருமாறு:-

எமது மீனவர்கள் ட்றோலர் வலை மூலம் தொழில் செய்வதால் கடற்பரப்பில் உள்ள இறால் இனங்கள் அழிந்து வருகின்றன. இந்த இறாலைப் பிடிப்பதற்கே மீன்கள் தேடிவருகின்றன.

ட்றோலர் தொழிலை தற்காலிகமாக குறைந்தது மூன்று வருடங்களுக்கு இடைநிறுத்தி னாலேயே இறால் இனம் வளர்ச்சியடையும் என்ற எமது பல்கலைக்கழக கடற்றொழில்துறை சார்ந்தவர்களின் ஆராய்ச்சிக்கிணங்கவே ட்றோலர் தொழில் இடை நிறுத்தியுள்ளோம்.

இவ்வாறு தடைசெய்யப்பட்டால் எமது கடற்பரப்பில் மீன் இனங்கள் முற்றாக அழிந்து போய்விடும்.

வலைகள் களவாடப்படுவதையும் அறுக்கப்படுவதையும் தடைசெய்யவேண்டுமாயின் இத் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களின் வலை விவரங்களைச் சம்பந்தப்பட்ட கடற்றொழிலாளர் சங்கங்கள் பதிந்து வைக்கவேண்டியது அசியம். இது இருந்தால் ஏனைய சங்கங்களுடனும் தொடர்பு கொண்டு இப்பிரச்சினைக்கு பேச்சு மூலம் தீர்வுகாண முடியும்.

இந்திய மீனவர்கள் எமது கடற்பரப்பில் ஊடுருவி மீன்பிடிப்பது தொடர்பாக நாம் தமிழ்நாட்டிலுள்ள கடற்றொழிலாளர் சங்கங்களுடன் பேச்சு நடத்தியுள்ளோம்.

அவர்கள் எமது கஷ்டங்களை உணர்ந்துள்ளார்கள். இது தொடர்பான கலந்துரையாடலில் தொடர்ந்து ஈடுபட முயற்சித்து வருகிறோம் என்றார். (த-51)

# உலக வங்கியின் உதவியுடன் கிளிநொச்சியில் 376 வீடுகள்!

கிளிநொச்சி மாவட்டத்தில் மீள்குடியமர்ந்த மக்களுக்கென உலக வங்கியின் வீடமைப்புத் திட்டத்தின் கீழ் 4 பிரதேச செயலர் பிரிவுகளில் 376 வீடுகள் அமைக்கப்படவுள்ளன.

கண்டாவளைப் பிரதேச செயலர் பிரிவில் 92 வீடுகளும் கரைச்சிப் பிரதேச செயலர் பிரிவில் 184 வீடுகளும் பூநகரிப் பிரதேச செயலர் பிரிவில் 58 வீடுகளும் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் பிரிவில் 42 வீடுகளும் அமைக்கப்படவுள்ளன.

இத்திட்டம் அவ்வப்பகுதி உதவி அரச அதிபர்களின் ஒத்துழைப்புடனும் உள்ளூர் அரச சார்பற்ற நிறுவனங்களின் பங்களிப்புடனும் செயற்படுத்தப்படவுள்ளதாக கிளிநொச்சி அரச அதிபர் தி. இராசநாயகம் தெரிவித்துள்ளார்.

தமிழர் புனர்வாழ்வுக் கழகம், தேசிய வீடமைப்பு அதிகாரசபை என்பனவும் பயனாளிகளுக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் எனவும் அவர் கேட்டுள்ளார். (த-352-202)

# வெகுஜனப் போரில் குதிக்க கடற்றொழிலாளர்கள் முடிவு

கரவெட்டி,பெப்.15

யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசங்களின் சம்மேளனத்தின் ஏற்பாட்டில் எதிர்வரும் 23ஆம் திகதி புதன்கிழமை வெகுஜனப் போராட்டம் ஒன்று நடைபெறவுள்ளது.

2002ஆம் ஆண்டில் புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்தான பின்னர் எமது மக்களுக்கு எவ்வித சலுகைகளும் அரசினால் வழங்கப்படாததைக் கண்டித்து -

சுனாமிப் பேரலையால் பாதிக்கப்பட்ட கடற்றொழிலாளர்களுக்கு உதவிகள் வழங்கப்படவேண்டும் என்பதை வலியுறுத்தியும் -

அனர்த்தகால செயலணிக்குழுவை அரசு இணைத்துக் கொள்ளவேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்தும் -

கிழக்குப் படுகொலைகளைக் கண்டித்தும் - இந்த வெகுஜனப் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

இந்தப் போராட்டத்தில் யாழ். மாவட்டத்திலுள்ள சகல பொது அமைப்புகளையும் ஒன்றிணையுமாறு சம்மேளனம் அழைப்பு விடுத்துள்ளது. (த-70-220)

# அனர்த்த நிவாரணப் பொருள்களுக்கு தீர்வைகளை நீக்கப் பிரதமர் உறுதி!

## நாடாளுமன்ற உறுப்பினர் ஈழவேந்தன் தகவல்

யாழ்ப்பாணம்,பெப்.15

வெளிநாடுகளிலிருந்து அனுப்பப்படும் சுனாமி அனர்த்த நிவாரணப் பொருள்களுக்கு சகல விதமான தீர்வைகளையும் நீக்குவதாகப் பிரதமர் மகிந்த ராஜபக்ஷவும், வர்த்தக நுகர்வோர் அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளேயும் உறுதியளித்துள்ளனர் என்று தமிழ்க்கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் மா.க.ஈழவேந்தன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக ஈழவேந்தன் எம்.பி. விடுத்திருக்கும் செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

கடற்கோளினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கென வெளிநாடுகளிலிருந்து அனுப்பப்படும் பொருள்கள் மீது அரசால் வரி விதிக்கப்பட்டிருப்பது பாதிக்கப்பட்ட மக்களுக்கு மேலும் பேரின்னலை ஏற்படுத்துகின்றது என்றும், அதை நீக்க உதவுமாறும் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் அரச சார்பற்ற நிறுவனங்களும் வேண்டுகோள் விடுத்துள்ளன.

இதனையொட்டி நாடாளுமன்றில் அவசர காலச்சட்ட விவாதத்தின் போது நான் எழுப்பிய வினாவுக்கு விடையாக வர்த்தக நுகர்வோர் அமைச்சர் பெர்னாண்டோபுள்ளே 'கடற்கோள் நிவாரணப் பொருள்கள் மீது விதிக்கப்பட்டிருந்த வரிகள் முற்றாக நீக்கப்படுவதற்கு திறைசேரியுடன் தொடர்புகொண்டு அனைத்து ஒழுங்குகளும் மேற்கொள்ளப்படும்' என்று கூறினார்.

பிரதமர் மகிந்த ராஜபக்ஷ நிவாரணப் பொருள்கள் அனைத்தின் மீதும் வரிகளை அகற்றும்படி நான் அறிவித்துள்ளேன் என்று கூறினார்

- என்று தெரிவித்துள்ளார். (ந)

### நாளை

மாசி 04
புதன்கிழமை
(16.02.2005)
திதி : அட்டமி
முன்னிரவு 10.50 வரை
நட்சத்திரம் : கார்த்திகை
முன்னிரவு 10.27 வரை
கார்த்திகை விரதம்
சுபநேரம் : 05.03- 06.33
ராகுகாலம்: 12.33- 02.03
(யாவும் பழைய நேரப்படி)

### உதயவாக்கு

பல்வலி கொண்டவனுக்கு அவனைத் தவிர உலகில் மற்ற எல்லோருமே ஆனந்தமாக வாழ்வதாகத் தோன்றும்.

- பெர்னாட்ஷா

**கணனி மூலம்**
**எந்திரவியல் வரைதல் பயிற்சி**

`எந்திரவியல், தொழில் நுட்பத்துறையில் கல்வி பயிலும், தொழில்புரியும் துறைசார் வல்லுநர்களுக்கான படம் வரையியல் பயிற்சிகள் குறுகிய காலத்தில் வழங்கப்படுகின்றது. பிரத்தியேகமாக, குழுக்களாகப் பயிற்சி பெறவிரும்பும் மேற்படி துறை சார்ந்தோர் தொடர்புகளை மேற்கொள்ளலாம்.

தொடர்பு இல. 0776055574
(42094) கோண்டாவில். (21-19-42)


# ஏழாலையில் வீதிகள் திருத்தப்படவில்லை

வலிகாமம் தெற்கு,பெப்.15

ஏழாலை பல நோக்கு கூட்டுறவுசசங்க 25ஆம் இலக்கக்கிளை, ஏழாலை சைவ சன்மார்க்க வித்தியாசாலை ஆகிய இடங்களிலிருந்து செல்லும் நாக்கியம்புலம் வீதி நீண்ட காலமாக புனரமைப்புச் செய்யப்படாமல் உள்ளது. இதனால், பொதுமக்கள் போக்குவரத்துச் செய்வதற்கு சிரமபடுகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேபோல ஏழாலையில் உள்ள சாளம்பைக்குள வீதியும் புனரமைபபுச் செய்யப்படவில்லை. இவற்றைப் புனரமைப்புச் செய்து தருமாறு ஏழாலை வாழ்மக்கள் சுன்னாகம் பிரதேச செயலாளரைக் கேட்டுள்ளார்கள். (து-152)


## நல்லூர் வணிகர் கழகம்
## பொதுக்கூட்டம் - 2005

நல்லூர் வணிகர் கழகத்தின் 2005ஆம் ஆண்டுக்கான பொதுக்கூட்டமும். புதிய நிர்வாகசபைத் தெரிவும் எதிர்வரும் 13.03.2005 காலை 9.30 மணிக்கு நடைபெற இருப்பதால் நல்லூர் வணிகர் கழக சகல வர்த்தகர்களையும் குறித்த நேரத்திற்குத் தவறாமல் சமுகம் தரும்படி அன்புடன் கேட்டுக் கொள்கிறேன.

காலம்: 13.03.2005 ஞாயிற்றுக்கிழமை
நேரம்: மு.ப.9.30 மணி (புதியநேரம்)
இடம்: செங்குந்தா இந்துக்கல்லூரி, கல்வியங்காடு.

செயலாளர்,
நல்லூர் வணிகர் கழகம.
(42098)(21-19-42)



# NOTICE

Registration of Contractors
For Construction

**Sri Lanka Red Cross Society**

All ICTAD registered Contractors who are interested in working with rehousing programme in Tsunami affected areas are requested to register with Sri Lanka Red Cross Society giving their Category of Registration, Past experience and with all particulars about the company before 25th of February 2005. Registration fee Rs.5000/= non-refundable.

All information regarding construction could be obtained from the respective and relevant District Branches (Kilinochchi, Mullaitivu and Jaffna) and the Non refundable District could also be paid at the same respective Branch.

Act.Director General,
Sri Lanka Red Cross Society,
*No.307 2/1, T.B.Jaya Mawatha,*
*Colombo 10.*
(C-40963)


# புதிய அதிபர் நியமனம்

கைதடி,பெப்.15

கைதடி விக்கினேஸ்வரா வித்தியாலயத்தின் அதிபராக திரு.எஸ்.ஞானலிங்கம் அவர்கள கடந்த முதலாம் திகதி தொடக்கம் பதவி ஏற்றுள்ளார்.

இவர் முன்னர் கைதடி குருசாமி வித்தியாலயத்தின் அதிபராகக் கடமைபுரிந்தவர்.(து-75)

# வலி.கிழக்கில் ஆதனவரி அதிகரிப்பு

அச்சுவேலி,பெப்.15

வலி.கிழக்கு பிரதேச சபையின் நிர்வாகத்திற்கு உட்பட்ட பிரதேசத்தில் ஆதனவரி வீதம் அதிகரிக்கப்பட்டுள்ளது. திடீரென ஆதன வரிவீதம் அதிகரிக்கப்பட்டது தொடர்பாக வரியிறுப்பாளர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

ஐந்து வீதத்தில் இருந்து பத்து வீதமாக வரி அதிகரிப்புச் செய்யப்பட்டுள்ளது.

வலி.கிழக்குப் பிரதேச சபையின் நிர்வாகதிற்கு உட்பட்ட பிரதேசத்தில் உள்ள அச்சுவேலி, புத்தூர், நீர்வேலி, கோப்பாய், உரும்பிராய் ஆகிய ஐந்து உப அலுவலகங்களுக்கும் ஆதனவரி (சோலைவரி) அறவீடு அதிகரிப்புத் தொடர்பான அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. வரி அதிகரிப்புத் தொடர்பாகப் பொருத்தமான முறையில் வரியிறுப்பாளர்களுக்கு விளக்கமான அறிவுறுத்தல் வழங்கப்படாமலும் பிரதேச சபைகளிடையே மாறுபட்ட வீதத்தில் ஆதன வரி அறவிடப்படுவதும் வரியிறுப்பாளர்களை குழப்பத்திற்கு உள்ளாக்கிக் கவலைகொள்ளச் செய்திருப்பதாகக் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த வரி அதிகரிப்பைக் குறைத்து பழைய நிலைக்கு கொண்டு வருமாறு வலி.கிழக்கு பிரதேசசபைக்கு பொது ஸ்தாபனங்கள் வேண்டுகோள் விடுத்துள்ளன. (து-11)


**கேணல் சங்கர் உடல் வலுவூட்டல் நிலையம**
Colonel Shankar Mega Gym.
Body Care & Fitness Centre
**யாழ்.சாலை கிளிநொச்சி.**

எதிர்வரும் 19-02-2005 முதல் செயற்படவுள்ள மேற்படி நிலையத்தில் பயிற்சி பெற விரும்புபவர்கள் பயிற்றுநர் திரு.வீ.தேவராஜாவுடன், இளையோர் செயற்பாட்டு நிறுவன அலுவலகத்தில் தொடர்புகொண்டு விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுக்கொள்ளவும்.

"வலுவான உடலே. வாழ்வின் முதன்மையான சொத்து"

(C/40965) (21-19-42)


## மரண அறிவித்தல்

### நடராசா நற்குணசிங்கம்
### (சிவலிங்கம் பத்தர்)



அச்சுவேலி வடக்கு. அச்சுவேலியைச் சேர்ந்த நடராசா நற்குணசிங்கம் அவர்கள் (13.02.2005) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் நடராசா - மனோன்மணி தம்பதியினரின் அன்பு மகனும் கமலாதேவியின் அன்புக் கணவரும் மஞ்சுதா, பிரவினா, லஷ்சனா, சிந்தனா ஆகியோரின் அன்புத் தந்தையும் பவுணராஜா, திருமலர் ஆகியோரின் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அச்சுவேலி வடக்கு, அச்சுவேலி.
தகவல்:
மனைவி, பிள்ளைகள்.
(42700)

# நெஞ்சை விட்டு நீங்காத நினைவலைகள்

## முதலாம் ஆண்டு

தோற்றம் 28 - 05 - 1923
மறைவு 27 - 02 - 2004



### அமரர் மயில்வாகனம் மாணிக்கதியாகராசா

திதி: 15.02.2005

எங்கள் ஆருயிர் தெய்வமே ஐயா!
ஓராண்டு ஓடி மறைந்தாலும்
ஒரு நாளும் உங்கள் நினைவினின்று நீங்க முடியவில்லை!
எங்கள் தந்தையாக இறைவன் உங்களைத் தந்தார்

## பத்தாம் ஆண்டு

தோற்றம் 05 - 10 - 1970
மறைவு 14 - 02 - 1995



### திருமதி S.சுதாநிதி

திதி: 14.02.2005

அன்பாக எங்களை வழி நடத்தினீர்கள் இறுதியில்
எங்களைப் பிரிந்து இறைவனடி சேர்ந்தீர்களே?
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனிடம் வேண்டுகின்றோம்.
ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!

நல்லூர்.
பிரிவால் துயருறும்:
**குடும்பத்தினர்.**

# ஈராக் பொதுத்தேர்தல் முடிவுகளில் ஷியா முஸ்லிம் கட்சிகள் முன்னணியில்

## அடுத்த சில தினங்களில் உத்தியோகபூர்வ முடிவுகள் வெளிவரும்

ஈராக்கியர்களின் மதத் தலைவர் அயத்துல்லா அலி சிஸ்ரானியின் அனுசரணையுடன் தேர்தலில் போட்டியிட்ட ஷியா முஸ்லிம் வேட்பாளர்கள் குழு ஈராக்கியத் தேர்தலில் வெற்றியீட்டியுள்ளது.

கடந்த ஜனவரி 30ஆம் திகதி இடம்பெற்ற தேர்தலில் பதிவான 8.5 மில்லியன் வாக்குகளில் ஏறக்குறைய 50 சதவிகித வாக்குகளை இக்கட்சி பெற்று வெற்றியீட்டியுள்ளது.

குர்தீஷ் கட்சிகளின் கூட்டணி, பதிவான மொத்த வாக்குகளில் 25 சதவீத வாக்குகளைப் பெற்றுள்ளது.

ஏற்கனவே, 'சன்னி' முஸ்லிம் கட்சியினர் இத்தேர்தலைப் பகிஷ்கரித்துள்ள நிலையில், தேர்தலில் போட்டியிட்டு வெற்றியீட்டிய குர்தீஷ் கட்சிகளின் கூட்டணி சகல ஈராக்கியர்களும் அரசைப் பிரதிநிதித்துவப்படுத்த வேண்டுமென வேண்டுகோள் விடுத்துள்ளது.

இதனிடையே அடுத்த இரண்டு தினங்களின் பின்னரே தேர்தல் முடிவுகள் உத்தியோகபூர்வமாக உறுதிப்படுத்தப்படுமென அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

ஷியா முஸ்லிம் கட்சித் தலைவர்கள் தாம் அரசியல் பாதையில் இயங்க முனையப் போவதாகத் தெரிவித்துள்ளனர்.

ஈராக்கில் இடம்பெற்ற தேர்தல் முறையான வகையிலும், திருப்தியளிக்கும் வகையிலும் இடம்பெற்று முடிந்துள்ளதாக அமெரிக்க ராஜாங்கத் திணைக்களம் தேர்தல் பற்றிய தனது கருத்தை வெளியிட்டுள்ளது. அத்தோடு, தேர்தலில் போட்டியிட்டுத் தோல்வியடைந்தோரையும் தேர்தலைப் பகிஷ்கரித்தோரையும் அரசுக்கு உதவும் வகையில் செயற்பட முன்வருமாறும் வேண்டுகோள் விடுத்துள்ளது.

ஐக்கிய ஈராக்கிய கூட்டணியில் பிரதம பங்குவகிக்கும் ஷியா முஸ்லிம் கட்சி புதிய பிரதமர் பதவிக்கு தகுதிவாய்ந்த தலைவரொருவரைப் பிரதமர் தெரிவுக்காக நிறுத்த முடிவு செய்யவுள்ளது.

275 உறுப்பினர்களைக் கொண்ட தேசிய அவையில் குர்தீஷ் கட்சிகளின் கூட்டணி முக்கிய அதிகாரச் சமநிலை வகிப்பதை எதிர்பார்ப்பதாகவும் அத்துடன், ஜனாதிபதிப் பதவியைத் தமது கூட்டணிக்குப் பெற்றுக்கொள்ள விரும்புவதாகவும் செய்திகள் வெளிவந்துள்ளன.

ஈராக்கிய பொதுமக்கள் நம்பிக்கைக்கும் ஜனநாயக எதிர்காலத்துக்குமான புதிய வழியில் பிரவேசிக்க இத்தேர்தல் வழிவகுத்துள்ளது என ஐக்கிய இராச்சியத்தின் வெளிநாட்டமைச்சர் ஜாக்ஸ்ரோ தெரிவித்துள்ளார்.

இடம்பெற்ற தேர்தல் தொடர்பான முறைப்பாடுகளை மேற்கொள்ள இன்னும் இரண்டு நாள் அவகாசமே உள்ளது. அக்கால எல்லை முடிவில் தேர்தல் தொடர்பான முறையீடுகள் எதுவும் மேற்கொள்ளப்படாவிட்டால் உத்தியோகபூர்வமாகத் தேர்தல் முடிவு வெளியிடப்படும்.

இத்தேர்தலில் ஈராக்கிய மொத்த வாக்காளரில் 58வீதமானோர் வாக்களித்திருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

111அங்கத்தவர்களைக் கொண்ட 'கேட்' நாடாளுமன்றம் மற்றும் 18மாகாண சபைகளுக்குமான தேர்தல் முடிவுகள், தேர்தல் ஆணைக்குழு உறுப்பினர்களான பரீட் அயார் மற்றும் அடெல் அல்-லாம் ஆகியோரால் கடந்த ஞாயிறு பக்தாத்தில் இடம்பெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் வெளியிடப்பட்டது. உத்தியோகபூர்வ முடிவுகள் இன்னும் இரண்டு நாள்களில் வெளியாகும். (8)

# பிரபல பாடகி திருமணம்

அமெரிக்காவின் பிரபல பாடகி கிறிஸ்டினா அகலீராவுக்கும் ஜோர்டான் பிராட்மேன் என்பவருக்கும் இடையே நீண்டநாள் காதல். இந்தக் காதல் இப்போது கைகூடிவிட்டது. இருவரும் திருமணம் செய்துகொள்ளப்போகிறார்கள். இருவரும் மோதிரம் மாற்றிக்கொண்டு நிச்சயம் செய்து இருக்கிறார்கள். (8)

# ஆப்கானிஸ்தான் செல்கிறார் நட்வர்சிங்

புதுடில்லி,பெப்.15

வெளியுறவு அமைச்சர் நட்வர்சிங், மூன்று நாள் பயணமாக ஆப்கானிஸ்தான் மற்றும் பாகிஸ்தானுக்கு இன்று செல்கிறார்.

ஆப்கானிஸ்தானுக்கு இன்று செல்லும் நட்வர்சிங், அந்நாட்டு பிரதமர் ஹமீத் கர்சாய், வெளியுறவு அமைச்சர் அப்துல்லா ஆகியோரைச் சந்தித்துப் பேசுகிறார். ஆப்கானிஸ்தான் உள்கட்டமைப்பு உட்படப் பல்வேறு விடயங்கள் குறித்து விவாதிக்க உள்ளார். ஆப்கான் விஜயம் முடிந்ததும் 16ஆம் மற்றும் 17ஆம் திகதிகளில் பாகிஸ்தானுக்குச் சுற்றுப்பயணம் மேற்கொள்கிறார். அங்கு பாக்.வெளியுறவு அமைச்சர் முகமது கிரி உட்படப் பல முக்கிய தலைவர்களைச் சந்தித்துப் பேசவுள்ளார். ஸ்ரீநகர் -முசாபர்பாத் இடையேயான பஸ் போக்குவரத்தைத் தொடங்குவது குறித்தும் அவர் பேச்சு நடத்துவார் எனத் தெரிகிறது. (8)

# இளவரசர் சாள்ஸுக்கு புதிய நெருக்கடி; மறுமணத்துக்குத் தேவாலயங்கள் எதிர்ப்பு!



லண்டன்,பெப்.15

காதலி கமீலாவைத் திருமணம் செய்துகொள்ள முடிவெடுத்த இங்கிலாந்து இளவரசர் சாள்ஸுக்குப் புதிய பிரச்சினை எழுந்துள்ளது.

இங்கிலாந்து தேவாலயங்களில் ஒரு பிரிவு, அவரது மறுமணத்துககு எதிர்ப்புத் தெரிவித்துள்ளது. மன்னராவது அல்லது மங்கையைக் கரம் பற்றுவது இரண்டில் ஒன்றைத் தேர்வு செய்யுமாறு தேவாலயங்கள் நிர்ப்பந்தம் செய்துள்ளன.

இங்கிலாந்தைப் பொறுத்தவரை யார் மன்னரோ, அவர்தான் நாட்டில் உள்ள தேவாலயங்களுக்குப் பதவி வழித் தலைவராகிவிடுவார். அப்படிப்பட்டவர் மறுமணம் செய்துகொள்ளக் கூடாது என்பது ஒருதரப்பினர் கருத்து.

தற்போது இளவரசராக இருக்கும் சாள்ஸ் அடுத்த மன்னராகப் பொறுப்பேற்றால், அவர் தான் தேவாலயங்களுக்கெல்லாம் தலைவராகக் கருதப்படுவார்.

இப்படிப்பட்ட சூழலில், தேவாலயங்களில் முடிவெடுக்கும் உயர் அமைப்பான 'செனட்' உறுப்பினர்களில் கால் வாசிக்கும் அதிகமானோர், விவாகரத்துப் பெற்று மறுமணம் செய்த ஒருவர் தலைமைப் பதவியில் அமர்வதை விரும்பவில்லை.

'செனட்' அமைப்பின் கூட்டம் அடுத்தவாரத்தில் நடைபெறும்போது, பிரச்சினை பெரிதாக வெடிக்கும் எனக் கருதப்படுகிறது.

விவாதிக்கப்படும் பட்டியலில் இவ்விடயத்துக்கு இடம் தரப்படவில்லையென்றாலும்கூட, இவ்விடயம் குறித்து அவசர விவாதம் நடத்தப்படவேண்டும் என மூன்று மூத்த உறுப்பினர்கள் கோரியுள்ளனர். ஆனால், இதை கான்டர்பெர்ரி பேராயர் ரோவன் வில்லியம்ஸ் நிராகரித்துவிட்டார்.



எதிர்கால மன்னராகும் சாள்ஸுக்குக் கான்டர்பெர்ரி பேராயர்கூடத் திருமணம் செய்து வைக்க முடியாது என்ற கருத்தும் நிலவுகிறது.

சாள்ஸின் திருமண அறிவிப்பு கடந்த வியாழக்கிழமை மேற்கொள்ளப்பட்டபோது, தேவாலயங்கள் வரவேற்றன. ஆனால், தற்போது நிலைமை மாறியுள்ளது.

இந்நிலையில், இருதரப்பும் ஒற்றுமையாக இருப்பதே தேவாலயத்துக்கும் மன்னராட்சிக்கும் நல்லது எனக் கான்டர்பெர்ரி முன்னாள் பேராயர் கெரே கூறியுள்ளார். (8)

# பங்களாதேஷில் படகு விபத்து; 22 பேரைக் காணவில்லை!

டாக்கா,பெப்.15

பங்களாதேஷில் ஆற்றில் இரு படகுகள் மோதிக் கவிழ்ந்த விபத்தில் காணாமற் போன 22 பேர் நீரில் மூழ்கி உயிரிழந்திருக்கலாம் என்று அஞ்சப்படுகிறது.

பங்களாதேஷின் தெற்குப் பகுதி நகரமான குல்னா அருகேயுள்ள ரப்டா ஆற்றில் இந்த படகு விபத்து கடந்த சனிக்கிழமை நிகழ்ந்தது. விபத்துக்குள்ளான படகுகள் தண்ணீரில் மூழ்கின. அவற்றில் இருந்த 11 பேர் நீந்தி கரை சேர்ந்தனர். மேலும் 22 பேர் காணாமற் போனார்கள். அவர்கள் நீரில்மூழ்கி இறந்திருக்கலாம் என அஞ்சப்படுகிறது. (8)

# மோசமான சர்வாதிகாரிகள் பட்டியலில் பாகிஸ்தான் அதிபர் ஜெனரல் முஷாரப்



வாஷிங்ரன்,பெப்.15

உலகின் மோசமான சர்வாதிகாரிகள் பட்டியலில் பாகிஸ்தான் அதிபர் முஷாரப் இடம்பிடித்துள்ளார்.

உலகில் மோசமாக விளங்கும் சர்வதிகாரக் குணம் படைத்த ஆட்சியாளர்கள் யார்? என்ற விவரததை அமெரிக்க பிரபலப் பத்திரிகை வெளியிட்டு வருகிறது. ஆண்டு தோறும் வெளியிடப்படும் இந்தப் பட்டியலில் 10 தலைவர்கள் இடம்பெறுவார்கள்.

மனித உரிமை அமைப்புகளின் ஒத்துழைப்புடன் இந்தப் பட்டியல் தயாரிக்கப்படுகிறது.

இந்த ஆண்டுக்கான மோசமான சர்வாதிகாரிகள் பட்டியலில் பாகிஸ்தான் அதிபர் முஷாரப் இடம்பெற்றுள்ளார். அவருக்கு 7ஆவது இடம் கொடுக்கப்பட்டுள்ளது.

இதற்கு முன்பு முஷாரப் இந்தப் பட்டியலில் இடம்பெற்றதில்லை. இப்போதுதான் முதல் முறையாகச் சேர்க்கப்பட்டிருக்கிறார்.

மோசமான சர்வாதிகாரியாக முதல் இடத்தைப் பிடித்திருப்பவர் சூடானைச் சேர்ந்த உமர் அல் பஷ்மிர் ஆவார். கிம் ஜாவீ (வடகொரியா) 2ஆவது இடமும் தான்சுவி (பர்மா) 3ஆவது இடமும் ஷீ ஜிந்தா (சீனா) 4ஆவது இடமும் இளவரசர் அப்துல்லா (சவுதி அரேபியா) 5ஆவது இடமும் கடாபி (லிபியா) 6ஆவது இடமும் பெற்றுள்ளார்கள். முஷாரப்புக்கு அடுத்தபடியாக சாபர்முரத் தியாசோவ் (துர்க் மனிஸ்தான்) 8ஆவது இடத்தையும் ரொபர்ட் முகாபே (சிம்பாப்வே) 9ஆவது இடத்தையும் திடோரோ ஒபியங் நிலிமா (இகி டோரியல்கினியா) 10ஆவது இடத்தையும் பெற்றிருக்கிறார்கள்.

கடந்த ஆண்டில் வெளியான பட்டியலில் கியூபா நாட்டு ஜனாதிபதி பிடல் கஸ்ரோ, சுவிர்சர்லாந்து மன்னர் மஸ் வாதி ஆகியோர் இடம்பெற்றிருந்தார்கள். ஆனால், இந்த முறை அந்த இருவரும் பட்டியலில் இருந்து நீக்கப்பட்டிருக்கிறார்கள். (8)

# ஆசியாவின் கைவினைப் பொருள் கண்காட்சி புதுடில்லியில்

புதுடில்லி,பெப்.15

ஆசியாவின் மிகப்பெரிய கைவினைப் பொருளகள் மற்றும் பரிசுப் பொருள்கள் கண்காட்சி வரும் 25ஆம் திகதி டில்லியில் தொடங்குகிறது.

டில்லியில் உள்ள பிரகதி மைதானத்தில் ஐந்து நாள்கள் இக்கண்காட்சி நடக்கிறது. ஆயிரத்து 500இற்கும் மேற்பட்ட இந்திய கைவினைப் பொருள்கள் உற்பத்தியாளர்கள் மற்றும் ஏற்றுமதியாளர்கள் கண்காட்சியில் கடைகள் அமைக்கின்றனர். அமெரிக்கா, பிரிட்டன் உட்பட உலகின் பல்வேறு நாடுகளைச் சேர்ந்த நுகர்வோர்களும், அந்நாடுகளின் பிரதிநிதிகளும் கண்காட்சியில் பங்கேற்பார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. இத்தகவலை இந்திய கைவினைப் பொருள்கள் ஏற்றுமதி வளர்ச்சி கவுன்சிலின் நிர்வாக இயக்குநர் ராகேஷ்குமார் தெரிவித்தார். (8)


உங்கள் விமானப் பயணத்திற்கு!

Aero Lanka

In Domestic Operation



New way of flying

Head office
No.500,Galle Road,
Wellawatte,
Colombo-06
Tel:2505632-3 Fax:2500626

Branch
No.295,Jampettah Street,
Colombo-13 Tel:2430782
Fax:2430782

Trinco Office
No.47,Kandy Road,
Trincomalee.
Tel:026-2221519
Fax:026-2221519

Jaffna office
No.86,PaintPedro Road,
Jaffna. Tel:021-2226242 Fax:021-2225600

Branch
No:14,New Market Building,
Chavakachcheri
Tel:021-2227979 Fax: 021-2227979

கொழும்பு-யாழ்
யாழ்-கொழும்பு


# பாகிஸ்தானில் கடும்மழை இதுவரை 300 பேர் பலி!

குவெட்டா,பெப்.15

பாகிஸ்தானில் கடந்த சில நாள்களாகப் பெய்துவரும் பலத்த மழையால் பலுசிஸ்தான் மாகாணம் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது. 300 பேர் இந்த மாகாணத்தில் மழைக்குப் பலியாகியுள்ளனர். இங்குள்ள பாஸ்னி மாவட்டத்தில் மூன்று அணைகள் உடைந்து 20இற்கும் மேற்பட்ட கிராமங்களை மூழ்கடித்துள்ளது. இந்தச் சம்பவத்தில் 87பேர் பலியாகியுள்ளனர். 20ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் வீடுகளை இழந்துள்ளனர்.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ள பகுதிகளில் இராணுவத்தினர் மீட்புப்பணியில் ஈடுபட்டுள்ளனர். பாகிஸ்தான் பிரதமர் சவுகத் அஜீஸ், வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ள இடங்களைப் பார்வையிட்டு வருகிறார்.(க-8)

# புஷ்ஷின் மகள் ஜென்னாவை மணக்கிறார் இளவரசர் ஹரி!

## பிரபல பத்திரிகை பரபரப்புத் தகவல்



லண்டன்,பெப்.15

பிரிட்டிஷ் இளவரசர் சார்ள்ஸின் இளைய மகன் பட்டத்து இளவரசன் ஹரிக்கும் அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ்ஷின் மகள் ஜென்னா புஷ்ஷுக்கும் திருமணம் செய்யமுடிவு செய்யப்பட்டிருப்பதாகப் பரபரப்புச் செய்திகள் வெளியாகியுள்ளன.

இளவரசர் சார்ள்ஸ் தனது நீண்டநாள் காதலி கமீலா பார்க்கரைத் திருமணம் செய்யப்போகிறார் என்று அறிவித்துள்ளார். அவர்களது திருமணம் எதிர்வரும் ஏப்ரல் மாதம் 8ஆம் திகதி நடைபெறவுள்ளது.

இந்நிலையிலேயே, ஹரிக்கும் ஜென்னா புஷ்ஷுக்கும் திருமணம் செய்யமுடிவு செய்யப்பட்டிருக்கும் தகவல் வெளியாகியுள்ளது.

கடந்த 2003ஆம் ஆண்டு அமெரிக்க ஜனாதிபதி புஷ் பிரிட்டனுக்குச் சுற்றுப்பயணமொன்றை மேற்கொண்டிருந்தார். அப்போது இளவரசர் சார்ள்ஸ் புஷ்ஷுடன் இது குறித்துப் பேசினார் எனக் கூறப்படுகிறது.

அநேகமாகத் தந்தைக்கும் மகனுக்கும் ஒரேசமயத்தில் திருமணம் நடக்கலாம் என்றும் கூட எதிர்பார்க்கப்படுகிறது.

ஹரிக்கும் ஜென்னாவுக்கும் திருமணம் முடித்தகையோடு புஷ்ஷின் மற்றொரு மகள் பார்பரா புஷ்ஷுக்கும் இளவரசர் சார்ள்ஸின் மூத்த மகன் வில்லியமிற்கும் திருமணம் செய்து வைக்கலாம் என்று ஜோர்ஜ் புஷ் யோசனை தெரிவித்துள்ளார்.



ஆனால் [illegible] இளவரசர் தனக்குத் திருமணத்தில் விருப்பம் இல்லை என்று கூறிவிட்டார் எனக் கூறப்படுகிறது.

திருமணம் குறித்து புஷ்ஷின் மகள் ஜென்னாவை [illegible] செய்தியாளர்கள் தொலைபேசியில் தொடர்புகொண்டு கேட்டனர்.

அப்போது ஜென்னா மகிழ்ச்சியில் [illegible]

இந்தச் செய்தி [illegible] மிகுந்த மகிழ்ச்சியாக உள்ளது [illegible]

இளவரசனைத் திருமணம் செய்துகொண்டு இளவரசியாக இருப்பது [illegible] பெருமையாக இருப்பதாக ஜென்னா கூறினார் எனவும் செய்தியாளர்கள் தெரிவித்தனர்.

இது தொடர்பாக இளவரசர் ஹரி [illegible] தெரிவிக்கவில்லை. இளவரசர் சார்ள்ஸின் அலுவலக உயர் அதிகாரி சர் மைக்கேல் பீட் பேசை மேற்கோள்காட்டிப் பிரபல பிரிட்டிஷ் பத்திரிகை [illegible] இந்தத் தகவலை வெளியிட்டுள்ளது. (8)

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## தவறிவிட்டது

நடராசா வினோத் என்பவருடைய தே.அ. அட்டை (இல.860461676V) 11-02-2005 அன்று நல்லூருக்கும் கல்வியங்காட்டிற்கும் இடையில் தவறிவிட்டது. தயவுசெய்து கண்டெடுத்தவர்கள் வினாயகர் வீதி, நல்லூர் வடக்கு, யாழ்ப்பாணம் என்ற முகவரியுடன் தொடர்புகொள்ளவும். சன்மானம் வழங்கப்படும். (சி-40958)

## விற்பனைக்கு

வடமராட்சியில் வதிரிச் சந்திக்கும் உடுப்பிட்டிச் சந்திக்கும் இடைப்பட்ட இரும்பு மதவடிப் பகுதியில் தெருவோரமாக உள்ள 3¼ பரப்புத் தோட்டக்காணி விற்பனைக்குண்டு. தொடர்புகொள்ள வேண்டிய தொலைபேசி இல. 0777 - 113055. (42060)

53 -XXXX தொடரிலக்கமுடைய Toyota இன டொல்பின் (Hiace) விற்பனைக்கு உண்டு. தரகர்கள் தேவையில்லை. தொடர்பு சுதா, பலாலி வீதி, கோண்டாவில் சந்தி, கோண்டாவில். T.P.: 222 7054. (42084)

## இறைச்சிக்கோழி விற்பனைக்கு

Prima உயர் Broiler மற்றும் இறைச்சிக கோழிகள் சுகாதார முறைப்படி உடன் சுத்தம் செய்து தினமும் பெற்றுக்கொள்ளலாம். (Electronic நிறுவை). தொடர்பு: (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு) 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (41988)

## பெற்றுக்கொள்ளவும்

பசுமாடு ஒன்று தெருவழியாக வந்தவேளை எங்களால் பிடிக்கப்பட்டுள்ளது. அதற்கு உரியவர்கள் உடன் வந்து ஆதாரங்களைக் காட்டிப பெற்றுக்கொள்ளவும். தொடர்பு: காளி அம்பாள் விளையாட்டுக் கழகம், காளி கோயிலடி, தாவடி தெற்கு, கொக்குவில். (42063)

## ஆங்கிலக் கவிதைத் தொகுப்பின் வெளியீட்டு விழா நாளை

யாழ்ப்பாணம்,பெப்.15

எஸ்நாகநந்தினியின் ஆங்கிலக் கவிதைகள தொகுப்பு-2 வெளியீட்டு விழா நாளை புதன் கிழமை பிற்பகல் 12.30 மணிக்கு கந்தர்மடம் மணல்தரை வீதியிலுள்ள மீனாட்சி அம்மன் ஆலயத்தில் நடைபெறவுள்ளது.

ஆனந்த மகேஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் பலாலி ஆசிரியர் கலாசாலை முன்னாள் அதிபர் சோ.பத்மநாதன பிரதம விருந்தினராகவும், யாழ்ப்பாணம் உயர் தொழில்நுட்பக் கல்லூரியின் ஆங்கிலத்துறைத் தலைவர் வி.கருணாநிதி சிறப்பு விருந்தினராகவும், இளவாலை சென்.ஹென்றீஸ் கல்லூரி அதிபர் வண.பிதா ஜேம்ஸ் சிங்கராயர்-அடிகளார் கௌரவ விருந்தினராகவும் கலந்து கொள்வர்.

(த-204)


## பேக்கரிக்கு ஆள்தேவை

பேக்கரி வேலையில் அனுபவமுள்ளவர்கள் தேவை. நேரில் தொடர்புகொள்ளவும்.
**புதிய துர்க்கா வெதுப்பகம்,**
பொற்பதி றோட், கொக்குவில்
கிழக்கு, கொக்குவில். (42085)

## காணி விற்பனைக்கு

சுன்னாகம், புன்னாலைக்கட்டுவன் வீதியில் உள்ள கொத்தியாலடிச் சந்தியிலிருந்து மயிலங்காடு செல்லும் வீதியல் 39 பரப்புக்காணி, 1300 அடி சுற்றுமதில், கிணறு, தண்ணீர்த்தாங்கி, கூரையிடப்படாமல் உள்ள வீடு ஆகியவற்றுடன் விற்பனைக்குண்டு.
தொடர்பு:- **மா.தேசிங்கராசா,**
மயிலங்காடு, ஏழாலை தெற்கு,
ஏழாலை.
077 6156821 (21-11-18)
(42089)

## புத்தகசாலைக்கு விற்பனையாளர் தேவை

மன்னாரிலுள்ள
பிரபல புத்தகசாலைக்கு
விற்பனையாளர் (ஆண்) தேவை.
உணவு, தங்குமிட வசதிகள் செய்து
கொடுக்கப்படும்.
தொடர்பு: 0232232052 (42058)

## தேவை

திருநெல்வேலியில் உள்ள விற்பனை நிலையத்திற்கு கணனி அறிவும், ஆங்கில அறிவும் உள்ள பெண்கள் தேவை.
தொடர்புக்கு:
**YARL MOBILES**
பிள்ளையார் வீதி, திருநெல்வேலி
(தபாற் பெட்டி சந்தி, முன் வீதி,
T.P.: 021 222 3927, 0773102950
(21-11-18) (42070)


# அரசியல் வாதிகள் தொழிற்சங்கங்களுக்கு மலையகத்தில் மூன்றாவது சக்தி உதயம்

கொழும்பு,பெப்.15

தொழிற்சங்கங்கள், அரசியல் கட்சிகள் என்பவற்றைத் தாண்டி மலையக மக்களுக்காகச் சேவையாற்ற மூன்றாவது சக்தி ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. இன்னும் பெயரிடப்படாத இந்த அமைப்பு எந்த அரசியல் கலப்புமின்றி, மலையக மக்கள் மத்தியில் விழிப்புணர்ச்சியையும் கல்வி வளர்ச்சியையும் ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்டே செயற்படும் என அமைபபின் ஸ்தாபகர் சி.வே.இராமையா தெரிவித்துள்ளார்.

இந்த அமைப்பின் அங்குரார்ப்பணக் கூட்டம் கொள்ளுப்பிட்டி உதயன் பவுண்டேஷன் நிலையத்தில் கடந்த சனியன்று நடைபெற்றது.

இந்த வைபவத்தில் மலையகத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட பட்டதாரிகள், விரிவுரையாளர்கள், சட்டத்தரணிகள், பத்திரிகையாளர்கள் மற்றும் தொழில் அதிபர்கள் எனப் பல தரப்பினரும் கலந்துகொண்டனர்.

மலையக மக்கள் காலம் காலமாகத் தொழிற சங்கக் கெடுபிடிகளுக்கு மத்தியிலேயே வாழ்நது பழக்கப்பட்டு விட்டனர்.

அடிப்படைத் தொழில் பிணக்குகளைக் கையாளத் தொழிற்சங்க அமைப்புகள் அவசியம் தான். அதற்காக எல்லாமே தொழிற்சங்கம் தான் என்ற நிலை சரியானதல்ல. அது மாற வேண்டும்.

மலையகத்தில் நன்குபடித்த பட்டதாரிகளும், புத்திஜீவிகளும் இருக்கின்றனர். ஆனால, இவர்கள் எல்லோருமே மலையகத்தைவிட்டு விலகி வந்துவிட்டனர். இவர்களுடைய சேவைகள் மலையகத்திற்குக் கிடைக்கவில்லை. கொழும்பில் வர்த்தகப் பிரமுகர்களாகவும் தொழில அதிபர்களாகவும் மலையகத்தைச் சேர்ந்த பலர் பிரகாசிக்கின்றனர்.

இவர்கள் மலையகத்தை விட்டு விலகிவிட்டார்களா? அல்லது ஒதுக்கப்பட்டார்களா? என்பதும் புரியாத புதிராகவே இருக்கின்றது.

இதற்கெல்லாம் விடைகாணும் முகமாகவே இந்த மூன்றாவது சக்தி உருவாக்கப்பட்டுள்ளது. அரசியல்வாதிகளுக்கும் தொழிற்சங்க வாதிகளுக்கும் ஓர் அழுத்தத்தைக் கொடுக்கும் அமைப்பாக இவ்வமைப்பு இயங்கும். (க-10)

அனர்த்த காலத்தில் கடமையாற்றிய

# சுகாதாரத் தொண்டர்கள் நெல்லியடியில் கௌரவிப்பு

சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் கடமையாற்றிய சுகாதாரத் தொண்டர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு கடந்த ஞாயிற்றுக்கிழமை நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் யாழ். மாவட்ட அரசியல் துறைத் துணைப்பொறுப்பாளர் கண்ணன், வடமராட்சி கோட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் இன்பன், கடற்றொழில் சமாசப் பிரதிநிதி தம்பியண்ணன், வடமராட்சி சுகாதார வைத்திய அதிகாரிப் பிரிவுப் பொறுப்பதிகாரி ரவிச்சந்திரன், வைத்திய கலாநிதி சீ.எஸ்.சொலமன், வைத்திய கலாநிதி சுரேந்திரகுமார், வைத்திய கலாநிதி குமரேந்திரன், தமிழீழ சுகாதார சேவைகளின் யாழ். மாவட்ட இணைப்பாளர் செ.குணாளன் ஆகியோர் கலந்துகொண்டனர். (த-202)

## வீதி திரு[illegible]தப்படுகிறது

நல்லூர்,பெப்.15

யாழ்ப்பாணம் ஆரியகுளம் நாவலர் வீதிச் சந்திக்கு இடைப்பட்ட பலாலி வீதி திருத்த வேலைகள் நடைபெற்று வருகின்றன.

இப்பகுதி வீதி மிகவும் மோசமான பாதிப்புக்கு உள்ளாகியிருந்தது. இதனால் வாகனப் போக்குவரத்துக்கு பலத்த கஷ்ட நிலையில் இருப்பதாக வாகனச் சாரதிகள் தெரிவித்தனர்.

வீதி அபிவிருத்தி அதிகாரசபை இப்பொழுது சேதமடைந்துள்ள வீதிகளைத் திருத்தியமைக்க நடவடிக்கைகள் மேற்கொண்டுள்ளது. (த-111)

## வேலணைக் கோட்ட மாணவருக்கு மதிய உணவு

மண்டைதீவு,பெப்.15

தீவகக் கல்வி வலயத்தில் உள்ள வேலணைக் கோட்டப் பாடசாலைகளில் மதிய உணவு வழங்கும்திட்டம் செயற்படுத்தப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மண்டைதீவு மகாவித்தியாலயத்தில் உள்ள 120 மாணவர்களுக்கு வடமாநில இந்து மாமன்றத்தின் அனுசரணையுடன் மதிய உணவு வழங்கப்பட்டுவருவதாக அதிபர் தெரிவித்துள்ளார்.

இந்த நடவடிக்கை வருடம் முழுவதும் தொடரும் என்றும் - அண்மையில் இந்து மன்றத்தினர் மாணவர்களுக்கு அப்பியாசக் கொப்பிகள் மற்றும் எழுது கருவிகளையும் வழங்கி இருந்தனர் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை-

வேலணை துரைசுவாமி மத்திய மகா வித்தியாலய மாணவர்களுக்கு, பாடசாலை நாள்களில் தினமும் மதிய உணவு வழங்கப் பட்டுவருகிறது.

கொழும்பு மற்றும் வெளிநாடுகளில் உள்ள பழைய மாணவர் சங்கம் இதற்கான நிதியை வழங்கியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (த-88)


## ஓராண்டு நினைவஞ்சலி

பிறப்பு 26 - 02 - 1935



இறப்பு 27 - 02 - 2004

அமரர்

**அம்பலவாணர் கந்தசாமி (காந்தி)**

(ஓய்வுபெற்ற லிகிதர், காங்கேசன்துறை சிமெந்து கூட்டுத்தாபனம்)

திதி : 15-02-2005

அன்பின் திருவுருவே! அறிவின் பிறப்பிடமே!
பண்பின் உறைவிடமே! பாசத்தின் சிகரமே!
எம் அன்புத் தெய்வம் எம்மை விட்டுப்
பிரிந்து ஓராண்டு சென்றாலும் உங்கள் திருவுருவம்
எம்மை விட்டு என்றும் அகலாது.
உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல
இறைவனை வேண்டி நிற்கும்.

'காந்தீபம்'
சித்தன்கேணி. (42039)(46-21-11-18)

அன்பு மனைவி, மக்கள்,
மருமகன்.

## ஆறாம் வருட நினைவுப்பூக்கள்

தோற்றம் 1934 - 07 - 03



மறைவு 1999 - 02 - 22

**அமரர் சண்முகம் சோமசுந்தரம்**

(முன்னாள் உதயன் முகவர், கரணவாய் வடக்கு, குஞ்சர்கடை)

எங்கள் அன்புத் தெய்வமே நீங்கள்
எம்மை விட்டுப்பிரிந்து ஆண்டுகள் ஆறு சென்றாலும்
நீங்கள் எம் துயர்துடைக்க - இனி
நீங்காத பிறவி ஒன்று எடுத்தால் மிகையாகாது தெய்வமே!

நீலன் குளத்தாள் லேன்,
கரணவாய் மத்தி,
கரவெட்டி. (42057)(26-11-21-18)

உங்கள் நினைவுகளுடன்:
குடும்பத்தினர்.

## இதய அஞ்சலி

### நடராசா நற்குணசிங்கம் (சிவலிங்கம்)



எமது ஸ்தாபனத்தின் உயர்வுக்கும் உள்ளார்ந்த வளர்ச்சிக்கும் உறுதுணையாக நின்று வழிகாட்டி ஆலோசனை வழங்கினீர்!

புன்சிரிப்பும் - சுறுசுறுப்பும் கலந்து அன்புடன் ஆசுவாசிக்கும் உன் வார்த்தைகள் எப்போதும் எதிரொலிக்கும்!

நல்ல பலன் கூறி நமக்கெல்லாம் வழி காட்டிய நீ! உன்பலனைப் பாராது பரமனடி சேர்ந்தனையோ! எப்பிறப்பில் காண்போம்!

அயலவர்கள் அழுகின்றோம் உன் பிரிவால்! அழுது ஆற முடியுமா? உன் உறவுகளாய் ஆறுதல் கூறுகின்றோம; ஆண்டவனை வேண்டுகின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

**வீடியோ கலாமினி,**
அச்சுவேலி.
T.P.: 077 3053080

(C/40962) (42-21-11-18)

## மரண அறிவித்தல்

### வைத்திலிங்கம் கந்தையா விஸ்வலிங்கம்

( V.K.V. & sons, மட்டக்களப்பு உரிமையாளரும், மயூரா P.V.C ஜோய் ஹாட்வெயர் ஸ்ரோர்ஸ் யாழ்ப்பாணம், பங்காளரும்)



மல்லாகத்தைப் பிறப்பிடமாகவும் மட்டக்களப்பை வதிவிடமாகவும் கொண்ட வைத்திலிங்கம் கந்தையா விஸ்வலிங்கம் அவர்கள் 13.02.2005 ஞாயிற்றுக்கிழமை அன்று மட்டக்களப்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா-நாகம்மா தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற தமயந்தியின் அன்புக் கணவரும் கஜேந்திரன் (மொறட்டுவபல்கலைகழகம்) மயூரன், விஷ்ணுகரன் (மட்டக்களப்பு மெதடிஸ்த மத்திய கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தந்தையும் மயில்வாகனம், இராஜதுரை (மலேசியா), காலஞ்சென்ற நடராசா, K.சிவம்மா, பொன்னையா, R.சோதி, தர்மலிங்கம் (V.K.V Bros - Colombo), சிவலிங்கம் (ஜோய் ஹாட்வெயர் ஸ்ரோர்ஸ்), T. சிவனேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை இன்று (15.02.2005) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் மட்டக்களப்பில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

234, (B) பார் வீதி,
மட்டக்களப்பு,
T.P No. 065 222 3673

தகவல்:
திரு.க.சிவலிங்கம்,
ஜோய்ஹாட் வெயர் ஸ்ரோர்ஸ்
214, K.K.S. வீதி,
யாழ்ப்பாணம்.
T.P. No. 021 222 3364

(C/40952)

# பாதிக்கப்பட்ட மக்களின் மனநிலையை பிரார்த்தனை மூலம் வளப்படுத்த இயலும்

## யாழ்.வந்த சர்வமதக் குழுவினர் கருத்து

யாழ்ப்பாணம்,பெப்.15

சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களின் மன நிலையைப் பிரார்த்தனை மூலம் வளப்படுத்த இயலும். அதற்காகவே இங்கு வருகை தநதோம - என்று யாழ்.வந்த சர்வமதக் குழுவினர் தெரிவித்தனா.

யாழ்ப்பாணத்துக்கு வெள்ளிக்கிழமை இரவு வந்து சேர்ந்த சர்வமதக் குழுவினர் ஞாயிறு காலை கொழும்பு திரும்பினர். அதற்கு முன் நடததிய செய்தியாளர் மாநாட்டில் இதைத் தெரிவித்தனர்.

அங்கு தெரிவித்ததாவது:-

எமது நோக்கம் மக்களது மனதை ஆறுதலபடுத்துதல் ஆகும்.

மககளின் உடனடித் தேவைகளைக் கண்டறிந்து அவர்களுக்கு எம்மாலான உதவிகளைச் செய்வதே எமது கடமை.

பலதடைகளையும் மீறி நாம் சுனாமி அனர்த்தம் நிகழ்ந்த இடங்களைப் பார்வையிட்டோம். அங்கு மககளையும் சந்தித்துக் கலந்துரையாடினோம். அவர்கள் எம்மைக் கண்டவுடன் ஓடி வந்து சூழ்ந்துகொண்டார்கள். அவர்களின் மனககுறைகளைக் கேட்டோம்.

அவர்களின் கண்ணீரைத் துடைக்கும் சந்தர்ப்பம எமக்குக் கிடைத்ததை எண்ணும்போது மிகவும் மனநிறைவு எமக்கு ஏற்பட்டது.

ஒன்பது நாள்களாகத் தொடர்ந்த இந்தப் பயணத்தை மக்கள் நன்கு உணர்ந்து எம்மை வரவேற்றமை மகிழ்ச்சியை அளிக்கின்றது. இதனை ஒரு நல்ல விடயமாக நாம் கருதுகின்றோம். நாங்கள் அவர்களின் துக்கத்தை பகிர்ந்து கொள்ளக் கூடியதாக இருந்தது.

**கௌசல்யனின் கொலை கலங்கவைத்தது.**

இந்தப் பயணநேரத்தில் புலிகளின் மட்டு.-அம்பாறை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் கௌசலயனின் படுகொலைச் செய்தி எம்மைக் கலங்கவைத்தது.

அவருக்கும் அவருடன் கொலை செய்யப்பட்ட அனைவருக்கும் அனுதாபம் தெரிவித்ததோடு, நாங்கள் இங்கு வருகைதந்த அனைத்து பிரார்த்தனை ஊர்திகளிலும் வெள்ளைக்கொடிகளைப் பறக்க விட்டிருந்தோம்.

கடற்கோள் அனர்த்தத்தினால் எமது சகவாழ்வு எம்மைவிட்டு தூரவிலகிச்சென்று கொண்டிருக்கிறது. இதனைக் கருத்திற் கொண்டே அனைத்து சமயத் தலைவர்களும் ஒன்று சேர்ந்து புறப்பட்டுள்ளோம்.

அனைத்து மத வழிபாடுகளிலும் மக்கள் பேதமின்றி கலந்துகொண்டதை எம்மால் காண முடிந்தது.

மக்கள் மனோரீதியில் மிகவும் பாதிப்படைந்து காணப்படுகின்றனர். நாங்கள் ஒன்று, இரண்டு மணித்தியாலங்களில் அவர்களின் மனோநிலையை மாற்றுவது கடினம்.

இன்னும் எவ்வளவு காலத்திற்கு இந்த அகதி முகாம் வாழ்க்கை என்ற கேள்விக்குறியும் இவாகளின் மனநிலையைப் பாதித்துள்ளது. 20 வருட கால யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்கள் அகதி முகாம்களில் இன்றும் வாழ்கின்றதைக் காண முடிந்தது.

**பாதுகாப்பு வலயம் வேதனைக்குரியது**

அனேகமான மக்கள் உயர் பாதுகாப்பு வலயம் என்ற காரணத்தினால் தமது சொந்த இடங்களுக்குத் திரும்பமுடியாத நிலை மிகவும் வேதனைக்குரிய விடயம். இதனை நாம் தென் பகுதி திரும்பியதும் இலங்கை ஜனாதிபதியுடன் பேசவுள்ளோம். இதற்கு எங்களால் இயன்ற முயற்சிகளை மேற்கொள்ளவுள்ளோம்.

ஆனால், நாம் இங்கு விஜயம் செய்த நோககம் அதுவல்ல. ஆயினும் இந்த முயற்சி வெற்றி பெற மதத்தலைவர்களாகிய நாம் பிரார்த்தனைகளை மேற்கொள்ளவுள்ளோம்.

இருப்பினும் எமக்குக் கிடைத்த சந்தர்ப்பத்தினைப் பயன்படுத்தி மக்களின் மனோநிலையை ஓரளவிறகு மாற்றி அவர்களின் கவலைகளைக் குறைப்போம் என்ற நம்பிக்கை எமக்கு உண்டு.

'எம்மைப் பார்ப்பதற்கு மதத்தலைவர்கள் வந்தார்கள், எமக்கு ஆசீர்வாதம் வழங்கினார்கள், நூல்கட்டினார்கள், எமக்காகப் பிரார்த்தித்தார்கள் என்ற நிறைவாவது அந்த மக்களின் மனதில் கிடைத்திருக்கும் என்ற நம்பிக்கை எமக்குண்டு.

ஆயினும், மதத்தலைவர்களாகிய நாம் பிரார்ததிப்பதோடு மட்டும் நின்றுவிடாமல் உதவிகள் மக்களுக்கு எந்த வகையில் கிடைத்திருக்கின்றன. என்பதையும் தெரிந்துகொள்ள வேண்டியது அவசியம்.

ஏற்கனவே நாம் பல வேலைத்திட்டங்களை பாதிக்கப்பட்ட மக்களுக்காக ஒழுங்குபடுத்தி வழங்கியுள்ளோம்.

சுனாமி அனர்த்தம் நடந்து ஐந்து தினங்களுக்கு அரசினால் எந்த உதவியும் வழங்கப்படாத நிலையில் மதத்தலைவர்களாகிய நாம் பல அமைப்புகளுடனும் இணைந்து மக்களுக்கு உதவிகளை வழங்கியிருந்தோம்.

தற்போது நிவாரணப் பணிகளை வழங்குவதற்கு அரசு பாரமெடுத்துள்ளது. இருந்தும் இந்த உதவிகள் அரசினால் சரியான முறையில் பகிரப்படுவதில்லை. நிவாரணத்தைச் சில பேர் திருடுகின்றனர்.

நாம் ஓர் அமைப்பை உருவாக்கியுள்ளோம். அதாவது 'சிவில் சமூக அமைப்பு' இந்த அமைப்பிலே சகல மதங்களையும் கொண்ட உறுப்பினர்களும் பங்குகொள்கின்றார்கள்.

இந்த அமைப்பின் செயற்பாடுகளும், அரசின் நிவாரண செயற்பாடுகளும் சமமாக வழங்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

அரசு ஒரு கிழமைக்கொருதடவை நிவாரணம் வழங்கினால் எங்களுடைய அமைப்பும் ஒரு கிழமைக்கு ஒரு தடவை நிவாரண உதவிகளை வழங்கும். சர்வதேச அமைப்புகளில் உள்ள உறுப்பினர்களையும் எமது அமைப்பில் இணையுமாறு அழைக்கின்றோம்.

மதத்தலைவர்களாகிய நாம் ஒன்றுபட்டு நிற்பதால் பல விடயங்களையும் சாதிக்க முடிகின்றது. இவ்வாறு அனைவரும் ஒன்றுபட்டால் எமது நாட்டுப் பிரச்சினையை முடிவிற்குக் கொண்டுவர முடியும்.

'சுனாமி' அனர்த்தம் ஒன்று ஏற்பட்டதாலேயே நாம் இந்த மக்களை எல்லாம் போய்க் காணமுடிந்தது. அப்படி ஒன்று ஏற்படாவிட்டால் அங்கு போனாலும் நாம் அவர்களைக் காணமுடிந்திருக்காது. அவர்கள் தமது வேலைகளிலேயே ஈடுபட்டிருப்பார்கள். எம்மை நோக்கி ஓடிவந்திருக்கமாட்டார்கள்.

எமது பயணம் ஒழுங்கான முறையில் நடைபெற ஒத்துழைப்பு வழங்கிய தமிழீழ விடுதலைப் புலிகள், சர்வதேச தமிழீழ மாணவர் பேரவையினர், பொது அமைப்புக்கள் ஒன்றியம் மற்றும மதத்தலைவர்கள் அனைவருக்கும் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளோம்.

- என்று தெரிவித்தனர்.

இந் தச் சர்வ மதத்குழுவுக்குத் தலைமை தாங்கிவந்த மதங்களுக்கிடையிலான சமாதான ஒன்றியத் தலைவர் சங்கைக்குரிய மாதம் பாகம அஸ்ஸயி தேரர் இச் சந்திப்பில் வைத்து சகல மதங்களுக்குமான தலைவர் என்ற பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டார். இதற்குரிய பத்திரத்தை சங்கைக்குரிய ஜனதஸ்ஸிதேரர் வழங்கினார்.

இச்சந்திப்பில் பௌத்த மதத்தலைவர்கள், கிறிஸ்தவ மதகுருமார்கள், மௌலவிகள், இந்து மதத்தலைவர்கள், சௌமிஸ இளைஞர் நிதயத்தலைவர், யாழ்.பெரிய பள்ளிவாசல் மகக்கள் பணிமனைத் தலைவர் ஆகியோர் கலந்து கொண்டனர். (த-12-190)

# மன்னார் இளைஞர் பலாத்காரம்; அடையாள அணிவகுப்புக்கு உத்தரவு

வவுனியா,பெப்.15

மன்னார், தாழ்வுபாட்டில் கடந்த வெள்ளியன்று பாடசாலை மாணவன் ஒருவனைப் பாலியல் துன்புறுத்தலுக்கு உட்படுத்தினார் என்ற சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டுள்ள பொலீஸ் கான்ஸ்டபிளை எதிர்வரும் 21 ஆம் திகதி அடையாள அணிவகுப்புக்காக மன்னார் மாவட்ட நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துமாறு வவுனியா மாவட்ட நீதிபதி எம்.இளஞ்செழியன் பொலீஸாருக்கு உத்தரவிட்டுள்ளார்.

தாழவுபாட்டிலுள்ள கடற்படை முகாமுக்கும், பொலீஸ் நிலையத்திற்கும் இடையில் வீதியோரத்தில் மறைவான இடமொன்றிலுள்ள கிணற்றடியிலேயே கடந்த வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் இந்தப் பாலியல் பலாத்காரம் இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

தனது உறவினர் ஒருவருடைய வீட்டிற்குச் சென்று கொண்டிருந்தபோது, தாழ்வுபாடு கடற்படை முகாமுக்கும், பொலீஸ் நிலையத்திற்கும் இடையிலுள்ள வீதிக் கடவையில் கிடுகுகளினால் மறைக்கப்பட்ட கிணற்றடிப் பக்கம் இருந்து ஒருவர் 'உஸ்' என அழைத்தார் என வும் -

அதனைப் பொருட்படுத்தாமல் தான் சென்றபோது குரும்பட்டி (பிஞ்சுத் தேங்காய்) ஒன்று தனது தலையில் வந்து வீழ்ந்ததனால் ஏற்பட்ட நோ காரணமாக கீழே இருந்தபோது, பின்பக்கமாக வந்த ஒருவர் துவாயினால் தனது தலையை மூடிக்கட்டி கிணற்றடிப் பக்கமாக இழுதது‌ச சென்று பாலியல் பலாத்காரம் புரிந்தார் எனவும் - பாதிக்கப்பட்டவராகிய 17 வயது இளைஞர் பொலீஸாருக்கு அளித்துள்ள வாக்கு மூலத்தில் தெரிவித்துள்ளார் என்று கூறப்பட்டது.

இதனால் தனக்குக் காயமேற்பட்டு இரத்தம் பெருக்கெடுத்ததாகவும்; சந்தேக நபர் கிணற்றிலிருந்து தண்ணீர் எடுத்து காயத்தைக் கழுவினார் எனவும் -

தான் வீட்டிற்குச் சென்றதும் தனது சகோதரரின் உதவியோடு மன்னார் வைத்தியசாலையில அனுமதிக்கப்பட்டு, பின்னர் மேலதிக சிகிசசைக்காக அங்கிருந்து வவுனியாவுக்கு அனுப்பி வைக்கப்பட்டார் எனவும் - பாதிக்கப்பட்ட இளைஞர் பொலீஸாருக்கு வழங்கிய வாக்குமூலத்தில் மேலும் தெரிவித்துள்ளார்.

தன்மீது பாலியல் பலாத்காரம் பிரயோகித்தவரை தனக்குத் தெரியும் என்றும், அவரைத் தன்னால் அடையாளம் காட்ட முடியும் என்றும் அந்த வாலிபர் தெரிவித்துள்ளார்.

இந்தச சம்பவத்தையடுத்து உடனடியாகவே மன்னார் தாழ்வுபாடு பகுதியிலுள்ள பொலீஸ் நிலையத்தை அங்கிருந்து அகற்றவேண்டும் என்று அப்பகுதி மக்கள் மேற்கொண்ட ஆர்ப்பாட்டம காரணமாக அங்கு பதற்றமும், அமைதியின்மையும் ஏற்பட்டது.

பொதுமக்களின் இந்தப் போராட்டம் தொடர்ந்து நடைபெறும் எனப் பொலீஸார் சந்தேகம் கொண்டதினாலும், மன்னார் பொலீஸாருக்கு எதிராக இந்தச் சம்பவத்தில் முறைப்பாடு செய்யபட்டுள்ளதினாலும் விசேட பொலீஸ் குழு ஒன்றை நியமித்து விசாரணைகள் நடத்துமாறு வவுனியா பிரதிப் பொலீஸ்மா அதிபருக்கு மன்னார் நீதிவான் உத்தரவிட்டார்.

பாதிக்கப்பட்ட மாணவனாகிய இளைஞனிடமும், அவருடைய சகோதரர்களிடமும் இந்தப் பொலீஸ் குழு வாக்குமூலங்களையும் பதிவு செய்துள்ளது.

கைதுசெய்யப்பட்ட தாழ்வுபாட்டுப் பொலீஸ் நிலையத்தைச் சேர்ந்த சந்தேக நபர் பொலீஸ் குழுவினரால் கடந்த சனிக்கிழமை வவுனியா மாவட்ட நீதிபதியின் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டார்.

இந்தச் சம்பவம் தொடர்பான நீதிமன்ற விசாரணைகள் மன்னார் மாவட்ட நீதிமன்றத்திலேயே நடைபெறவேண்டும் என்றும், சந்தேக நபரை விளக்க மறியலில் வைத்து எதிர்வரும் 21ஆம் திகதி மன்னார் மாவட்ட நீதிமன்றத்தில் அடையாள அணிவகுப்புக்கு உட்படுத்துமாறும் வவுனியா மாவட்ட நீதிபதி எம்.இளஞ்செழியன் பொலீஸாருக்கு உத்தரவிட்டுள்ளார். (க-3)

## வீதியில் சென்ற பெண்ணை காளைமாடு முட்டியது

தென்மராட்சி,பெப்.15

வீதியால் நடந்து சென்ற பெண்ணை காளை மாடு முட்டித் தாக்கிக் காயப்படுத்தியது.

கடந்த புதன்கிழமை மிருசுவில் தவசிகுளத்தில் இச்சம்பவம் இடம்பெற்றது.

இதே இடத்தைச் சேர்ந்த இராசலிங்கம் பிலோமினா (வயது61) என்பவர் காயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை - பேருந்திலிருந்து இறங்கி வீதியைக் கடந்த மாணவி மோட்டார் சைக்கிளினால் மோதுண்டு காயமடைந்தார்.

கொடிகாமம் - பருத்தித்துறை வீதியில் 11 ஆம் திகதி இடம்பெற்ற இச்சம்பவத்தில் இதே இடத்தை சேர்ந்த சிவகோசரியார் கபிலா (வயது11) என்ற மாணவியே காயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (த-117)

## விசேட கூட்டம்

யாழ்ப்பாணம்,பெப்.15

யாழ்.மாவட்ட அரச கீழுழைப்புப் பட்டதாரிகள் சங்கத்தின் விசேட கூட்டம் நாளை புதன்கிழமை மாலை 4.30 மணிக்கு யாழ். மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளது.

சங்க உறுப்பினர்களின் பெயர்ப்பட்டியல் சரிபார்க்கப்படவுள்ளதுடன். கொழும்பு செல்வதற்கான பயண ஏற்பாடுகள் தொடர்பாகவும் இக்கூட்டத்தில் ஆராயப்படவுள்ளதால் சங்கத்தின் உறுப்பினர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு செயலாளர் கு.பற்குணராசா கேட்டுள்ளார். (10)



சுன்னாகம் றோட்டறக்ட் கழகத்தினர் நீர்வேலிப் பகுதிகளில் உள்ள கிணறுகளுக்கு குளோரின் இட்டுச் சுத்திரிக்கும் பணியினை அண்மையில் மேற்கொண்டனர். (ச-203)

# அமெரிக்காவில் பயிற்சிபெறச் சென்ற கடற்படையினர் ஐவர் திடீர் மாயம்!

இலங்கைக் கடற்படைக்கு அமெரிக்கா நன்கொடையாக வழங்கியுள்ள யுத்தக் கப்பலில் பணியாற்றுவதற்குரிய பயிற்சிகளை அமெரிக்காவிலேயே பெறுவதற்குச் சென்ற இலங்கைக் கடற்படை அணியினரில் ஐவர் தமது பயிற்சி முகாமிலிருந்து தலைமறைவாகியுள்ளனர்.

210அடி நீளமான தேடுதல் மீட்புக் கப்பலான யு.எஸ்.எஸ். கரேஜஸ் என்ற இந்தக் கப்பல் அமெரிக்க அரசினால் இலங்கைக்கு நன்கொடையாக வழங்கப்பட்டது. எனினும், இக் கப்பலை மறுசீரமைக்க இலங்கை அரசு சுமார் 70 கோடி ரூபாவை செலவிட வேண்டியிருந்தது.

கப்பலுக்குரிய ஆயுதங்களையும் இலங்கை அரசே பொருத்தவேண்டியிருந்தது.

இதற்காக - ஏற்கனவே இந்தியா அன்பளிப்பாக இலங்கைக்கு வழங்கிய எஸ்.எல். என்.எஸ்.சயுரா என்ற கப்பலிலிருந்து கழற்றப்பட்ட, 1936 ஆம் ஆண்டுத் தயாரிப்பான 40-60 எம்.எம்.போபஸ் சுடுகலன்கள் அமெரிக்காவுக்குக் கொண்டு செல்லப்பட்டுப் பொருத்தப்பட்டன.

இந்தக் கப்பல் எதிர்வரும் 22ஆம் திகதி அமெரிக்காவிலிருந்து இலங்கை நோக்கி புறப்படவிருக்கிறது.

இக்கப்பலை இயக்குவதற்காகப் பயிற்சி பெறச்சென்ற இலங்கைப் படையணியினரிலேயே ஐந்து பேர் காணாமற்போயுள்ளனர். அவர்களுள் ஒருவர் கப்பலின் இயந்திர அறை பொறியியலாளர் எனக் கூறப்படுகிறது.

கடற்படைப்பயிற்சி என்ற பெயரில் அமெரிக்காவுக்குள் நுழையக் கிடைத்த வாய்ப்பைப் பயன்படுத்தி இவர்கள் ஐவரும் நைசாக மாறி விட்டார்கள் எனக் கூறப்படுகிறது. (எ-க)

**JTI** 2005 - 2006 ஆண்டுக்கான கணினி மற்றும் தொழில்நுட்ப பயிற்சி நெறிகள் ஆரம்பம்

18.02.2005 (கிழமை நாள்கள்) 19.02.2005 (வார இறுதி நாள்கள்)

Computer Courses

**DIPLOMA COURSES** (3-5 Months)

- Diploma in Microsoft Office 2003
- Diploma in Desk Top Publishing
- Diploma in Internet Technology
- Diploma in Vedio Mixing
- Diploma in Accounting Package
- Diploma in Hardware Engineering
- Diploma in Computer Programming
- Children Program

**CERTIFICATE COURSES**

| | | |
|---|---|---|
| MsWord 2003/XP | CorelDraw 11 | HTML |
| MsExcel 2003/XP | Adobe PageMaker 7.0 | Java |
| MsAccess 2003/XP | Adobe PhotoShop 7.0 | Maya 5.0 |
| Internet & E-mail | Adobe Premier | Flash |
| Quick Books | Visual Basic 6.0 | Pascal |

**தொழிற்பயிற்சி நெறிகள்**

* RADIO,T.V AND VIDEO DECK REPAIRING
சகல இன றேடியோ,ரி.வீ,டெக் மற்றும் எலற்ரோனிக் உபகரணங்கள், Computer Monitor, Ups, Printer, Scanner, என்பன திருத்தும் முறை ஆரம்பத்தில் இருந்து பயிற்சியளிக்கப்படும். (காலம் 10 மாதங்கள்)

* MOTOR REWINDING AND ELECTRICAL WIRING
சகல இன, (f) பான், ரான்ஸ்போமர்கள் றிவைண்டிங் செய்யும் முறை மற்றும் வீட்டு மின்னிணைப்பு Single Phase, Three Phase இணைப்பு முறை என்பன பயிற்சி அளிக்கப்படும். (காலம் 07 மாதங்கள்)

* AIR CONDITIONING AND REFRIGERATION
சகல இன குளிர்சாதனப் பெட்டி மற்றும் எயர் கொண்டிசன் திருத்தும் முறை ஆரம்பத்திலிருந்து பயிற்சியளிக்கப்படும். (காலம் 07 மாதங்கள்)

* MOTOR CYCLE MECHANISAM
சகல இன மோட்டார் சைக்கிள், நீரிறைக்கும் இயந்திரம் திருத்தும் முறை ஆரம்பத்திலிருந்து பயிற்சியளிக்கப்படும். (காலம் 06 மாதங்கள்)

* PLUMBING (காலம் 03 மாதங்கள்)

மேலதிக விபரங்களுக்கு
**JAFFNA TECHNICAL INSTITUTE**
இல. 07, பலாலி வீதி யாழ்ப்பாணம்.
T.P:- 021-222 3335, 0773 086716


## இருவர் காயம்

மோட்டார் சைக்கிள் சில்லு சறுக்கியதில் அதில் பயணித்த தந்தையும் மகனும் காய மடைந்துள்ளனர். மீசாலை வடக்கில் கடந்த 10ஆம் திகதி இச்சம்பவம் இடம்பெற்றது.மந்து வில் கிழக்கைச் சேர்ந்த சின்னத்தம்பி நல்ல துரை (வயது-45) அவரது மகனான நல்லதுரை நசீபன் (வயது-6) ஆகியோரே காயமடைந்த வர்களாவர்.இவர்கள் இருவம் சாவகச்சேரி ஆஸ பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (த-117)

## தொடர் மழையால் நெற்பயிர் நாசம்

யாழ்ப்பாணம்,பெப்.15

வலி.தென்மேற்குப் பிரதேசத்தில் 2004-2005 விவசாயத்தில் நல்லதோர் விளைச்சலைப் பெறு வதற்கான அறுவடைகள் நடைபெறவிருந்த வேளையில் மழை பெய்துள்ளமையால் நெற்பயிர் கள் அழியும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

கடந்த மாதம் பெய்த தொடர் மழை காரண மாக, அறுவடைசெய்யக்கூடிய பருவத்தில் இருந்த நெற்பயிர்கள் வெள்ளத்தில் நனைந் துள்ளன.

இதனால் விவசாயிகள் நெல் அறுவடை செய்ய முடியாத நிலையில் உள்ளனர் அத்துடன் சில இடங்களில் அறுவடை செய்து வயல்களில் விட்ட நெற்பயிர்களும் மழையில் நனைந்துள் ளன.

இதனால் இவ்வருடவிளைச்சலில் பெரும் நஷ்டம் ஏற்பட்டுள்ளதாக விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர். (த-203-185)

## கோண்டாவிலில் திருட்டு

கோண்டாவில்,பெப்.15

கோண்டாவில்ப் பகுதியில் நேற்றுமுன்தினம் இரவு இரு கடைகளில் திருடர்கள் திருட்டு முயற சியில் ஈடுபட்டனர். அவற்றில் ஒன்றில் மட்டுமே பொருள்களைத் திருடினர் மற்றைய முயற்சி தோல வியில் முடிவடைந்துள்ளது.

இச்சம்பவம் பற்றி தெரியவருவதாவது, புகை யிரத நிலைய வீதி. கோண்டாவில் சந்தியில் உள்ள நகைத்தொழிலகத்தின் முன்கதவின் பூட்டு களை உடைத்து உள்நுழைந்த திருடர்கள் 20 ஆயிரம் ரூபா பெறுமதியான றேடியோ ஒன்றை திருடிச்சென்றுள்ளனர். அந்தக் கடையில் நகை கள் எதுவும் இருக்கவில்லை.

மற்றைய திருட்டு முயற்சியில் பலாலி வீதி, வாமஸ் சந்தியில் அமைந்துள்ள மதுபானக் கடையை சில திருடர்கள் உடைத்துக்கொண்டி ருந்தவேளை, வீதியில் வாகன நடமாட்டத் தைக்கண்டு திருட்டு முயற்சியை கைவிட்டு ஓடிவிட்டனா எனக் கூறப்படுகிறது.

மதுபானக் கடையில் இருந்து சுமார் 100 மீற் றர் தூரததில் இராணுவ முகாம் ஒன்று அமைந் துள்ளமை குறிப்பிடத்தக்கது.

(த-49)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

தோற்றம் 15-11-1936 மறைவு 16-01-2005



திருமதி இராசமலர் கந்தையா

எமது அன்புத் தெய்வத்தின் மறைவுச் செய்தியை அறிந்து உள்நாட்டி லிருந்தும், வெளிநாட்டிலிருந்தும் அனுதாபச்செய்திகளை தொலைபேசி யிலும் தந்திமூலமும் தெரிவித்தோருக்கும் நேரில் கலந்துகொண்ட அன்புள்ளங் கொண்ட அனைவருக்கும் மலர்வளையங்கள் சமர்ப்பித்தோருக்கும் மற்றும் புனிதபத்திரிசியார் கல்லூரியின் அருட்தந்தையர்களான அதிபர், உபஅதிபர், நிதியாளர் ஏனைய குருக்கள், கன்னியாஸ்திரிகள், பிரிவுத் தலைவர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பழையமாணவர்கள் அனைவருக்கும் கிளிநொச்சி வன்னேரிக்குளம் மகாவித்தியாலய அதிபர், உபஅதிபர், ஆசிரியர்களுக்கும், யாழ் றோட்டறிக்கழகம், மானிப்பாய் றோட்டரக்ட்கழகம், நல்லூர் றோட்டரக்ட்கழகம் என்பவற்றின் அங்கத்தவர்கள் அனைவருக்கும், மேலும் பற்பல வழிகளிலும் துணைபுரிந்த உற்றார், உறவினர், நண்பர்கள், பேரின்பநாயகம் வீதி, சுண்டிக்குளியில் உள்ள அன்பான அயலவர்கள் அனைவருக்கும், வைற் கவுஸ் நிறுவனத் தினருக்கும் அவரது பூதவுடல் இல்லத்தில் வைத்திருந்த நான்கு நாள்களிலும் பல்வேறு உதவிகள் புரிந்த அனைவருக்கும், தகனக் கிரியைகள் மற்றும் எட்டுக் கிரியைகளில் கலந்துகொண்ட அனைவருக்கும் எமது உள்ளம் நெகிழ்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

இன்று (15.02.2005) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நிகழும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இல:32,பேரின்பநாயகம் வீதி,
கச்சேரியடி,சுண்டிக்குளி,யாழ்ப்பாணம்,
T.P:-021-2227272 (42022)

பிள்ளைகள்,மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், சகோதரி.





TRIAD 13651

நாடு பூராவும் பரந்து வருடத்தின் 365 நாட்களும் இயங்கும் எமது 24 மணிநேர சேவை.

அதனால் எந்தப்பிரதேசத்தில் விபத்து ஏற்பட்டாலும் உடனடியாக உதவக்கூடிய ஆற்றல்.

நாடு முழுவதும் அனைவரினதும் மதிப்பையும், ஆதரவையும், நம்பிக்கையையும் பெற்ற காப்புறுதி துறையின் முன்னோடியிடம் உண்மையில் நீங்கள் என்றும் பாதுகாப்பினை பெறுவீர்கள்.

ஸ்ரீ லங்கா இன்ஷுவரன்ஸ்
21, வொக்ஷோல் வீதி, கொழும்பு 02. தொலைபேசி: 2357457 பெக்ஸ்: 2447742
மின்னஞ்சல்: slic@srilankainsurance.com இணையத்தளம்: www.srilankainsurance.com

உங்களின் அடுத்த வாகன காப்புறுதியினை உங்கள் இல்லத்திற்கே வரவழைத்துக் கொள்ளவும் மேலதிக விபரங்களுக்கும் அழையுங்கள் (011) 2 357 357

# சீரான தொலைபேசி வன்னிக்கு எப்போது?

A-9 பாதை திறந்த சிறிது காலத்தில் நூற்றி ஐம்பந்தைந்து ஆவது மையிலில் அமைந்துள்ள பழைய தொலைத்தொடர்புக் கோபுரம் புனருத்தாரணம் செய்யப்பட்டது. அதே வேளை, இலங்கை ரெலிக்கொம்மின் கிளிநொச்சிக்கான தொலைத்தொடர்புப் பரிவர்த்தன நிலையமும் கோபுரமும் பரந்தனுக்கு அண்மையில் அமைககப்பட்டு தொலைபேசி இணைப்புகளும் வழங்கப்பட்டன.

பின்பு பழைய கோபுரம் திருத்தியமைக்கப் பட்டவுடன் வேலைகள் நிறுத்தப்பட்டன.

கிளிநொச்சிக்குத் தொலைபேசி வழங்கத் தான் பரந்தனில் கோபுரம் அமைக்கப்பட்டது. இருப்பினும், 261 அடி உயரத்தில் பழைய கோபுரம் திருத்தப்படுவது ஏன்? அதனால் என்ன செய்யப்போகிறார்கள் என்று பார்த்தவர்கள் குழம்பிப்போயினர்.

ஒருசாராரின் வாதம் புதிய கோபுரத்தில் 500 இணைப்புகள் மட்டுமே வழங்கலாம். இது பூர்த்தியானவுடன் திருத்திய கோபுரத்தில் இருந்து மேலதிக இணைப்புகள் வழங்கப் போகின்றார்கள் என்றிருந்தது.

அதேபோல் இன்னொருசாராரின் கருத்து யாதெனில், யாழ்ப்பாணத்துக்கும் வவுனியாவுக்கும் இடையில் கிளிநொச்சி அமைந்ததால், இதன்மூலம் தெளிவான - விரைவான தொடர்புச்சேவையைப் பெறலாம் என்பது.

இப்படிப் பலவாறான கருத்துக்கள் நிலவிய போதுதான் நாம் இலங்கை ரெலிக்கொம் அதிகாரிகளை அணுகினோம். அவர்களுடனான சந்திப்பின் போதுதான் இப்படியான திட்டங்கள் அமுலபடுத்தப்படவுள்ளன என்பது குறித்து அறிய முடிந்தது.

தொடர்ந்து நிலவும் சமாதானச் சூழல் அபிவிருத்தித் திட்டங்களுக்கு ஓரளவு வாய்ப்பாக உள்ளதால், முதன்முறையாக சுமார் ஒன்றரை வருடங்களுக்கு முதல் நீண்டகாலத்தின் பின்பு கிளிநொச்சியில் தொலைத்தொடர்பு அறிமுகமாக்கப்பட்டது. முதலாவது கட்டமாகத் தற்காலிக கோபுரம் மூலம் மிக முக்கிய அலுவலகங்களுக்கு 200 இணைப்புகள் வழங்கப்பட்டன. இது பின்னர் படிப்படியாக விஸ்தரிக்கப்பட்டது.

நிறுவனங்களும், மக்களும் நாளாந்தம் புதிய இணைப்புகளைப் பெற இலங்கை ரெலிக்கொம் நிறுவனத்தை நாடியதால், 500 இணைப்புக்களை வழங்கக்கூடிய கோபுரம் பரந்தனுக்கு அண்மையில் அமைக்கப்பட்டது.

"ஒரே கறகறப்பாக உள்ளது", "லயின் எடுக்க கஷ்டமாக உள்ளது", "டயல்ரோன் வருவதில்லை" இப்படியான பேச்சுகள் தொலைபேசி பெற்றவர்களின் வாய்களில் பரவலாக முணுமுணுக்கப்படுகிறது.

இதுதொடர்பாக, அலுவலர்களைச் சந்தித்து நிலமையைக் கேட்டபோது "லோட் கூடவாக உள்ளது", "அநுராதபுரத்தில் பிரச்சினை" என்கிறார்கள் இப்படியாக கிளிநொச்சி தொலைபேசி நிலைமைகள் உள்ளன.

அசௌகரியமான சேவையை நிறுத்தி சௌகரியமான - விரும்பப்படுகின்ற - சேவையை வழங்கவே தற்போது புதிய கோபுரத் திருத்த வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிககப்படுகிறது.

தற்போது யாழ்., கிளிநொச்சி மாவட்டங்களுக்கான பரிவர்த்தனை மன்னாரின் ஊடாக நடைபெறுகின்றது. கிளிநொச்சி நகரமானது, வவுனியா யாழ்ப்பாணத்திற்கு அண்மையில் இருபதால் அதிக திறனான செயற்பாடுடன் செயற்படுத்தவுள்ளது.

அதாவது, சகல வெளியிடத் தொர்புகளும் மடுக்கந்தையிலிருந்து கிளிநொச்சி ஊடாக யாழ்ப்பாணத்திற்கு இணைப்பிக்கப்படவுள்ளன.

இச்செயற்பாடு கிளிநொச்சிக் கோபுரத்தில் உள்ள (Repeaters) றிப்பிற்றர்ஸ் மூலம் செயற்படுத்தப்படவுள்ளது. இதன்மூலம் அதிகளவான புதிய இணைப்புகளை வழங்கக்கூடியதாக இருக்கும் என்று தெரிவிக்கப்படுகிறது.

தற்போது யாழ்ப்பாணம், மன்னார், வவுனியா, கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களில் அனலொக் தொழில்நுட்பம் பயன்படுத்தப்படுகிறது. இது ஒப்பீட்டளவில் புதிய (SDH) தொழில்நுட்பத்தைவிடக் குறைந்த பயனைத் தருவதால் முற்றுமுழுதான டிஜிற்றல் தொழில்நுட்பம் படிப்படியாகக் கிளிநொச்சியிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு நிறுவப்படவுள்ளது. தொழில்நுட்ப வேலைகள் யாவும் கிளிநொச்சியில் முடிவுற்றதும் யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்படும்.

இதன்மூலம் அதிகளவு தொலைபேசி இணைப்புகளையும், அதிக வினைத்திறன் கூடிய தகவல் தொழில்நுட்பம் முறைகளான - இன்ரரெட், ஈ-மெயில் என்பவற்றையும் அதிகளவானோர் குறைந்த செலவில் பெறக்கூடிய நிலை ஏற்படும்.

அதாவது, தகவல் பரிமாற்ற வேகம் தற்போதைய நிலையைவிடப் பல மடங்கு விரைவாக இருக்கும்.

இலங்கை ரெலிக்கொம் நிறுவனத்தால் தற்போது வழங்கப்படும் கம்பியில்லாத் தொலைபேசி இணைப்புகள் (மோட்ரெல்லா) மிகக் குறைந்த வினைத்திறன் உள்ளதால் மக்களால் பெரிதும் விரும்பப்படுவதில்லை.

இதற்குப் பதிலாக டிஜிற்றல் தொழில்நுட்ப முறையிலான கம்பியில்லாத் தரைத் தொலைபேசியையும் விரைவில் ஆரம்பிக்கத் திட்டமிட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இத்திட்டத்தை முற்றுமுழுதாக கிளிநொச்சி, யாழ்ப்பாணத்தில் நிறைவுசெய்து முடிக்கச் சுமார் ஒன்றரை வருடங்கள் தேவைப்படுவதாகவும் சகல வேலைகளும் ஒப்பந்த அடிப்படையில் இலங்கை ரெலிக்கொம் நிறுவனத்தால் வழங்கப்படுவதால், வேலைகள் யாவும் விரைவாக நிறைவுபெறும் என்று தெரிவிக்கப்படுகிறது.

மருத நம்பி

★

# சுனாமி அனர்த்தத்தில் பலியானோருக்கு புனர்வாழ்வுக்கழக ஏற்பாட்டில் அஞ்சலி

தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் ஏற்பாட்டில் சுனாமிப் பேரலை அனர்த்தத்தினால் உயிரிழந்த முன்பள்ளிச் சிறுவர்கள், ஆசிரியர்கள், மற்றும் பொதுமக்களின் 45ஆம் நாள் நினைவை முன்னிட்டு கடந்த 8ஆம் திகதி அஞ்சலி நிகழ்வுகள் பல்வேறு இடங்களிலும் நடைபெற்றன.

முல்லைத்தீவுப் பிரதேசத்தில் உயிரிழந்த முன்பள்ளி மாணவர்கள், ஆசிரியர்கள் பொதுமக்களை நினைவுகூரும் அஞ்சலி நிகழ்வுகள் முல்லைத்தீவு, சிலாவத்தைப் பாடசாலையில் நடைபெற்றது. இந்தப் பிரதேசத்தில் உயிரிழந்த சிறார்களினதும், ஆசிரியர்களினதும், திருவுருவப் படங்களிற்கு முன்பள்ளிக் கல்வி மேம்பாட்டு நிலைய இணைப்பாளர்கள், பெற்றோர்கள், ஆசிரியர்கள் எனப் பலரும் நினைவுச் சுடாகள் ஏற்றி, மலர்மாலைகள் அணிவித்து, மலர் அஞ்சலி செய்தனர்.

விசுவமடுப் பிரதேசத்திலும் உயிரிழந்த முன்பள்ளி மாணவர்கள், ஆசிரியர்களை நினைவுகூரும் நிகழ்வுகள் கல்லாறு சாந்தா முன்பள்ளியில் நடைபெற்றன.

இந்நிகழ்வில், முன்பள்ளிச் சிறார்கள், பெற்றோர்கள், போராளிகள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

இதேபோன்று, உயிரிழந்தவர்களை நினைவுகூர்ந்து - வடமராட்சி கிழக்கு, உடுத்துறை மகா வித்தியாலயத்திலும் நிகழ்வுகள் இடம்பெற்றன.

உயிரிழந்தவர்களின் திருவுருவப்படங்களிற்கு நினைவுச் சுடர்கள் ஏற்றப்பட்டு, மலரஞ்சலி செலுத்தப்பட்டது. தொடர்ந்து நினைவுரைகள் நிகழ்த்தப்பட்டன.

வவுனியா, சுத்தானந்த இந்து இளைஞர் மன்ற மண்டபத்திலும் - உயிரிழந்த, முன்பள்ளி மாணவர்கள், ஆசிரியர்கள், பொதுமக்களின் நினைவுகூரும் நிகழ்வுகள் நடைபெற்றன. (த-204-402)

# நெற்பயிர்களுக்கு நோய்கள்

முழங்காவில்,பெப்.15

மல்லாவி, துணுக்காய், வவுனிக்குளம் பகுதி நெல்வயல்களில் சந்துகுத்தி மற்றும் எரிநோய் வேகமாகப் பரவிவருகின்றது.

இதனால், விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். அடிக்கடி மழை பெய்துவருவதால், இந்த நோயைக் கட்டுப்படுத்தும் மருந்துகளும் விசிறிமுடியாதுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (த-323-204)

# முல்லைத்தீவுப் புனரமைப்புக்கு கனரக வாகனங்கள் கிடைத்தன

புதுக்குடியிருப்பு,பெப்.15

முல்லைத்தீவுப் பிரதேசத்தில் ஏற்பட்ட சுனாமி அனர்த்தம் காரணமாகப் பாதிக்கப்பட்ட இடங்களைப் புனரமைப்புச் செய்வதற்கென வன்னிப புனர்வாழ்வு அமைச்சும், புனர்வாழ்வு அமைச்சும் கனரக வாகனங்களை அனுப்பி உதவியுள்ளது என முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் திருமதி இமெல்லடா சுகுமார் தெரிவித்துள்ளார்.

புனர்வாழ்வு அமைச்சின் செயலாளரினால் 2 புல்டோசர், 5 டிப்பர் ஆகியனவும் வன்னிப் புனர்வாழ்வு அமைச்சினால் ஒரு றோலர், 2 டிப்பர், படகு ஓட்டுவதற்குத் தேவையான எரிபொருள் போன்றனவும் வழங்கப்பட்டுள்ளன. சுனாமி அனர்த்தத்தினைப் பார்வையிட்ட பினனரே வன்னிப் புனர்வாழ்வு அமைச்சர் நிசாட் பதியுதீன் மேற்படி கனரக வாகனங்களை அனுப்பிவைத்துள்ளார்.

இந்தக் கனரக வாகனங்கள் எமக்குக் கிடைத்த பின்னரே மக்களை மீள்குடியமர்த்துவதற்காகத் தெரிவுசெய்யப்பட்ட இடங்களைத் துப்புரவு செய்யும் பணிகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன என்று முல்லை மாவட்ட அரச அதிபர் தெரிவித்தார்.

மக்களை மீளக்குடியமர்த்துவதற்கு 2 ஆயிரம் வீடுகள் அமைத்துத் தருமாறு கோரிக்கை வீடுக்கப்பட்டுள்ளது. இவற்றை அமைப்பதற்கு அரசசார்பற்ற நிறுவனங்களான தமிழர் புனர்வாழ்வுக்கழகம், சேவாலங்கா, யுனிசெவ், வெல்விசன், யு.என்.டி.பி., கியூடெக், கெயர் போன்ற நிறுவனங்கள் உதவமுன்வந்துள்ளன என அரச அதிபர் மேலும் தெரிவித்துள்ளார். (த-203-353)




# கிளிநொச்சி, முல்லைத்தீவில் வீடமைப்புப் பணிகள் மும்முரம்

திருவையாறு,பெப்.15

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்கான குடியிருப்புகள் துரிதகதியில் அமைக்கப்பட்டு வருகின்றன. இந்தப் பணியினைத் தமிழர் புனர்வாழவுக் கழகம் அரசசார்பற்ற நிறுவனங்களான - உலக தரிசனம், கியூடெக் போன்றன முன்னெடுத்து வருகின்றன. பாதிக்கப்பட்ட மக்களை விரைவில் குடியமர்த்தவேண்டும் என்ற நோக்குடன் இந்த நிறுவனங்கள் இரவு பகலாக, வீடு அமைக்கும் பணியில் ஈடுபடுவதைக் காணமுடிகிறது.

ஒவ்வொன்றும் தலா 42 ஆயிரம் ரூபா செலவில் அமைக்கப்படும் வீடுகளின் கூரைகள் ஓலையால் வேயப்பட்டுள்ளன. நிலத்திற்குச் சிமெந்து இடப்பட்டு, அரைச்சுவர் எழுப்பப்பட்டுள்ளது.

இதேவேளை, புலம்பெயர்ந்து வெளிநாடுகளில் உள்ளவர்களில் சிலர், தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தினூடாக, வீடமைக்கும் பணிக்கு நிதி உதவிகளை வழங்கிவருகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. (த-392-204)


# மரதன் ஓட்ட வீரர்கள் மீது உழவு இயந்திரம் மோதியது!

## மாங்குளத்தில் சம்பவம்; இருவர் படுகாயம்!

மரதன் ஓட்டப் போட்டியில் கலந்துகொண்ட பாடசாலை மாணவர்கள் இருவர் மீது உழவு இயந்திரம் ஒன்று மோதியது. மாங்குளம் சந்தியில் கடந்த 11ஆம் திகதி இச்சம்பவம் இடம்பெற்றது. மாங்குளம் மகாவித்தியாலம் நடத்திய மரதன் ஓட்டப் போட்டியில் கலந்துகொண்ட அந்தப் பாடசாலையின் மூன்று மாணவர்கள் மீது வேகமாகப் வந்த உழவு இயந்திரம் மோதியதால் இருவர் படுகாயம் அடைந்தனர்.

காயமடைந்தவர்கள் உடனடியாக அங்குள்ள திலீபன் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டன. பின்பு மேலதிக சிகிச்சைக்காக கிளிநொச்சி மத்திய மருத்துவ மனைக்கு எடுத்துச்செல்லப்பட்டனர். சம்பவ தினம் காலை இம் மரதன் ஓட்டம் ஏ-9 பாதையில் உள்ள மன்னகுளம் சந்தியில் இருந்து ஆரம்பமாகி மாங்குளம் சந்தியில் முடிவடைய ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. முடிவிடத்திற்கு சமீபமாக வைத்தே மேற்படி விபத்துச் சம்பவம் இடம்பெற்றது. (த-88)





சுனாமி அனர்த்தத்தினால் சேதமடைந்த படகுகளைத் திருத்தியமைக்கவும் புதிதாகப் படகுகளை அமைப்பதற்குமான படகு கட்டும் தொழிற்சாலை ஒன்று வடமராட்சி கிழக்கு, தாளையடியில் அண்மையில் ஆரம்பிக்கப்பட்டது.

சேதமடைந்த படகுகளைத் திருத்தவும் புதிதாகப் படகுகளைக் கட்டுவதற்கும் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் அனுசரணையுடன் எம்.எம்.எஸ். நிறுவனத்தினால் வழங்கப்பட்ட பயிற்சிகளைப் பெற்ற பெண்கள் படகு திருத்தும் வேலைகளில் ஈடுபட்டிருப்பதைப் படங்களில் காணலாம்.

(படங்கள்: மு.கந்தசாமி - பரந்தன் செய்தியாளர்)

# ‘ஏழைகளின் பசு’ என்றழைக்கப்படுவது ஆடு அதனை வளர்த்துப் பயன்பல பெறலாம்

வரட்சியான பிரதேசங்களிலும் கூட மிக இலகுவாக வளர்க்கக்கூடிய பயன்தரும் விலங்கினங்களுள் ஒன்றுதான் ஆடு. அதிகளவு மூலதனம் இன்றி எமது பிரதேசங்களில் சுலபமாக வளர்க்கக் கூடியதாக இருப்பதால் ஆடு ‘ஏழைகளின் பசு’ என அழைக்கப்படுகின்றது.

பால் தேவைக்கும், இறைச்சித் தேவைக்கும் என நம்மவர்களால் வளர்க்கப்பட்டுவரும் ஆடுகள் பெரும்பாலும் வெள்ளாடு, செம்மறி ஆடு என இரு இனங்களாகக் காணப்படுகின்றன. இவற்றுள் வெள்ளாட்டு வளர்ப்புக்கே இலங்கையில் முக்கியத்துவம் கொடுக்கப்படுகின்றது.

இலங்கை மக்களால் நுகரப்படும் ஆட்டிறைச்சியில் எண்பது சதவீதமானவை வெள்ளாட்டில் இருந்தே பெறப்படுவது வெள்ளாட்டு வளர்ப்பின் முக்கியத்துவத்துக்குச் சான்றாக விளங்குகின்றது.

வெள்ளாடு வளர்ப்பிற்குத் திறமையுள்ள ஊழியர்களோ, போதியளவு அனுபவமோ தேவையில்லை. மாடு, எருமை போன்ற ஏனைய விலங்கு வளர்ப்புடன் ஒப்பிடுகையில் ஆடு வளர்ப்பில் பாரதூரமான பிரச்சினைகள் எதுவும் இருப்பதில்லை. உணவூட்டலிலும் அதிக கவனம் தேவையில்லை. நோயின் தாக்கமும் இவற்றுக்குக் குறைவு என்றே கூறலாம். ஆடுகள் கடுமையான காலநிலைகளுக்குக் கூட ஈடுகொடுத்து நிற்கக்கூடிய கடினமான விலங்குகள்.

எளிமையான வீடமைப்பு ஆடு வளர்ப்புக்குப் போதுமானது. சிறு கொட்டில்களிலும், வீட்டுத் தாழ்வாரங்களிலும் கூட ஆடுகளைக் கட்டி வளர்க்கமுடியும். எனவே, சிக்கனமாக, அதிக செலவுகள் இன்றி ஆடுவளர்ப்பை மேற்கொள்ள முடியும்.

### இலகுவான வளர்ப்புமுறை

எமது பிரதேசங்களிலே ஆட்டிறைச்சியின் கேள்வி அதிகரித்துக்கொண்டே செல்கின்றது. இதன் காரணமாக ஆடுகளை எவ்விதப் பிரச்சினைகளும் இன்றி இலகுவாக விற்பனை செய்துகொள்ளமுடியும். அதேவேளை, இவற்றின் விலையும் அதிகம். சுருக்கமாகச் சொன்னால் - ஆடு வளர்ப்பு மிக இலாபகரமான ஒரு தொழிலாகும். ஒரு சாதாரண பசுவை வளர்த்துப்

**வி. பி. சர்மா**

பராமரிப்பதற்குப் பதிலாக 4,5 ஆடுகள் வளர்ப்பது இலகுவானதாகும்.

ஈரலிப்பான அல்லது குளிர்ரான சூழ்நிலைகள் ஆடுகளுக்கு உடல்நலக் குறைவை ஏற்படுத்தும். எனவே, இலங்கையில் உலர்வலயப் பிரதேசங்களைப் பொறுத்தவரையில், ஆடு வளர்ப்பு முக்கியத்துவம் பெறுகின்றது.

உலர்வலயக் காலநிலை பெரும்பாலும் 75 அங்குலத்திலும் குறைவான பரம்பலற்ற வருடாந்த மழைவீழ்ச்சியைச் சிறப்பியல்பாகக் கொண்டது. இதன் காரணமாகப் பெருமளவு நிலங்கள் நீர்ப்பாசன வசதியற்று வெறும் தரைகளாகவே உள்ளன. பற்றைக் காடுகளாகவும் காணப்படுகின்றன. குறைவான மழைவீழ்ச்சி காரணமாகப் பசும்புல் உற்பத்தியும், தரமும் மிகக்குறைவானவையாகவே உள்ளன. ஏனைய விலங்கினங்கள் உண்ணமுடியாத தரம் குறைந்த புற்களை ஆடுகள் இலகுவாக உண்பதால் ஆடுவளர்ப்புக்குப் பொருத்தமான பிரதேசங்களாக இவற்றைக்கொள்ளலாம்.

வரட்சிக் காலங்களில் புல், பூண்டுகள், முட்கள் போன்றவற்றை உண்ணக்கூடிய பிளவுபட்ட உதட்டின் அமைப்பினை ஆடுகள் இயல்பாகவே கொண்டுள்ளன. ஆடுகள் கடித்துண்ணிகள் (Browsers) ஆகும். இங்குள்ள வரண்ட நிலத் தாவரங்களையும் பற்றைகளையும் இவை விரும்பி உண்ணுகின்றன. ஓர் ஏக்கர் பற்றைக் காட்டு நிலப்பரப்பில் 3,4 ஆடுகளைத் தாராளமாக வளர்க்க முடியும். எந்தவொரு வருமானத்தையும் தரமாட்டாத இந்த நிலங்களைப் பொறுத்தவரையில் ஆடு வளர்ப்பு மிகமிக இலாபகரமானது.

### ஆட்டுப்பாலின் சிறப்பு

ஆட்டுப்பால் போஷணை பெறுமதி வாய்ந்தது. நோயாளர்களையும், நலிந்தோரையும் குணப்படுத்தும் சக்திவாய்ந்தது. இதன் காரணமாகக் கிரேக்க மகாகவி ஹோமர் ஆட்டுப் பாலைக் ‘கடவுளின் உணவு’ என்று கூறியுள்ளார்.

ஆட்டுப்பாலின் சிறப்பு அம்சங்களைத் தாய்ப் பாலுடனும் பசுப்பாலுடனும் ஒப்பிடும் அட்டவணை இங்கு தரப்படுகின்றது.

| | ஆட்டுப்பால் | தாய்ப்பால் | பசுப்பால் |
|---|---|---|---|
| நீர் | 87.9 | 88.2 | 86.4 |
| கொழுப்பு | 3.9 | 3.7 | 3.6 |
| புரதம் | 3.2 | 1.3 | 2.7 |
| கல்சியம் | .19 | .1 | .1 |
| விற்றமின் A | 39 | 31 | 21 |
| விற்றமின் B | 68 | 17 | 45 |
| விற்றமின் B12 | 210 | 25 | 159 |
| விற்றமின் C | 2 | 3.6 | 2 |
| பொஸ்பரஸ் | .27 | .06 | .20 |
| சக்தி (கலோரி) | 70 | 68 | 69 |

ஆட்டுப்பாலில் உள்ள கொழுப்பு, புரதத் துணிக்கைகள் என்பன நுண்ணிய நிலையில் இருப்பதால் பசுப்பாலைவிடக் குறைந்த நேரத்தில் இலகுவாக ஜீரணமாகிறது. ஆடுகள் இலை, குழைகளை விரும்பி உண்பதால் அதன் பால் கூடியளவு கனிப்பொருள்களைக் கொண்டது. ஒன்பது வகைக் கனிப்பொருள்கள் இதில் உண்டு. குழந்தைகளுக்கும், குடற்புண்கள் உடையவர்களுக்கும், நோயாளர்களுக்கும், ஜீரணக் குறைபாடுடையவர்களுக்கும் ஆட்டுப்பால் சிறந்ததோர் உணவாகும்.

### ஆடுகளின் வகைகள்

சுதேச வர்க்கத்தைக் கொண்ட ஆட்டினங்கள் பிறப்புரிமைத் தரம் குறைந்தமையால் அவற்றின் உடலும் சிறிதாகக்காணப்படும் இவை குறைந்தளவு இறைச்சியையும், பால் உற்பத்தியையும் கொண்டிருக்கும்.

ஆனால், இந்தியா மற்றும் ஐரோப்பிய நாட்டு ஆட்டினங்கள் அதிகளவு பால் உற்பத்தியையும், இறைச்சியையும் கொண்டவை. ஜமுனாபாரி, சாணன் ஆகிய இனங்களும் கொட்டுக்கச்சிய என்னும் உள்ளூர் இன ஆடுகளுமே பெரும்பாலும் நமது பிரதேசத்தில் வளர்க்கப்படுபவை.

**ஜமுனாபாரி:** இது இந்தியாவைப் பிறப்பிடமாகக் கொண்டது.

உலர்வலய கரடுமுரடான நிலைகளுக்குப் பொருத்தமானது. இறைச்சி, பால் என்ற இரு நோக்கு இன ஆடுகள் இவை. கிடாய்கள் முதிர்நிலையில் 75 - 100 கிலோ கிறாம் நிறையும் மறிகள் 50 - 70 கிலோகிறாம் நிறையும் கொண்டவை. கிளிச்சொண்டு போன்ற வளைந்த தோற்றத்தையுடைய நெற்றியைக் கொண்டவை. மறி ஆட்டில் இருந்து சராசரியாக ஒரு நாளுக்கு ஒன்றில் இருந்து இரண்டு லீற்றர் வரையான பாலைப் பெறமுடியும்.

ஜமுனாபாரி ஆடுகளுக்குச் சீரான நிறம் எதுவும் இல்லையாயினும் மண்ணிறம், கறுப்பு, கபில அடையாளங்களைக் கொண்ட வெள்ளை நிறத்தில் இவை காணப்படலாம். குறுகிய முக அமைப்பு (Muzzle), உட்குவிந்த முகம், நீளமான காதுகள் கொண்ட இவை வருடத்தில ஒருமுறை மட்டுமே குட்டிகளை ஈனுகின்றன.

**சாணன்:** இவை ஐரோப்பிய வர்க்க ஆடுகள. பாலுக்காக வளர்க்கப்படும் சிறந்த இனம். இவற்றின் பாலில் 3-4 வீதமான கொழுப்புச்சத்து அடங்கியுள்ளது. வெள்ளைநிறம், அமைதியான சுபாவம், பெரிய பால்மடி, கட்டையான உருவம் கொண்டவை. ஒரு நாளுக்குச் சுமார் இரண்டில் இருந்து 4 லீற்றர் வரையான பாலினைப் பெறமுடியும்.

இவை இரண்டுமே பரந்தளவில் இலங்கையில் வளர்க்கப்படும் வெளிநாட்டு இனங்களாகும். இவற்றைவிட கமேரி, பாபரி (Barbari) போன்ற இந்திய வர்க்க ஆடுகளும், ரொகன் பேக் (Toggen Berg) அங்குளோ - நுபியன் (Anglo-Nubian) போன்ற ஐரோப்பிய இனங்களும் இறைச்சிக்காகவும் பாலுக்காகவும் குறைந்த அளவில் வளர்க்கப்படுகின்றன.

**கமமும் புலமும்**

தயாரிப்பு: ஜெயஸ்ரீ


### கவனிக்க வேண்டியவை

★ **உற்பத்தித் திறனை அதிகரித்தல்:-**
நல்லின உற்பத்தித்திறனுடைய இனங்களைத் தெரிவுசெய்து அவற்றுடன் கலப்புச் செய்து உற்பத்தி கூடிய இனவர்க்கங்களை உருவாக்குதல் வேண்டும்.

★ **நிறைவான தீவனம் இடுதல்:-**
செறிவுத்தீவனம் மற்றும் இலை, குழைகள் ஆகியவற்றை நிறைவாகக் கொடுத்துக் கூடிய பயன்களைப் பெறவேண்டும்.

★ **குடற்புழு நீக்கம் செய்தல்:-**
மூன்று மாதங்களுக்கு ஒருமுறையாவது குடற்புழுவுக்கான மருந்து கொடுத்து குடற்புழு நீக்கம் செய்தல் வேண்டும்.

★ **நோய்த்தடுப்புச் செய்தல்:-**
பொதுவாக ஆடுகளுக்கு நோய்கள் ஏற்படுவது குறைவு. வெளிநாட்டு இன ஆடுகளுக்கு ‘ஆட்டுச் சோர்வுவாதம்’ எனும் நோய் ஏற்படலாம். ஆனால், கலப்பின ஆடுகள் இந் நோய்க்கு எதிர்ப்பைக் காட்டிவருவது சகஜம். எப்படி இருப்பினும் உரிய காலங்களில் போடப்படவேண்டிய தடுப்பூசிகளை ஆடுகளுக்குப் போட்டு, நோய்கள் ஏற்படாமலும், இறப்பு வீதங்களைக் குறைக்கவும் செய்யவேண்டும்.



### சிறந்த பராமரிப்பு அவசியம்

மறி ஆடுகளைச் சினைப்பட்ட காலத்திலும், குட்டிகளை ஈன்றகாலத்திலும், கடாய் ஆடுகளை இறைச்சிக்காக வளர்க்கும் போதும் அவற்றுக்கு ஆண்மை நீக்கம் செய்யும்போதும் மிகுந்த பராமரிப்பு அவசியமானது.

### தொழுவம் அமைத்தல்

நில மட்டங்களில் அமைந்த வீடமைப்புகளாகவும் தளமேடைகளாகவும் தொழுவங்கள் அமைக்கப்படலாம். தொழுவங்கள் குளிர் காற்றுப்படாத சுத்தமான உலர்ந்த இடமாக இருக்கவேண்டும். மழைகாலங்களில் வெள்ளம் படாதவாறு இருக்கவேண்டும. போதிய வெளிச்சம், காற்றோட்டம் என்பன இருக்கவேண்டும். தீவனத்தொட்டிகள் அமைத்துத் தீவனம் வழங்க வேண்டும். ஓர் ஆட்டுக்கு 8-12 சதுரமீற்றர் (6 x 8 சதுர அடி) இடப்பரப்பு இருக்கவேண்டும்.

### நன்மைகள்

★ குடும்பப் பொருளாதாரம் உயரும்

★ தரிசு நிலங்களின் பயன்பாடுகள் அதிகரிக்கும்.

★ பால், இறைச்சி, தோல், உரோமம் போன்றவற்றைப் பெற்றுக்கொள்ளலாம்.

★ ஏனைய விலங்குகளுடன் ஒப்பிடும் போது பட்டி விரைவாகப் பெருகும் தன்மையுடையது.

★ ஆட்டெரு நைதரசனை அதிகமாகக் கொண்ட இயற்கை உரமாகும்.

★ மீன் பண்ணைகளுக்கு ஆட்டெரு தீவனமாகப் பயன்படக்கூடியது.

### ஆட்டுப்பாலின் மருத்துவகுணங்கள்

★ வாதநோயினைத் தீர்க்கக் கூடியது.

★ தோல் நோய்கள் வராமல் தடுக்கும்.

★ ஒவ்வாமை ஏற்படாது.

★ தொய்வு, எக்சிமா, சொறி உள்ளவர்களுக்கு மிகவும் சிறந்த உணவு.

★ இலகுவில் சமிபாடடையும் தன்மையுடையது.

வீடுகளிலேயே இலகுவாக வளர்த்துக் கொள்ளக்கூடிய விலங்கு ஆடு. நாம் ஒவ்வொருவரும் வீட்டுக்கொரு ஆடுவளர்த்துக் கொள்வதனால் எமது குடும்பத்துக்குப் போஷாக்கு நிறைந்த உணவைப் பெறக்கூடியதாக இருப்பதோடு, தேசிய பாலுற்பத்தி அதிகரிப்புக்கும் வழிவகுப்பதாக அமையும். எனவே, ஆடுவளர்ப்போம், பாலுற்பத்தியைப் பெருக்குவோம். ★

SALE SALE SALE SALE SALE SALE SALE

10%முதல்40% வரை

விலைக்கழிவில்:-

பாடசாலை மாணவருக்கானகறுப்பு,வெள்ளை சப்பாத்துக்கள், ஆண்கள், பெண்களுக்கான பாதணிகள் மலிவு விலையில் கொள்வனவு செய்திட நாடுங்கள்

DSI காட்சி அறை

426, ஆஸ்பத்திரிவீதி

(பஸ்நிலையம் முன்பாக),

யாழ்ப்பாணம். T.P: 6809

DSI SUPERSPORT

DSI RANPA

பாதணிகள் மலிவு விற்பனை



# சங்கக்கடை உடைத்துத் திருடியோருக்கு 3 லட்சத்து 85 ஆயிரம் ரூபா அபராதம்

வலி.வடக்கு,பெப்.15

சுன்னாகம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கததின் ஏழாலைக் கிளையை உடைத்துத் திருடிய மூவருக்கு 3 லட்சத்து 84ஆயிரத்து 913 ரூபா 50 சதம் அபராதம் விதிக்கப்பட்டிருககிறது.

மல்லாகம் மாவட்ட நீதிமன்ற பதில் நீதிவான் திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரம் இந்த அபராதத் தொகையை விதித்தார். ஊரெழு மேற்கைச் சேர்ந்தவர்களான து.குகனேஸ்வரன், செ.சந்திரன் மற்றும் ஊரெழு வடக்கைச் சேர்ந்த தி.சிவகுமார் ஆகியோருக்கே இந்தத் தண்டனை விதிககப்பட்டது.

அபராதத் தொகையை இவர்கள் மூவரும் தலா ஒரு லட்சத்து 28 ஆயிரத்து 304 ரூபா 50 சதம் வீதம் செலுத்தவேண்டும் என்று நீதிவான் உத்தரவிட்டார்.

உரிய தண்டனைப் பணத்தொகையை செலுததத் தவறினால் ஒரு வருட பிணைத் தண்டனை அனுபவிக்கவேண்டும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும் ஐந்து வருடகாலத்திற்கு ஒத்திவைக்கப்பட்ட ஒரு வருட கடூழிய சிறைத்தண்டனையும் விதிக்கப்பட்டுள்ளது.

மற்றுமொரு சந்தேக நபரான மயிலங்காடு ஏழாலையைச் சேர்ந்த வேலாயுதம் சதாசிவம் மீது குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்படாமையால் உரியவர் நீதிமன்றினால் விடுதலை செய்யப்பட்டுள்ளார். (த-86)

# மானிப்பாய் இந்து ஆசிரியர்களின் இடமாற்றம் ரத்துச்செய்யப்பட்டது

## தமிழர் ஆசிரியர் சங்கத்தின் ஆட்சேபத்தால்

மானிப்பாய் இந்துக் கல்லூரியிலிருந்து 15 ஆசிரியர்கள் திடீரென இடமாற்றம் செய்யப்பட்டமைக்கு இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் கடும் ஆட்சேபம் தெரிவித்ததை அடுத்து வடக்கு - கிழக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளரினால் அந்த இடமாற்றம் ரத்துச் செய்யப்பட்டுள்ளது.

இடமாற்றம் செய்வதற்குரிய நடைமுறைகளைப் பின்பற்றாமலும் இடமாற்றச் சபையைக் கூட்டாமலும் இந்த இடமாற்றம் வழங்கப்பட்டமை குறித்து இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச்செயலாளர் த.மகாசிவம், மாகாணக் கல்விப் பணிப்பாளருக்கு எடுத்துக்கூறினார்.

இதனையடுத்து மேற்படி இடமாற்றம் ரத்துச் செய்யப்பட்டுள்ளதுடன் இதுதொடர்பாக அறிக்கை சமர்ப்பிக்குமாறு வலிகாமம் வலயக் கல்விப்பணிப்பாளருக்கு பணிப்பு விடுக்கப்பட்டுள்ளது.

மானிப்பாய் இந்துக்கல்லூரியில் இருந்து அண்மையில் 15ஆசிரியர்கள் திடீரென வேறு பாடசாலைகளுக்கு இடமாற்றம் செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (10-11)

# அம்பாறையில் நெல்கொள்வனவுக்கு 5 கோடி ரூபாவை அரசு ஒதுக்கியது

அம்பாறை மாவட்டத்திலிருந்து பெரும்போக நெல்லைக் கொள்வனவு செய்ய அரசு 5 கோடி ரூபாவை ஒதுக்கியுள்ளது.

கடந்த வாரம் அம்பாறைக்கு விஜயம் செய்த விவசாய கால்நடை, காணி நீர்ப்பாசன அமைசசர் அனுரகுமார திஸ்ஸநாயக்க மேற்படி தீர்மானத்தை எடுத்துள்ளார்.

அமைச்சருடன் விவசாய உற்பத்தி அபிவிருத்தி மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி பிரதியமைச்சர் தீபாவ கம்வத், அம்பாறை எம்.பி. வசந்த பியதிஸ்ஸ, அம்பாறை அரச அதிபர் ஹேரத் அபேதிர ஆகியோரும் இச்சந்திப்பில் கலந்துகொண்டனர்.

பெரும்போக வேளாண்மை அம்பாறை மாவட்டத்தில் 65 ஆயிரம் ஹெக்ரேயரில் அறுவடை செய்யப்பட்டது.

அறுவடை செய்யப்பட்ட நெல்லைக் கொள்வனவு செய்ய முதற்கட்டமாக 5 கோடி ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

இந்த நிதி கூட்டுறவுச்சங்கங்கள், விவசாய சேவை நிலையங்கள், விவசாய அமைப்புகளூடாகப் பகிர்ந்தளிக்கப்படும். இவை விவசாயிகளிடமிருந்து நெல்லைக் கொள்வனவு செய்யும்.

விவசாய அமைச்சு 20 ஆயிரம் மெற்றிக்தொன் நெல்லை அம்பாறை மாவட்டத்திலிருந்து பெற நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் அமைச்சர் கூறியுள்ளார். (த)

# ஹற்றனைக் கலக்கும் ஆபாசப் பட விவகாரம்

கொழும்பு,பெப்.15

ஹற்றன் நகரில் பாடசாலை மாணவிகளை வைத்து ஆபாசப் புகைப்படங்கள் பிடிக்கப்படுகின்றன என அதிர்ச்சிகரமான தகவல் வெளியாகியுள்ளது. சில புகைப்பட நிலையங்கள் இந்தத் தொழில் மூலம் பெரும் பணம் சம்பாதிக்கின்றனவாம்.

தூர இடங்களிலிருந்து பாடசாலைகளுக்கும், ரியூசன் வகுப்புகளுக்கும் ஹற்றன் வரும் உயர்வகுப்பு மாணவிகளிடம் ஸ்ரூடியோக்காரர்களின் தரகர்கள் கவர்ச்சியாகப் பேசித் தமது வலைக்குள் சிக்கவைத்து விடுகின்றனராம்.

மலர்க்கொத்துகள் மற்றும் பெறுமதியான பரிசுப பொருள்களை வழங்கி, அப்பெண்களை மயக்கிவிடுகிறார்கள் இவர்கள். சில நாள்களில் இந்த நட்பைக் காதல் என்று கூறிப் பெணகளை ஏமாற்றித் தாம் அழைக்கும் இடங்களுக்கெல்லாம் அவர்களைக் கூட்டிச்செல்கின்றனர்.

இவ்வாறு மதுடிக்கு மயங்கும் மாணவிகளைத் தனிமையான இடங்களுக்கு அழைத்துச் சென்று மிகவும் இரகசியமான முறையில் ஆபாசப்படங்களை எடுத்துவிடுகின்றனராம்.

சிக்கும் பணக்காரப் பெண்களிடம் இப்படங்களைக் காட்டிப் பணம் பறிக்கும் செயல்களும இடம்பெறுகின்றனவாம். ஏனையவை வெளிநாட்டு உல்லாசப் பயணிகளுக்குப் பெரும் விலைக்கு விற்கப்படுகின்றனவாம்.

மிகவும் இரகசியமாக நடந்துவந்த இவ் வியாபாரம் இப்பொழுது அம்பலப்படுத்தப்பட்டுள்ளது. சில மனிதநேயம் கொண்ட இளைஞர்கள் இது தொடர்பாகத் துண்டுப் பிரசுரங்களை விநியோகித்து வருகின்றனர். பெற்றோர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் இத்தொழிலில் ஈடுபடுபவர்களுக்கும் இதன்மூலம் அவர்கள் எச்சரிக்கையும் விடுத்துள்ளனர். இதுவிடயமாகக் ஹற்றன் பொலீஸார் இரகசியமாக விசாரணைகளை மேறகொண்டுள்ளனர் எனவும் தெரியவந்துள்ளது. (த-க)

# 2ஆம் கட்டமாக 'ஹியூமெடிக்கா' படகுகள், வலைகளை வழங்கும்

வடமராட்சி வடக்குப் பிரதேசத்தில் பாதிக்கபட்ட மீனவர்களுக்கு இரண்டாம் கட்டமாக 20 மீன்பிடிப்படகுகளையும் அவற்றிற்கான வலைகளையும் சர்வதேச தொண்டர் நிறுவனமான ஹியூமெடிக்கா நிறுவனம் வழங்கவுள்ளது.

இப்படகுகளையும் வலைகளையும் இந்நிறுவனம் ஏ-9 பாதை ஊடாக எடுத்துவந்து வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர் சங்க சமாசத்திடம் கையளித்துள்ளது.

இவை மீனவர்களுக்கு வைபவரீதியாக விரைவில் வழங்கப்படவுள்ளன.

ஹியூமெடிக்கா நிறுவனம் ஏற்கனவே இப்பிரதேசத்தில் பாதிக்கப்பட்ட 14 மீனவர்களுக்கு 14 படகுகளையும் அவற்றிக்கான மீன்பிடி வலைகளையும் முதற்கட்டமாக வழங்கியிருந்தமை தெரிந்ததே. (த-173)


**இதய அடைப்பு நோய் குணமாக வேண்டுமா?**

**இதய அடைப்பு நோய்க்காக வாழ்நாள் முழுவதும் சிகிச்சை பெறவேண்டியதில்லை. எங்களுடைய ஆயுர்வேத மருத்துவம் மூலம் அதனைச் சில வாரங்களில் குணமாக்கலாம்.**

**இதய அடைப்புத் தொடர்பான சிகிச்சைகளை நாங்கள் உரியமுறையில், குறைந்த செலவில் வழங்குகிறோம். விவரங்களுக்கு.**

FAIR PHARMA (PVT) LTD
(MANUFACTURERS OF AYURVEDIC MEDICINES) ABOL APPROVED COMPANY
Level 5/ East Tower/1C, WORLD TRADE CENTER, COLOMBO - 01,
Phone: 5517897, 5551879, Fax: 5517756
E-mail: fppvtl@lankabellnet.com Website:www.fppvtl.org (சி-40949)


# வாசகர் திருமுகம்

## ரயர்களைக் கண்டபடி எரிப்பது சுற்றுச் சூழலுக்கு உகந்ததல்ல

கடந்த எட்டாம் திகதி புனாணையில் கொல்லப்பட்ட விடுதலைப் புலிகளின் மட்டகளப்பு - அம்பாறை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் கௌசல்யனுக்கு அஞசலி தெரிவித்துக் குடாநாடெங்கும் கடந்த பன்னிரண்டாம் திகதி ஹர்த்தால் அனுஷடிக்கப்பட்டது.

அன்றைய தினம் குடாநாட்டின் பல இடங்களிலும் வீதியில் ரயர்கள் போட்டு எரிக்கப்பட்டன. எனினும், கடந்த முறை எரித்த ரயர்களைவிட இம்முறை குறைவாகவே எரிக்கப்பட்டன என்பது மகிச்சியுடன் குறிப்பிட வேண்டிய ஒன்று.

ரயர் கொளுத்தும் கலாசாரம் கிழக்கு மாகாணத்திலிருந்தே யாழ்ப்பாணத்திற்கும் இறக்குமதி செய்யப்பட்டது. ஆரம்பத்தில் கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம் பிரதேசங்களில் ஹர்த்தால் அனுஷ்டிக்கப்படும் போது, வீதிப்போக்குவரத்தைத் தடைசெய்வதற்காக வீதிகளில் ரயர்களைப் போட்டுக் கொளுத்துவது வழக்கம்.

இந்த ரயர் கலாசாரம் இப்போது யாழ்ப்பாணத்திற்கும் இறக்குமதி செய்யப்பட்டிருப்பது வருந்தத்தக்க விடயம். வீதியில் ரயர்களைப் போட்டுக் கொளுத்திவிட்டுச் சுற்றாடல்தினம் கொண்டாடுவதில் அர்த்தமில்லை.

வருடந்தோறும் யாழ். பல்கலைக்கழகத்தில் சுற்றுச்சூழல் மாநாடு நடைபெறுகிறது. ஆனால், ஒவ்வொரு ஹர்த்தாலின் போதும் பரமேஸ்வராச் சந்தியில் ரயர்கள் கொளுத்தப்படுகின்றன.

கடந்த பன்னிரண்டாம் திகதியும் யாழ்ப்பாணம் சிவன் கோயில் - கஸ்தூரியார் வீதிச சந்தியில் சில இளைஞர்கள், ஒழுங்கை ஒன்றுக்குள் இருந்து பென்னாம்பெரிய ரயரகளை உருட்டிக்கொண்டுவந்து கொளுத்திக்கொண்டிருந்தனர்.

அவர்களை ரயா கொளுத்தவேண்டாம் என்றும், ரயர் கொளுத்துவதால் சூழல மாசடைகிறது எனவும் கூறினேன்.

அதற்கு அவர்கள், இன்று ஹர்த்தால் நீங்கள் போய் வீட்டிலிருங்கள் என்றார்கள். ஒருசிலர் சண்டித்தனப் பாணியிலும் பேசினர். ஒருவர் தூஷண வார்த்தைகளாலும் ஏசினார்.

பரமேஸ்வராச் சந்தியில் நடைபெற்ற சிறு சம்பவம் ஒன்றை இங்கு நினைவு கூருவது பொருத்தமாக இருக்குமென நினைக்கின்றேன். ஒருமுறை பரமேஸ்வராச் சந்தியில் பல்கலைக்கழக மாணவர்கள் வீதியைத் தடைசெய்தபோது அங்கு வந்த போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு அதிகாரி ஒவ் புறுண்டம் அங்கு நின்ற மாவட்டப் பொறுப்பதிகாரியைப் பார்த்து This is not hartal this is Violence (அதாவது இது ஹர்த்தால் அல்ல; வன்செயல்) என்று கூறினார்.

பன்னிரண்டாம் திகதி நடைபெற்ற ஹர்த்தாலின் போது நகரப்பகுதியிலும் ஏனைய இடங்களிலும் ரயர்கள் எரிக்கப்பட்டமை குறித்து மக்கள் தரப்பில் விசனம் தெரிவிக்கப்பட்டது. ஹர்த்தாலுக்கு மக்கள் முழு ஆதரவு கொடுத்து அது வெற்றிகரமாக அமைந்தவேளை, ரயர் எரிப்பு ஒரு கரும்புள்ளியைக் குத்திவிட்டதாகப் பலரும் கருத்துவெளியிட்டனர். அவசர தேவை கருதியே மக்களில் சிலர் வீதிகளில் பயணம் செய்ய நேரிட்டிருக்கலாம். ரயர்களை எரித்தமையால் அக்கம் பக்கம் மட்டுமன்றி வெகுதூரத்திலும் சூழல் பாதுகாப்பு - சுகாதாரம் கெடுதல் - ஏற்பட்டது கவனத்தில் கொள்ளப்படவேண்டிய ஒன்றாகும்.

ஹர்த்தால் நாள்களில் மக்களுக்குப் பாதிப்பு இல்லாமல் இளைஞர் குழுக்கள் கட்டுப்பாட்டுடன் செயற்படப் பார்த்துக்கொள்வது சமூக அக்கறை உள்ள எல்லோரதும் கடமையாகும்.

**நல்லூர். ந.பரமேஸ்வரன்.**

## தபால் அதிகாரிகளுக்கு நன்றி

15.12.2004ஆம் திகதியில் 'உதயன்' பத்திரிகையில் "கொடிகாமம் வீட்டில் இருந்து தபாற்கந்தோர் இடம் மாறுமா?" என்னும் தலைப்பில் எனது கடிதம் பிரசுரமாகியதன் பின், யாழ்ப்பாணம் தபால்திணைக்களத்தினர் சுறுசுறுப்பாக இவ்விடயத்தில் இயங்கியதுடன், நானும் கொழும்பில் தபால்மா அதிபர், பிரதித் தபால்மா அதிபர் (செயல்) அவர்களுடன் தொடர்புகொண்டு நெருக்குதல் கொடுத்தமையினாலும், வீட்டை மீளப் பெற்று, வீடு வேண்டியவர்களிடம் ஒப்படைக்கக்கூடியதாயிருந்தது. பிரதித் தபால்மா அதிபர் (செயல்) அவர்களோடு உரையாடும்போது யாழ்ப்பாணக் காரியாலயத்திலிருந்து கோரப்பட்ட ஆவணங்கள் உரிய நேரத்தில் அனுப்பப்படவில்லை என்பதை ஊகிக்கக்கூடியதாகவிருந்தது. இக்காரியாலயத்தால் ஏற்படுத்தப்பட்ட காலதாமதத்தால் வீட்டை வேண்டியவர்களுக்கு உரிய நேரத்தில் ஒப்படைக்க முடியாமைக்கு மனம் வருந்துவதுடன், அவர்களுக்கு ஏற்பட்ட அசௌகரியத்திற்கும் மனக்கஷ்டத்துக்கும் மன்னிப்புக் கோருகிறேன். மேலும் பொறுமையின் எல்லைக்கப்பால் தள்ளபட்டும் அவர்கள் தொடர்ந்தும் பொறுமை காத்து உதவியமைக்கு நன்றியையும் இததருணத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். எனது கடிதத்தை 'உதயன்' பத்திரிகையில் பிரசுரித்து உதவியமைக்கு எனது மனமுவந்த நன்றியை ஆசிரிய பீடததுக்குத் தெரிவிப்பதுடன், பாதிக்கப்பட்ட மக்களுக்கு 'உதயன்' பணி தொடர வாழ்த்துகிறேன்.

**கொழும்பு-6 வ.சோமசுந்தரம்.**

## விதவைகள், அநாதைகளின் ஓய்வூதிய நிலுவை எப்போது?

ஓய்வூதியர்களின் முரண்பாடுகளை நேர்சீர் செய்வதற்கு ஓய்வூதியத் திணைக்களப் பணிப்பாளர் திலகரத்னாவும் அத்திணைக்கள அதிகாரிகளும் கடந்த ஆண்டு வைகாசி மாதம் யாழ்.செயலகத்தில் பயிற்சிப் பட்டறை நடத்தியமை எல்லோரும் அறிந்த விடயம்.

1996.12.31ஆம் திகதிக்கு முன்னர் அரச சேவையில் இருந்து இளைப்பாறியுள்ள அரச ஊழியர்களுக்கு வழங்கப்பட்டு வரும் ஓய்வூதியக் கொடுப்பனவுகளில் காணப்படும் முரண்பாடுகளைச் சீர்ப்படுத்தி ஓய்வூதியர்கள் நியாயமான முறையில் கொடுப்பனவுகளைப்பெற வழிசெய்யும் அரசின் திட்டத்திற்கமைய ஓய்வூதியச் சுற்றறிக்கை 6/2004 வெளியிடப்பட்டது.

இதன் பிரகாரம் உயிருடன் இருக்கும் ஓய்வூதியர்களின் ஓய்வூதிய நிலுவை மட்டுமே வழங்கப்பட்டன. ஆனால், விதவைகள் அநாதைகள் ஓய்வூதியம் இதுவரையில் வழங்கப்படவில்லை. இது ஓய்வூதியத்திணைக்களத்தின் குறைபாடா? அல்லது யாழ். செயலகத்தின் அசமந்தப் போக்கா? அல்லது 'விதவைகள், அநாதைகள் தானே' எனற அதிகாரிகளின் அசமந்தப் போக்காக இருக்கலாம் எனவும் அறியமுடிகின்றது.

எனவே, விதவைகள், அநாதைகள் ஓய்வூதியக் குறைபாட்டை நிவர்த்தி செயவதற்கு யாழ். மாவட்ட ஓய்வூதியர் சங்கம் யாழ்.செயலகத்திற்கு அழுத்தம் கொடுக்க வேண்டும்.

**கரவெட்டி. பாதிக்கப்பட்ட ஓய்வூதியர்.**

# அரசியல் நடவடிக்கைகளுக்கு முன் அனுமதி தேவையில்லை

## தமிழ்ச்செல்வன் தெரிவிப்பு

மட்டக்களப்பு,பெப்.15

அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடும் விடுதலைப் புலிகளின் அரசியல் பிரிவு உறுப்பினர்கள் சுதந்திரமாகச் சென்று தமது நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும்.

அதற்கு யாரிடமும் பாதுகாப்பு முன் அனுமதி பெறவேண்டிய அவசியம் இல்லை:

இவ்வாறு தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தெரிவித்துள்ளார்.

விடுதலைப் புலிகளின் மட்டு-அம்பாறை அரசியல் துறைப்பொறுப்பாளர் கௌசல்யன் படுகொலையையடுத்து கருத்து வெளியிட்டிருந்த இராணுவப் பேச்சாளர், கௌசல்யனின் பயணம் குறித்து முன்னரே தமக்கு அறிவிக்கப்படவில்லை என்றும் அறிவிக்கப்பட்டிருந்தால் கௌசல்யனுக்கு பாதுகாப்பு வழங்கியிருப்போம் என்றும் கூறியிருந்தார்.

இது குறித்து தனியார் ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய பேட்டியில் அரசியல்துறைப் பொறுப்பாளர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

(எ-13-305)

# விதை தானியங்கள் இல்லை; விவசாயிகள் திண்டாட்டம்!

வலிகாமம் தெற்கு,பெப்.15

நெல் அறுவடை செய்த வயல் நிலங்களில் ஈரலிப்புத்தன்மை காணப்பட்ட போதிலும் பயறு, உழுந்து, எள்ளு போன்ற சிறு தானியங்களை விதைப்பதற்கு விவசாயிகளிடம் போதிய விதை தானியங்கள் இல்லாதிருப்பதாக விவசாயிகள் தரப்பில் சுட்டிக்காட்டப்படுகின்றது.

அதே சமயம் விவசாயிகளின் தேவை கருதி இவ்வாறான விதை தானியங்களை கமநல சேவை நிலையங்கள் சேகரித்து வைக்கவில்லை எனவும் அவற்றை வேறு வழிகளில் பெற்றுக்கொடுக்க முன்வரவில்லை எனவும் விவசாயிகள் தரப்பில் விசனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விதை தானிய வகைகள் கைவசம் இல்லாதிருப்பதால் பல விவசாயிகள் இம்முறை நெல அறுவடையின் பின் சிறுதானிய செய்கையை கைவிடும் நிலையே காணப்படுகிறது.

(த-152)

## கோண்டாவில் இந்து பரிசளிப்பு விழா

வலி.வடக்கு,பெப்.15

கோண்டாவில் இந்து மகா வித்தியாலயத்தின் 125 ஆவது ஆண்டு விழாவையொட்டி பரிசளிப்பு நிகழ்வு கடந்த சனிக்கிழமை பாடசாலையில் இடம்பெற்றது.

அதிபர் செல்வி பா.மார்க்கண்டு தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக இந்து சமய கலாசார அலுவலகள் அமைச்சின் உதவிப் பணிப்பாளர் சிவத்தமிழ் வித்தகர் சிவமகாலிங்கம் கலந்துகொண்டார்.

நிறுவுநர் நினைவுரையை யாழ்.கல்வியியற் கல்லூரி விரிவுரையாளர் திருமதி கௌரி சுரேசன் நிகழ்த்தினார். தொடர்ந்து பரிசில்களை திருமதி சாந்தா சிவமகாலிங்கம் வழங்கிக் கௌரவித்தார்.

(த-86-202)

## பச்சிலைப்பள்ளி மீனவர் சங்கங்கள் புனரமைக்கப்படும

தென்மராட்சி,பெப்.15

பச்சிலைப்பள்ளி பிரதேசத்தில் உள்ள கடற்றொழிலாளர் சங்கங்கள் புனரமைக்கப்படவுள்ளன.

கிளிநொச்சி மாவட்டக் கூட்டுறவுத் திணைக்களத்தினர் இந்தச் சங்கங்களைப் புனரமைப்புக்கான ஏற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றனர்.

எதிர்வரும் 24 ஆம் திகதி காலை 10 மணிககு புலோப்பளை கிழக்கு கடற்றொழிலாளர் சங்கமும், நண்பகல் 12.00 மணிக்கு கிளாலி கடற்றொழலாளர் சங்கமும் புனரமைப்பதற்கான கூட்டங்கள் நடைபெறுமென பச்சிலைப்பள்ளி கடறறொழிலாளர் சங்கங்களின சமாசத் தலைவர் எம். பிரான்சிஸ் தெரிவித்தார்.

(த-117)


**இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் வேலணைப் பிரிவு**

அலகு இல.2 புங்குடுதீவு

**புதிய அலகு அங்குரார்ப்பணப் பொதுக்கூட்ட அழைப்பு**

காலம்: 23.02.2005 (போயாதினம்) புதன் காலை 10 மணி

இடம்: சர்வோதய வளாகம், புங்குடுதீவு

புங்குடுதீவு, நயினாதீவு பிரிவுகளைச் சேர்ந்த சகல உறுப்பினர்களையும் தவறாது கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

| ஆ.சபாநாதன் | த.தவராசா | ப.வினாயகமூர்த்தி |
|---|---|---|
| கௌரவத் தலைவர் வேலணைப் பிரிவு. | தற்காலிக அலகு தலைவர். | தற்காலிக அலகு செயலாளர். |

(42066) (18-19-42)



**கண்ணீர் அஞ்சலி**

எமது கல்லூரியில் சேவையாற்றி
இளைப்பாறிய முன்னாள் ஆசிரியர்

**செல்லையா இராசரத்தினம்** (பண்டிதர்)

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

யா/அருணோதயக் கல்லூரி,
அளவெட்டி.

"ஆசிரியர் கழகம்"

(42069)(46-18-19-42)



**முதலாம்-ஐந்தாம் ஆண்டு நினைவலைகள்**




எமது இலக்குமி இல்லத்தின்
தலைவனாகவும் தலைவியாகவும் மிளிர்ந்து
எல்லோரினது வாழ்விற்கும் உறுதுணையாகி
இறைவன் அடியைப்பற்றிச் சென்ற எமது
அன்புத்தெய்வங்களை அவனியிலே நாம் மறவோம்!
ஓம் சாந்தி!

"இலக்குமி" இல்லம்,
அல்வாய்.

- ச.ஸ்ரீதரன் குடும்பத்தினர்.


## திருட்டு மின்சாரம்பெற்ற ஐவருக்கு அபராதம்

வலி.வடக்கு,பெப்.15

திருட்டு மின்சாரம் பெற்ற ஐவருக்கு மல்லாகம் மாவட்ட நீதிமன்ற நீதிவான் திருமதி சறோஜினி இளங்கோவன் தலா 15 ஆயிரம் ரூபா அபராதம் விதித்துள்ளதுடன் உரிய தண்டனைத் தொகையைக் கட்டத் தவறினால் மூன்றுமாத கடூழியச் சிறைத்தண்டனையை அனுபவிக்க வேண்டும் எனவும் தீர்ப்பளித்துள்ளார்.

வட்டுக்கோட்டைப் பொலீஸாரால் கைது செய்யப்பட்டு கடந்த புதன்கிழமை மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்ட அராலி வடகது, செட்டியார்மடத்தைச் சேர்ந்த அப்புத்துரை கணேசலிங்கம், மகாலிங்கம் ஜெயரூபன் மற்றும் வட்டுக்கோட்டை துணவியைச் சேர்ந்த தம்பித்துரை மதியழகன், பொன்னு இராசதுரை, அராலி வடக்கு அமெரிக்கமிஷன் பாடசாலை முன் ஒழுங்கையைச் சேர்ந்த நடராசா தனுசன் ஆகியோருக்கே நீதிமன்றினால் இத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

(த-86)


**நெடுஞ்சாலைகள் அமைச்சு**

**ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவியின் கீழ்**

**போரினால் பாதிக்கப்பட்ட பிரதேச புனரமைப்புத் திட்டம் (CAARP)**

**திட்ட முகாமைத்துவப் பிரிவு (PMU)**

**பதவிகளுக்கான வெற்றிடங்கள்**

திட்ட முகாமைத்துவப் பிரிவானது (PMU) ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவியின் கீழ் போரினால் பாதிக்கப்பட்ட பிரதேச புனரமைப்புத் திட்டத்திற்காக நெடுஞ்சாலைகள் அமைச்சின்கீழ் திறைசேரியின் முகாமைத்துவச் சேவைச் சுற்றறிக்கை இல.10 அளிப்பின் கீழ் அமைக்கப்பட்டது.

திட்ட முகாமைத்துவப் பிரிவினால் ***வவுனியா, மன்னார், முல்லைத்தீவு, கிளிநொச்சி, யாழ்ப்பாணம், அம்பாறை, திருகோணமலை மற்றும் மட்டக்களப்பு*** ஆகிய மாவட்டங்களில் பணியாற்றுவதற்கு கீழ் வரும் பதவிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**1. திட்டப் பொறியியலாளர்கள்** (Project Engineers)

B.Sc. பொறியியல் (சிவில்) பல்கலைக்கழகப் பட்டத்துடன் ஒரு வருட வீதி வேலை அனுபவம் அடங்கலாக 3 வருடங்கள் அனுபவத்தை கொண்டிருக்க வேண்டும்.

**2. பொறியியலாளர்கள்** (பட்டதாரிகள்)(Engineers)

B.Sc.பொறியியல் (சிவில்) பல்கலைக்கழகப் பட்டம் பெற்றிருக்க வேண்டும்.

**3. திட்டச் செயலாளர்** (Project Secretary)

அ. க.பொ.த.(சா/த) இல் இருதடவைக்கு மேற்படாது மொழி, கணிதம் அடங்கலாக நான்கு திறமைச் சித்திகளுடன்ஆறு பாடங்களில் சித்தியடைந்திருப்பதோடு அங்கீகரிக்கப்பட்ட கல்வியியல் நிறுவனமொன்றில் செயலாளர் பதவிக்கான டிப்ளோமா சான்றிதழ் பெற்றிருக்க வேண்டும். அத்தோடு ஆங்கிலத்தில் சரளமாகவும், காரியாலய தொடர்பாடல்களை சுயாதீனமாகக் கையாளவும், கணனியில் வின்டோஸ் மென்பொருள் அடிப்படையில் இயங்கும் கணனி மென்பொருள்களை இயக்குவதில் சிறந்த தேர்ச்சியையும் பெற்றிருத்தல் வேண்டும்.

அல்லது

ஆ. அதிகாரப்பத்திரம் பெற்ற செயலாளருக்கான (Charted Secretary) கல்வியினைத் தொடர்பவராகவும் கணனியில் வின்டோஸ் மென்பொருள் அடிப்படையில் இயங்கும் கணனி மென்பொருள்களை இயக்குவதில் சிறந்த தேர்ச்சியையும் பெற்றிருத்தல்வேண்டும்.

அத்துடன்

03 வருடங்கள் குறிப்பிடப்பட்ட வேலையில் அனுபவமும் பெற்றிருத்தல் வேண்டும்.

**4. கணனி இயக்குநர்/இலிகிதர்** (Computer Operator/ Clerk)

க.பொ.த.(சா/த) இல் இருதடவைக்கு மேற்படாது மொழி, கணிதம் அடங்கலாக நான்கு திறமைச் சித்திகளுடன் ஆறு பாடங்களில் சித்தியடைந்திருப்பதோடு, கணனிக் கற்கை நெறியில் டிப்ளோமா சான்றிதழுடன் ஒரு வருட தொழில் அனுபவமும் பெற்றிருத்தல் வேண்டும்.

**5. காரியாலய உதவியாளர்** (Officer Aide)

க.பொ.த.(சா/த) இல் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

**6. காவலாளர்** (Watcher)

08ஆம் தரம் கல்வி கற்றிருத்தல் வேண்டும்.

**வயதுஎல்லை:**

18-50

**வேதனம்:**

பேசித் தீர்மானிக்கப்படும்.

**தொழில் நிபந்தனைகள்:**

நியமனங்களானவை (3) மூன்று வருட காலத்திற்கான ஒப்பந்த அடிப்படையில் வழங்கப்படும்.

**வேறு அனுகூலங்கள்:**

பி எம் யு மூலம் 12% மும் ஊழியரின் மூலம் 8% மும் ஊழியர் சேமலாப நிதிக்காக வழங்கப்படுவதோடு, மேலும் 3% ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்காக வழங்கப்படும்.

விண்ணப்பங்கள், பூர்த்தி செய்யப்பட்ட சுயவிவரக்கொத்துடன். **Project Director (ADB Project), P.O.Box 62, Battaramulla.** என்ற முகவரிக்கு 28.02.2005 அன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபாலில் அனுப்பிவைத்தல் வேண்டும். அத்துடன் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் தொழிலினை குறிப்பிடுவதோடு, தற்போது அரசாங்கத் திணைக்களங்களில், கூட்டுத் தாபனங்களில், சபைகளில் மற்றும் அதிகார சபைகளில் பணிபுரியும் விண்ணப்பதாரிகளாயின் குறிப்பிடப்பட்ட நிறுவனத் தலைவர்கள் ஊடாக அனுப்பிவைத்தல் வேண்டும்.

**திட்டப்பணிப்பாளர்**

ஆசிய அபிவிருத்தி வங்கி திட்டப்பிரிவு
03ஆம் மாடி, "செத்சிரிபாய"
பத்தரமுல்லை.

(40964)(18-19-42)

# செய்திக்கொத்து

## பிரதான வீதிகள் மோசமான நிலையில்

கொழும்புத்துறை,பெப்.15

யாழ.குடாநாட்டின் பல பிரதான வீதிகள் மற்றும் பாவனை கூடிய வீதிகளில் மிக மோசமான குண்டுகள், குழிகள் காணப்படுகின்றன.

இம்முறை பருவமழை கூடுதலாகப் பெய்தமையால் வீதிகளில் தேங்கி நிற்கின்ற வெள்ளத்தை வாகனங்கள் அடித்துச் சென்றமையால் பாரிய குழிகள் ஏற்படக் காரணமாக இருந்ததாகக் கூறப்படுகிறது.

மானிப்பாய் வீதி, காங்கேசன்துறை வீதி, பலாலி வீதி, பருத்தித்துறை வீதி, பிரதான வீதி போன்ற பெருந்தெருக்களில பல இடங்களில் வாகனங்கள் பயணிக்க முடியாத அளவுக்கு சேதமாகியுள்ளன.

போக்குவரத்து மிகுந்த வீதிகளில் இவ்வாறான நிலைமையால் பல விபத்துக்கள் இடம்பெற்று வருவதோடு, போக்குவரத்தில் நேரவிரயமும் ஏற்படுவதாகப் பொதுமக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். (த-30)

## மொனராகலைச் சிறையில் கூரைமீது ஏறிநின்று கைதிகள் சத்தியாக்கிரகம்

கொழும்பு,பெப்.15

மொனராகலைச் சிறையில் தடுத்துவைக்கப்பட்டுள்ள கைதிகள் நால்வர் தம்மை விடுதலை செய்யுமாறு கோரி நேற்றுமுன்தினம் முதல் கூரை மீது ஏறிச் சத்தியாக்கிரகப் போராட்டத்தில் குதித்துள்ளனர்.

இந்த நான்கு கைதிகளும் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின்கீழ் கைதுசெய்யப்பட்டு, நீண்டகாலமாகத் தடுத்துவைக்கப்பட்டுள்ளார்கள்.(த-13)

## சமுர்த்தி முகாமையாளர் பயிற்சிநெறி ஆரம்பம்

யாழ்ப்பாணம்,பெப்.15

அண்மையில் நியமனங்கள் வழங்கப்பட்ட பட்டதாரிகளில் 47 பேர் சமுர்த்தி முகாமையாளர்களுக்கான பயிலுநர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கான பயிற்சிநெறிகள் நாளை மறுதினம் தொடக்கம் மூன்று தினங்கள் நடைபெறவுள்ளன.

கொழும்பு, மருதானை, 281, பின்ஸ் வீதியில் அமைந்துள்ள சி.எச்.ஆர்.நிலையத்தில் நடைபெறவுள்ள இந்தப் பயிற்சி வகுப்புகளில் தெரிவுசெய்யப்பட்ட அனைவரையும் கலந்துகொள்ளுமாறு சமுர்த்தி அதிகார சபை கேட்டுள்ளது. (த-203-190)

## சேவைநலன் பாராட்டு

யாழ்ப்பாணம்,பெப்.15

கோண்டாவில் சி.சி.த.க. பாடசாலையில் இருந்து இளைப்பாறிச் சென்ற ஆசிரியை திருமதி ம. கதிர்காமநாதனுக்கு சேவைநலன் பாராட்டு விழாவும் பிரிவுபசார விழாவும் இன்று காலை 10 மணிக்குப் பாடசாலை மணடபத்தில் அதிபர் இ.அருணாசலம் தலைமையில் நடைபெறவுள்ளன. (த)

## பஸ்சேவை இல்லை: மக்கள் சிரமம்

சுன்னாகம், புத்தூர், மட்டுவில், மட்டுவில் கனகம்புளியடி, பெருங்குளம் ஊடாக இடம்பெற்ற 775 ஆம் இலக்க வடபிராந்திய பஸ்சேவையோ மினிபஸ்சேவையோ இப்போது இடம்பெறுவதில்லை.

இதனால், இப்பகுதியில் உள்ள மக்கள் பல கிலோ மீற்றர் தூரம் சென்று பஸ்சேவையைப் பெறவேண்டிய துர்ப்பாக்கிய நிலைமைக்கு உள்ளாகியுள்ளனர்.

கடந்த வருடம் தனியார் மினிபஸ் சேவை இடமபெற்ற போதிலும் வருட இறுதியில் பெய்த மழை காரணமாக வீதிகள் மிகவும் மோசமான நிலையில் பாதிப்படைந்ததைத் தொடர்ந்து இச்சேவை நிறுத்தப்பட்டுள்ளது.

இச்சேவை நிறுத்தப்பட்டது சம்பந்தமாக தனியார் மினிபஸ் சங்கத்துடன் தொடர்புகொண்டு கேட்டபோது இவ்வழியில் மக்களின் தேவை கருதி சேவை நோக்குடன் கடந்த வருடம் இவ்வீதியில் ஒரு மணித்தியாலத்திற்கு ஒரு சேவை என்ற அடிப்படையில் மூன்று பஸ்சேவைகள் நாளாந்தம் நடத்தப்பட்டன.

கடந்த வருட இறுதியில் பெய்த மழையைத் தொடர்ந்து வீதிகள் மிகவும் மோசமான நிலையில் சேதம் அடைந்துள்ளதுடன், வண்ணாத்திப் பாலமும் உடைந்து விழக்கூடிய ஆபத்தானநிலை ஏற்பட்டது.

பழுதடைந்து காணப்படும் வீதியையும் மற்றும் வண்ணாத்திப் பாலத்தையும் திருத்தித் தரும் சந்தர்ப்பத்தில் மீண்டும் இச்சேவையை நடத்தமுடியும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

இப்பாதையில் வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் பஸ் வண்டிகளும் சேவையில் ஈடுபடுவதில்லையென்பதுவும் குறிப்பிடத்தக்கது. (த-86)

## சுனாமி அழிவுகள் வீடியோப்படமானது

யாழ்ப்பாணம்,பெப்.15

யாழ்.மாவட்டத்தில் சுனாமி அனர்த்தத்தினால் உள்ளூராட்சி அமைப்புக்களுக்கு ஏற்பட்ட சொத்து அழிவுகள் ஒன்றரை மணிநேர வீடியோப்படமாகத் தயாரிக்கப்பட்டுள்ளது.

வலி.தென்மேற்கு மானிப்பாய்ப் பிரதேச சபைத் திட்டமிடற்பிரிவு உள்ளூராட்சி உதவியாளர்கள் அழிவுகள் இடம்பெற்ற இடங்களுக்கு நேரடியாகச் சென்று இந்த வீடியோப் படத்தைத் தயாரித்துள்ளனர். (த-203-185)

## இடைக் குறிச்சியில் பொதுமண்டபம் திறப்பு

வரணி,பெப்.15

வரணி இடைக்குறிச்சி கிராம அலுவலர் பிரிவில் நியாப் திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட பொதுமண்டபம் கடந்த 31 ஆம் திகதி வைபவரீதியாகத் திறந்துவைக்கப்பட்டது.

தென்மராட்சிப் பிரதேச செயலர் எம்.ஸ்ரீநிவாசன் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் நியாப் திட்டப் பிரதிப் பணிப்பாளர் க.பாலகிருஷ்ணன் மண்டபத்தை வைபவரீதியாகத் திறந்துவைத்தார்.

இந் நிகழ்விற்குப் பிரதம அதிதிகளாக தென்மராட்சிப் பிரதேச செயலக உதவித்திட்டப் பணிப்பாளர் கி.குணாளசிங்கம், கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் எஸ்.உமாபாலன், தென்மராட்சிப் பிரதேச கிராம அபிவிருத்திச் சங்கங்களின் சமாசத் தலைவர் கே.சுப்பிரமணியக் குருக்கள், தென்மராட்சி அரசியல்துறைப் பொறுப்பாளர் மு.ஈஸ்வரன் ஆகியோர் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினர்.

தொடர்ந்து நியாப் திட்டப் பணிப்பாளர் மணடபத்தைப் பராமரிக்கும் பொறுப்பை இடைக் குறிச்சி மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவி திருமதி பரமசிவத்திடம் கையளித்து அதற்குரிய சான்றிதழையும் வழங்கினார். (த-203-170)

## ஓய்வூதியர் சங்கத்தைப் பதிவுசெய்ய முடிவு

வலி.தெற்கு,பெப்.15

வலிகாமம் வடக்கு ஓய்வூதியர் சங்கத்தை யாழ்ப்பாணம் கூட்டுறவு ஆணையாளர் திணைக்களத்தில் பதிவு செய்வதற்குத் தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளது.

மல்லாகம் மகாவித்தியாலயத்தில் கநடராசா தலைமையில் நடைபெற்ற மேற்படி சங்கத்தின் பொதுக் கூட்டத்திலேயே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது.

இந் நிகழ்வில் யாழ்ப்பாணக் கூட்டுறவு ஆணையாளர் திணைக்களப் பிரதிநிதி திருமதி பா.கலைச்செல்வியும் கலந்துகொண்டார். (த-203-152)

## மின்விளக்குகள் பொருத்தப்படுகின்றன

கொழும்புத்துறை,பெப்.15

யாழ்.மாநகர சபை எல்லைக்கு உட்பட்ட வீதிகளுக்கு இலங்கை மின்சார சபையால் மின்விளக்குகள் பொருத்தப்பட்டு வருகின்றன.

'நிகொட்' நிறுவனம் கடந்த ஆண்டு மார்ச் மாதம் யாழ்.மாநகர சபையூடாக இலங்கை மின்சார சபைக்கு 68 லட்சத்து 54 ஆயிரம் ரூபாவினை இந்த வேலைத்திட்டத்திற்கு வழங்கியிருந்தது.

இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதில் இலங்கை மின்சார சபை மெத்தனப் போக்கை கடைப்பிடிப்பதாக யாழ்.மாநகர சபை ஆணையாளர் சுட்டிக்காட்டியதை அடுத்துத் தற்போது இப்பணிகளை மின்சாரசபை தீவிரமாக முன்னெடுக்கிறது.

பிரதான வீதிகள் மற்றும் முக்கிய இடங்களில் தற்போது மின்விளக்குகள் பொருத்தப்பட்டுளளதால் இரவு நேரங்களில் அச்சமின்றி பாதுகாப்பாக சென்று வரக்கூடியதாக உள்ளதென பொதுமக்கள் தெரிவிக்கின்றனர். (த-30)

## 'தேவ ஞான சுரபி' பட்டம் வழங்கிக் கௌரவிப்பு

வலி.வடக்கு,பெப்.15

ஊரெழு மேற்கு அந்தராணைப்பகுதி ஸ்ரீ மீனாட்சி அம்மன் தேவஸ்தான மஹோற்சவக் குரு சிவஸ்ரீ கிருஷ்ண ஜோதீஸ்வரக் குருக்கள் வேத ஞானசுரபி என்னும் பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டுள்ளார்.

ஊரெழு சக்திபுரம் சிவபூரணி முத்தமிழ் மன்ற அறநெறிப் பாடசாலையினால் இப்பட்டம் வழங்கி கௌரவிக்கப்பட்டது.அருட்கவி கலாநிதி சி.விநாசித்தம்பியின் வாழ்த்துப் பாமாலையும் அவருக்கு வழங்கப்பட்டுள்ளது.

அறநெறிப்பாடசாலைத் தலைவர் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் சுன்னாகம் கதிரைமலை ஆலயப் பிரதம குரு சிவஸ்ரீ. ஸ்ரீகாந்தக குருக்களினால், சிவஸ்ரீ கிருஷ்ண ஜோதீஸ்வரக் குருக்களுக்கு பொன்னாடை போர்த்து கௌரவப்பட்டத்தையும் வழங்கினார். (த-86)

# சிநேகபூர்வக் கிரிக்கெட் போட்டி; ஸ்ரான்லிக் கல்லூரிக்கு வெற்றி

யாழ்ப்பாணம்,பெப்.15

யாழ். கனகரத்தினம் மத்தியமகாவித்தியாலய அணிக்கும் ஸ்கந்தவரோதயக் கல்லூரி அணிக்கும் இடையில் நடைபெற்ற சிநேகபூர்வ கிரிக்கெட் போட்டியில் கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலய அணி வெற்றிபெற்றது.

கடந்த புதன்கிழமை ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற மட்டுப்படுத்தப்பட்ட 50 ஓவர்கள் கொண்ட கிரிக்கெட் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய ஸ்கந்தவரோதயக் கல்லூரி அணி 50 ஓவர்கள் முடிவில் 8 விக்கெட்டுக்களை இழந்து 207 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது.

இதில் கபிலன், திவாகரன் ஆகியோர் தலா 50 ஓட்டங்கள் தமது அணிக்காகப் பெற்றுக்கொடுத்தனர்.

பந்துவீச்சில் கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய அணிவீரர் ரஜீவ்குமார், சியாம்சன் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலய அணி 42 ஓவர்களில் 7 விக்கெட்டுக்களை மாத்திரம் இழந்து 208 ஓட்டங்களைப் பெற்று வெற்றியீட்டியது.

இதில் கஜதீபன் 84 ஓட்டங்களையும் ராஜ்குமார் 36 ஓட்டங்களையும் தமது அணிக்காகப் பெற்றுக்கொடுத்தனர்.

பந்துவீச்சில் ஸ்கந்தவரோதயக் கல்லூரி வீரர் ஜெயகிருஸ்ணா 3 விக்கெட்டுக்களை வீழ்த்தினார். (10-190)

## மரதன் ஓட்டப் போட்டியில் வெற்றியீட்டியோர்

யாழ்ப்பாணம்,பெப்.15

பாஷையூர் புனித அந்தோனியார் மகளிர் வித்தியாலயத்தின் மெய்வன்மைப் போட்டியை முன்னிட்டு இல்லங்களுக்கு இடையில் நடத்தப்பட்ட மரதன் ஓட்டப் போட்டியில் வெற்றபெற்றவர்களின் விவரம் வருமாறு:-

முதலாவது இடம் - எ.ஜஸ்மிலா
இரண்டாவது இடம் - ஆ.ஜெனற் டிசாணி
மூன்றாவது இடம் - வை.உஷாலினி (10-190)




## மெய்வன்மைப் போட்டிகள்

யாழ்ப்பாணம்,பெப்.15

சுண்டுக்குளி மகளிர் கல்லூரியின் வருடாந்த மெய்வன்மைப் போட்டி எதிர்வரும் 19ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணியளவில் கல்லூரி மைதானத்தில் அதிபர் திருமதி இராஜரட்ணம் தலைமையில் நடைபெறவுள்ளது. (10-190)

★ ★ ★

யாழ்ப்பாணம்,பெப்.15

யாழ். சென்.ஜோன்ஸ் கல்லூரியின் ஆரம்பப்பிரிவு மெய்வன்மைப் போட்டி எதிர்வரும் 19 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 2மணியளவில் கல்லூரி மைதானத்தில் அதிபர் எஸ்.தனபாலன் தலைமையில் நடைபெறவுள்ளது.(10-190)

# மத்திய கல்லூரி, கொக்குவில் இந்து கிரிக்கெட் போட்டி சமநிலையில்

குருநகர்,பெப்.15

யாழ். மத்திய கல்லூரி அணிக்கும் கொக்குவில் இந்துக் கல்லூரி அணிக்கும் இடையில் நடைபெற்ற சிநேகபூர்வ வருடாந்தக் கிரிக்கெட் போட்டி சமநிலையில் முடிவடைந்தது.

யாழ். மத்திய கல்லூரி விளையாட்டு மைதானத்தில் இம்மாதம் 11ஆம், 13ஆம் திகதிகளில் நடைபெற்ற இப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ்.மத்திய கல்லூரி அணி 8 விக்கெட்டுக்களை இழந்து 262 ஓட்டங்களை எடுத்த நிலையில் தனது துடுப்பாட்டத்தை நிறுத்தியது.

இதில் எஸ்.செல்ரன், க.றொகான், மகிபன், கலிஸ்ரன் ஆகியோர் முறையே 21,65,52,51 ஆகிய ஓட்டங்களைத் தமது அணிக்குப் பெற்றுக்கொடுத்தனர்.

பந்துவீச்சில் கொக்குவில் இந்துக் கல்லூரி வீரர் செந்தூரன் 32 ஓவர்கள் பந்துவீசி 60 ஓட்டங்களைக் கொடுத்து 3 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய கொககுவில் இந்துக் கல்லூரி அணி தனது முதலாவது இன்னிங்ஸில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 176 ஓட்டங்களை மட்டும் பெற்றது. தொடர்ந்து விளையாடுவதற்கு நேரம் போதாமையால் ஆட்டம் நிறுத்தப்பட்டது.

கொக்குவில் இந்துக் கல்லூரியின் துடுப்பாட்டத்தில் பிரதீபன், வாகீஸ், றஜீந்தன் ஆகியோர் முறையே 49,31,21 ஓடடங்களைத் தமது அணிக்குப் பெற்றுக்கொடுத்தனர்.

பந்துவீச்சில் யாழ். மத்திய கல்லூரி வீரர்கள் மயூரன் 19 ஓவர்கள் பந்து வீசி 32 ஓட்டங்களைக்கொடுத்து 3 விக்கெட்டுக்களையும் விகாஷ் 11 ஓவர்கள் பந்துவீசி 20 ஓட்டங்களைக் கொடுத்து 2 விக்கெட்டுக்களையும் சுதர்ஷன் 10 ஓவர்கள் பந்துவீசி 38 ஓட்டங்களைக் கொடுத்து 2 விக்கெட்டுக்களையும் மதுப்பிரியன் 9 ஓவர்கள் பந்து வீசி 24 ஓட்டங்களைக் கொடுத்து 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர். (10-51)

## அரையிறுதி ஆட்டங்கள்

யாழ்ப்பாணம்,பெப்.15

பாஷையூர் புனித அந்தோனியார் விளையாட்டுக் கழகத்தின் அனுசரணையுடன் அமரர் ஏ.செபஸ்தியாம்பிள்ளை ஞாபகார்த்தமாக நடைபெற்ற உள்ளூர் உதைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடரின் அரை இறுதியாட்டங்கள் எதிர்வரும் 19 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணியளவில் பாஷையூர் புனித அந்தோனியார் விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெறவுள்ளன.

முதலாவது அரையிறுதியாட்டத்தில் செவன் அப் கோலா அணியை எதிர்த்து கபினஸ அணி மோதும்-

இரண்டாவது அரை இறுதிப் போட்டியில் காலை 10 மணிக்கு யுப்பிற்றஸ் (பச்சை) அணியை எதிர்த்து ஸ்ரீபன்ராஜ் அணி மோதும்-

அரை இறுதிப் போட்டிகளில் வெற்றி பெறும் அணிகள் அன்று மாலை 4.30 மணியளவில் இறுதிப் போட்டியில் பங்குகொள்ளும். (10-190)

# தென்மராட்சிப் பிரதேச விளையாட்டுப் போட்டியில் கலந்துகொள்ளச் சகல கழகங்களும் இணக்கம்

தென்மராட்சி,பெப்.15

தென்மராட்சிப் பிரதேச செயலகத்தினால் இவ்வருடம் நடத்தப்படவுள்ள பிரதேச விளையாட்டுப் போட்டிகளில் கலந்துகொள்ளவெனப் பிரதேசத்திலுள்ள பதிவுசெய்யப்பட்ட அனைத்துக் கழகங்களும் முடிவுசெய்துள்ளன.

பிரதேச செயலகத்தில் கடந்தவாரம் நடைபெற்ற விளையாட்டுக் கழகங்களுடனான சந்திப்பில் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 22ஆம் திகதி பிரதேச செயலகத்தில் நடைபெறும் கூட்டத்தில் விளையாட்டுப்போட்டிகளை நடத்தும் திகதி பற்றிய முடிவெடுப்பதாகவும் தீர்மானிக்கப்பட்டது.

பிரதேச செயலக நிர்வாக அலுவலர் ச.வீரசிங்கம் தலைமையில் நடைபெற்ற இச்சந்திப்பில் -

யாழ்.மாவட்ட விளையாட்டுத்துறைப் பொறுபபாளர் வி.மாதுளன், திருமலை மாவட்ட விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் தீபன், பிரதேச விளையாட்டு அலுவலர் எஸ்.சதீஸ்குமார் ஆகியோர் கலந்துகொண்டனர்.

பதிவுசெய்யப்பட்ட 31 விளையாட்டுக் கழகங்களின் பிரதிநிதிகளும் இச் சந்திப்பில் கலந்துகொண்டனர். (10-117)

# மன்னியுங்கள் மன்னிக்கப்படுவீர்கள்

**தவக்காலச் சிந்தனை**


மற்ற மனிதர் செய்யும் குற்றங்களை நீங்கள் மன்னிப்பீர்களானால் உங்கள் விண்ணகத்தந்தையும் உங்களை மன்னிப்பார்.

இவ்வுலகில் பாவம் செய்யாத மனிதர் எவருமே இல்லை. இந்த வகையில் மன்னிப்பின் காலமாகிய தவக்காலத்தில் மன்னித்து வாழ அழைக்கப்பட்டுள்ளோம். ஒருவர் எமக்கு அநீதி இழைப்பாராகில் அவரை நாம் மன்னிக்கும் மனம் கொள்வதில்லை. இதனால், பாவ உலகில் பிறந்த நாம் மீண்டும் மீண்டும் பாவம் செய்கிறோம். குற்றம் செய்தவரை புறம்தள்ளி விடுகிறோம். அவ்வாறில்லாமல் பிறர் எமக்குச் செய்த குற்றங்களை மன்னிப்பதன் வழியாக நாம் செய்த பாவங்களுக்குப் பரிகாரம் தேடுவோம். மன்னிப்பதன் வழியாகவே மன்னிப்பைப் பெறமுடியும். எனவே மனமாற்றத்தின் காலமாகிய இத் தவக்காலத்தில் மன்னித்து வாழ்வோம்.

ஓ.ா.மேசி



நல்லூரில் உள்ள போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் அலுவலகத்தில் அதன் மாவட்டத் தலைவர் ரொனி பேர்சனிடம் மகஜர்கள் கையளிக்கப்பட்டபோது.......











வெலிகந்தத் தாக்குதல் மற்றும் சுனாமி நிவாரணத்தால் அரசு காட்டிவரும் பாரபட்சம் என்பவற்றுக்கு ஆட்சேபம் வெளியிடும் வகையில் நேற்று யாழ். நகரில் நடத்தப்பட்ட வாகனப்பேரணியில் எடுக்கப்பட்ட படங்கள் இவை.

யாழ். மாவட்ட முச்சக்கர வண்டிகள் சங்கம், தனியார் மினி பஸ் சங்கம், மோட்டார் கார்ச் சங்கம் என்பன இந்தப் பேரணியை நடத்தின.

*(படங்கள்: பகீரதன்)*


## அறிவித்தல்

2005-02-15ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ள கண்டனப் பேரணியில் கலந்துகொள்வதற்காக, யாழ்.கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரி மாணவர்களையும், யாழ்.மாவட்டத்தில் உள்ள கூட்டுறவுச் சங்கங்களின் தலைவர்கள், பொதுமுகாமையாளர்கள் மற்றும் சகல பணியாளர்களையும் கிட்டு பூங்காவிற்கு அருகில் காலை 9.30 மணிக்குச் சமுகமளிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

தலைவர்,
யாழ்.மாவட்டக் கூட்டுறவுச்சபை.

(சி.40917)


## சிறார்களுக்கு ஆங்கிலப் பயிற்சி; தமிழ் மாணவர் ஒன்றியம் ஏற்பாடு

யாழ்ப்பாணம்,பெப்.15

யாழ். மாவட்டத்தில் முன்பள்ளி முதல் தரம் 5வரையான மாணவர்களுக்கு ஆங்கிலத்தில் பேச்சு, எழுத்து, வாசிப்பு ஆகிய பயிற்சிகளை வழங்குவதற்கு யாழ். மாவட்ட தமிழீழ மாணவர் அமைப்பு முன் வந்துள்ளது.

இப்பயிற்சிகளை வழங்குவதற்கென ஆஸ்திரேலியாவிலிருந்து விசேட ஆங்கில ஆசிரியர் குழு வருகைதந்துள்ளது.

இப்பயிற்சியில் இணைந்து கொள்ளவிரும்பும் மாணவர்கள் யாழ்ப்பாணம் கோவில் வீதியிலுள்ள யாழ். மாவட்ட தமிழீழ மாணவர் அமைப்பு அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு விண்ணப்பங்களைப் பெற்று எதிர்வரும் 17 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்குமாறு யாழ்.மாவட்ட தமிழீழ மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் சி. கிருஷ்ணா தெரிவித்துள்ளார். (டு -13)


## தேவை

எமது எரிபொருள் நிரப்பு நிலையத்திற்குப் பின்வருவோர் உடன்தேவைப்படுகின்றனர்.

1) காசாளர்
2) எரிபொருள் நிரப்புநர்

17.02.2005 வியாழன் அன்று காலை 9.00- 10.00 மணிக்குள் உரிய ஆவணங்களுடன் சமுகந்தரவும்.

(42064) 173, பலாலி வீதி,
பரமேஸ்வராச் சந்தி, திருநெல்வேலி.



## பத்திரிகை விநியோகிப்போர் தேவை

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் உதயன் பத்திரிகையை முகவர்களுக்கு விநியோகிப்பதற்குப் பணியாளர்கள் தேவை.

மோட்டார் சைக்கிள் சொந்தமாக வைத்திருப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

துவிச்சக்கர வண்டிகளில் சென்று பத்திரிகை விநியோகிக்க விரும்புவோரும் சேர்த்துக் கொள்ளப்படுவர்.

25-30 வயதெல்லைக்குள் உள்ளோர் விசேடமாக விரும்பப்படுவர். ஏனையோரும் தகுதிகண்டு பணிக்குச் சேர்க்கப்படுவர்.

**1-9 தங்ககம், பிரதான வீதி, கிளிநொச்சியில் உள்ள**

**உதயன் பணிமனைக்கு**

17.02.2005 வியாழக்கிழமை மு.ப.11 மணிக்கு நேரில் வரவும்.

(சி-40872)


### புதிய நிர்வாகிகள்

வரணி, இடைக்குறிச்சி விவசாயிகள் சம்மேளனத்தின் இந்த ஆண்டுக்கான நிர்வாகிகள் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

சம்மேளனத்தின் புதிய தலைவராக தென்மராட்சி கிராமிய அபிவிருத்திச் சங்கங்களின் சமாசத் தலைவர் க.சுப்பிரமணியக குருக்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

(10-203-170)


*We'll correct you before the real test...*

International English Language Testing System

# IELTS

Essencial English Language examination for higher studies work or migration purposes in UK, Australia, New Zealand, Canada,USA,etc.,



NEW BATCH STARTS on 18 Feb 2005 at 5.00 p.m

ஆங்கில அறிவுள்ளவர்கள் அதில் மேலதிக திறன் பெறவும் இக் கற்கைநெறி சிறப்பாக வழிகாட்டும்.

**LONDON ENGLISH COLLEGE**
#105,Arasady Road, Jaffna.
Tel: 021-2225889, 0777-252180, 0776910072



DELL.IBM.Microsoft. Sun MicroSystem. Cisco. Compaq. BellLabs.



Intel மற்றும் HP ...

உங்கள் தெரிவே எங்கள் அமைப்பு! உங்களுக்கு விரும்பிய உதிரிப்பாகங்கள் மற்றும் உலகமுன்னனி நிறுவனங்களின் பாகங்கள் என்பன உங்கள் தெரிவில்

எல்லாமே Hybrid Boost, Hypher Thread, Dual Monitor. வசதிகளுடன்

உடனடி டெலிவரிக்கு முந்துங்கள்

**OUR SPECIAL PACKAGES**

Intel P4 கணனிகள் With Out Monitor RS. 34,500/- only

- New Compaq PIII550, 600, 733, 800, 1GHz 128 SDRAM,10GB Hard Disk, 1.44FDD, 52X CDROM, 15" color Monitor,Keyboard, Mouse Rs. 32,000/- முதல்
- New PIV 128 SDRAM,40GB Hard Disk, 1.44FDD, 52X CDROM, ATX Tower with Front USB & Audio, 15" color Monitor,Keyboard, Mouse Rs. 48,900/- முதல்

ஒன்று இரண்டு என்றல்ல குவித்து வைக்கப்பட்டுள்ள இருப்புகள் கைவசம்

* All with 3 years immediate Replacement warranty

# கொழும்பு நிர்ணய விலையில்

**Special Opening Offer**
**Latest Computer Table, Screen Filter, Mouse Pad, Dust Cover & Etc.**
நிபந்தனைக்குட்பட்டது. வரையறுக்கப்பட்ட 3 தினங்கள் மட்டுமே

எல்லாமே தரமான மற்றும் கொழும்பு நிர்ணய விலையில்

**Knowledge beyond the technology. That's CeSCO**

Real imported products @ Colomdo Price

இலகுவான உங்கள் தெரிவுகளுக்காக நகரின் மத்தியில் விசாலமான பரப்பில்

A Bright solution providing centre

இல்லை என்று எதுவுமில்லை

**CeSCO** A Computer & Electronics Solution Company for your tasty knowledge bite. A PLACE for All Computing, Electronics & Networking

சலுகைக்காக விசேடமாக கணிக்கப்பட்ட விலைஆதலால் குறிப்பிட்ட தினங்கள் மட்டும்.

தரம் தராதரம் மற்றும் நிரந்தரம் எமது தாரக மந்திரம்

**CeSCO**
56/15, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
(இலங்கை வங்கி பின்புறம்)



உ
ஓம் விராட் விஸ்வப் பிரமனே நமஹ!

## நெஞ்சைவிட்டகலா ஓராண்டு நினைவஞ்சலி



மலர்வு 13 - 04 - 1953
உதிர்வு 27 - 02 - 2004

## அமரர் தம்பித்துரை சற்குணநாதன்

(உரிமையாளர். நொதேன் இன்சினியறிங் வேக்ஸ்)

திதி: சப்தமி

இங்கிதமாய்ப் பேசி புன்சிரிப்பை வீசி எம்முளங் கவர்ந்தீர்
எங்கிருந்தாலும் இன்மொழி பகர்ந்தீர் எங்குதான் சென்றீர் எமையேங்கவிட்டு?
பங்குதான் தந்தீர் வாழ்வதை விட்டே பறந்தே சென்றிட்டீர்!
பொங்கி வரும் கண்ணீரால் அஞ்சலி செலுத்துகிறோம் அடைகவே சாந்தி!

தங்கள் பிரிவால் துயருறும்:
பெற்றோர், மனைவி, பிள்ளைகள்.
சகோதரர்கள், மருமக்கள், பேரப்பிள்ளை.

250. ஸ்ரான்லி றோட்.
யாழ்ப்பாணம். (42097)

# தமிழ்ச்செல்வன் வெள்ளியன்று கிளிநொச்சிக்கு

விடுதலைப் புலிகளின் மட்டு - அம்பாறை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளராக இருந்து சுட்டுக்கொல்லப்பட்ட லெப்டினன்ட் கேணல் கௌசல்யன் உட்பட 4 போராளிகளின் இறுதிக்கிரியைகளில் கலந்து கொள்வதற்காக மட்டக்களப்புக்கு வந்திருந்த அந்த அமைப்பின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் எதிர்வரும் வெள்ளிக்கிழமை கிளிநொச்சி திரும்புவார். தற்போது மட்டக்களப்பில் தங்கியுள்ள அவர் அடுத்து விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியிலுள்ள சம்பூருக்குச் செல்கிறார். அடுத்தசில தினங்கள் திருகோணமலையில் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளிற்குச் சென்று அங்குள்ள மக்களையும் அதிகாரிகளையும் பொதுச் சேவையாளர்களையும் சந்தித்துக் கலந்துரையாடுவார். (எ-க)

# இந்துக் குருமார் ஒன்றியத்தின் விளக்கம்

சர்வதேச இந்து மதகுருமார் ஒன்றியத்தில் கல்விபயின்றுவரும் மாணவர்களுக்கான கொடுப்பனவு சம்பந்தமாக ஒன்றியம் கண்டனத் தீர்மானம் எதனையும் நிறைவேற்றவில்லை என்று சர்வதேச இந்துக் குருமார் ஒன்றியம் அறிவித்துள்ளது.

"இந்துக்குருமார் ஒன்றியத்தின் மாணவர் கொடுப்பனவு நிறுத்தம் அரசுக்கு எதிராகக் கண்டனத் தீர்மானம்' என்னும் தலைப்பில் நேற்று முன்தினம் உதயனின் 3ஆம் பக்கத்தில் வெளியாகி இருந்த செய்தி தொடர்பாக -

சர்வதேச இந்துக்குருமார் ஒன்றியம் அனுப்பிவைத்த கடிதத்திலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. செய்தியில் குறிப்பிட்டது போன்று சர்வதேச இந்துக்குருமார் ஒன்றியத்தின் கூட்டம் எதுவும் குறிப்பிட்ட தினத்தில் ஒன்றியக்கட்டடத்தில் உத்தியோக பூர்வமாக நடைபெறவில்லை எனவும்-

செய்தியில் தெரிவிக்கப்பட்டது போன்று கலாசார அமைச்சின் கொடுப்பனவு தொடாபாக எந்த விடயமும் கலந்துரையாடப்படவில்லை, தீர்மானிக்கப்படவில்லை என்றும் ஒன்றியத்தின் சார்பில சர்வதேச இந்து மதக்குருமார் ஒன்றியத்தின் தலைவர் சிவஸ்ரீபரமேஸ்வர மனோகரக் குருக்கள் கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இம்மாதம் எட்டாம் திகதி ஒன்றியக் கூட்டம் நடைபெற ஏற்பாடாகி இருந்த போதிலும் உரிய கோரம் இல்லாததால் உத்தியோகபூர்வப்பற்றற்ற முறையில் கலந்துரையாடலே நடைபெற்றது. அந்தக் கலந்துரையாடலில் மாணவர்களுக்கான கொடுப்பனவு சம்பந்தமாக உத்தியோகப்பற்றற்ற முறையில் பேசப்பட்டது எனினும் அதுதொடர்பாக எந்த முடிவோ அன்றித் தீர்மானமோ செய்யப்படவில்லை என்று - ஒன்றிய வட்டாரங்கள் அறியத்தந்தன. (அஐ)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



திருமதி
**சின்னையா குஞ்சுப்பிள்ளை**

தோற்றம் 26 ~ 03 ~ 1923 — மறைவு 16 ~ 01 ~ 2005

அன்போடும் பண்போடும் வாழ்ந்த அன்னையே!
உங்கள் ஆத்மா சாந்திபெற பிரார்த்திக்கின்றோம்.

எமது குடும்பத் தலைவியின் வீட்டுக்கிருத்திய கிரியைகள் இன்று (15.02.2005) செவ்வாய்க்கிழமை மு.ப. 11 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெறும்.

இந்நிகழ்விலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பாடசாலை வீதி,
நாவற்குழி, கைதடி. (42113)(43-16-17) - குடும்பத்தினர்.

## முக்கிய அறிவித்தல்

**சகல வெதுப்பக உரிமையாளர்களுக்கும்**

09.02.2005 இல் நடைபெற்ற வெதுப்பக உரிமையாளர்கள் கூட்டத்தில எடுக்கப்பட்ட தீர்மானத்துக்கு அமைவாக வெதுப்பக உரிமையாளர்கள், ஒப்பந்தகாரர்கள் தங்கள் வெதுப்பகத்துக்கு 7 நாள்களுக்குத் தேவைப்படும் மாவின் அளவை தற்போது நாவலர் வீதியிலும் 3 ஆம் குறுக்குத்தெருவிலும் இயங்கிக் கொண்டிருக்கும் ஏதாவது ஒரு சங்கத்தில் மாவின் அளவை பதிவுசெய்யும்படி கேட்டுக் கொள்ளுகின்றோம். 28.02.2005ஆம் திகதிக்கு முன் மா அளவீட்டைக் கொடுக்கவும்.

**வெதுப்பக உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம்**
64, 3 ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்.
**வெதுப்பக உரிமையாளர் சங்கம்,**
நாவலர்வீதி, கைலாசப்பிள்ளையார் கோயில் அருகில் யாழ்ப்பாணம்.
(42103)(43-16-17) - வெதுப்பகங்களின் இணைப்புக்குழு.

## கண்ணீர் அஞ்சலி

எமது கழக உறுப்பினர்களான *திரு.வ.பத்மநாதன்* (மேலதிக காணிப் பதிவாளர்) அவர்களினதும் *திரு.வ.சத்தியசீலன்* (உதவித்திட்டமிடல் பணிப்பாளர்) அவர்களினதும் அன்புத்தாயார்

**திருமதி வல்லிபுரம் கதிராசிப்பிள்ளை**

அவர்களின் மறைவையிட்டுத் துயருறும் குடும்பத்தினரின் துயரில் நாமும் பங்கு கொள்வதோடு, கண்ணீர் அஞ்சலி சமர்ப்பித்து அன்னாரின் ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மாவட்ட செயலக நலன்புரிக்கழகம்,
மாவட்டச்செயலகம், யாழ்ப்பாணம். (சி-40976)(43-16-17)

## துயர் பகிர்கின்றோம்

எமது பிரதேச செயலகத்தில் தென்னை அபிவிருத்தி உத்தியோகத்தராகக் கடமையாற்றும் ***திரு.வ.மகாலிங்கம்*** அவர்களின் அன்புத் தாயார்

**திருமதி வல்லிபுரம் கதிராசிப்பிள்ளை**

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தவரின் துயரில் நாமும் பங்குகொள்வதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

நலன்புரிச்சங்கம், பிரதேச செயலகம், பச்சிலைப்பள்ளி, பளை. (42107)(43-16-17) **உதவிப் பிரதேச செயலரும், உத்தியோகத்தர்களும்.**

## மரண அறிவித்தல்

### கணபதிப்பிள்ளை சின்னத்தம்பி



சோளங்கன், கரணவாய் மேற்கு, கரவெட்டியைப் பிறப்பிடமாகக் கொண்ட கணபதிப்பிள்ளை சின்னத்தம்பி 12.02.2005 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் மகேஸ்வரியின் அன்புக் கணவரும் தர்மாம்பாள் விக்னேஸ்வரன், விக்னேஸ்வரி, கணேஸ்வரன், தனலக்சுமி, பாஸ்கரி, ரஜனி ஆகியோரின் அன்புத் தந்தையும் சுபேந்திரன் (சுவிஸ்), ஜெயக்குமார், சோமநாதன் (லண்டன்), ராசகுமார், வசந்தகுமாரி, தர்மாம்பாள் ஆகியோரின் பாசமிகு மாமனாரும் அபிராமி, சுதாகர், அமுதசொருபி, அசிதன், கௌசிகன், கௌசிகா, கௌதன், வினுஷா, விசான், விநோதா, மதுசாந் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (15.02.2005) செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, தகனக் கிரியைகளுக்காக பூவரசந்திட்டி இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை, உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சோளங்கன், கரணவாய் மேற்கு.* (சி-40985)(43-16-17) தகவல்: குடும்பத்தினர்.


## மகளிருக்கான பயிற்சி வகுப்புகள்

★ Hair Style
★ Cake Icing
★ Dress Making
★ Fabric Painting
★ Saree, Salvar Works

குறுங்காலப்பயிற்சிகள் ஆரம்பம்.
அனுமதிகள் ஆரம்பமாகிவிட்டன.

**தாரிகை**

1. M.M.V.Road, நெல்லியடி. 2.செங்குந்தா வீதி, கல்வியங்காடு.
(சி-40973)

**மனோகரா** யாழ்ப்பாணம்

ஜெயம் ரவி M.குமரன் Son of மகாலட்சுமி
காட்சி நேரம்: 10.30, 2.30, (பு.நே)
விஜய், திரிஷா மற்றும் பலர் நடித்த
**திருப்பாச்சி** காட்சி : 6.30, 9.30(பு.நே.)



18 ஆம் திகதி முதல் இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின அதிரடி வெளியீடாக (சிறப்புத் தோற்றத்தில்) இளையதளபதி விஜய் நமீசா, ரவிகிருஷ்ணா, ரம்பா மற்றும் பலர் நடிப்பில்

**சுக்ரன்**

**நிறைஞ்சனாஸ்** சங்கானை

விஜயகாந்த், லைலா, ராதாரவி நடித்த

**கஜேந்திரா**

காட்சி நேரம்: 11.00 2.45, 6.00 (பு.நே.) (C/40667)

**நாதன்ஸ் சினிமா** யாழ்ப்பாணம்

இன்று முதல் காலை 10.30, 2.30 காட்சிகளாக
பரத், சந்தியா இன்னும் பலர் நடித்த

**காதல் டைடானிக்**

6.30, 9.30

**நாகம்ஸ் சினிமா** சுன்னாகம்



4 ஆவது வெற்றி வாரம்
இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின வெளியீடு
தனுஸ், ஸ்ரீதேவி, கருணாஸ், கபாலி, குணால், நாசர் நடித்த

**தேவதையைக் கண்டேன்**

தினசரி 11.00, 3.00, 7.00 (பு.நே.)
18.02.2005 முதல் **திருப்பாச்சி** (C/39854)

**ராஜா** யாழ்ப்பாணம்

இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரே தினவெளியீடு
அஜித், திரிஷா, மணிவண்ணன், வீசு நடித்த



**ஜி**

காட்சிநேரம்: 10.30, 2.30, 6.30, 9.30.(பு.நே.)


## மரண அறிவித்தல்கள்

### பொன்னுத்துரை மகேஸ்வரஆனந்தராஜா (துரை)



குமரகோட்டம், கோண்டாவிலை வசிப்பிடமாகவும் தற்போது ஜேர்மனியில் வசித்தவருமாகிய பொன்னுத்துரை மகேஸ்வரஆனந்தராஜா (துரை) அவர்கள் ஜேர்மனியில் 12.02.2005 அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னுத்துரை - சரஸ்வதி தம்பதியின் மகனும் குணராசா - பரிபூரணம் தம்பதியின் மருமகனும் புனிதவதியின் அன்புக் கணவரும் லஷ்சிகாவின் அன்புத் தந்தையும் அருளானந்தராஜா, ஜெயபாலதேவி, சிறிதேவி, சிறிகாந்தன், காலஞ்சென்ற சாந்தகுமார் மற்றும் சசிகுமார் ஆகியோரின் சகோதரனும் கணேசமூர்த்தி, சின்னராஜா, விநோ, தயா, பவா, பாக்கியராஜா, கீதாலக்சுமி, காலஞ்சென்ற தவராசா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (16.02.2005) புதன்கிழமை ஜேர்மனியில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*குமரகோட்டம், கோண்டாவில்.* (42115)(43-17-16) தகவல்: சரஸ்வதி (தாய்).

### பஸ்ரியாம்பிள்ளை மேரியோசவ் (நாதன்)

(தொழில்நுட்ப உத்தியோகத்தர்)



மிருசுவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பஸ்ரியாம்பிள்ளை மேரியோசவ் அவர்கள் 11.02.2005 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான திரு. திருமதி பஸ்ரியாம்பிள்ளையின் அன்பு மகனும் றாஜினியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற மரியநாயகம் மற்றும் மேரி றோஸ் பூமணி தம்பதியினரின் அருமை மருமகனும் சுபாஜினி, றுசாந்தினி (கனடா), காலஞ்சென்ற டயாளினி, ஜஸ்மின், றுக்சி ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் அலெக்ஸ் (கனடா) அவர்களின் மாமனாரும் அறோனின் பேரனும் காலஞ்சென்ற ஆரோக்கியநாதனின் அன்புச் சகோதரனும் ராணியின் மைத்துனரும் மைதிலி, சதீஸ் (சவுதி) ஆகியோரின் பெரிய தந்தையும் திருமதி இ.இமெல்டா (வவுனியா), ம.ஸ்ரான்லி (கொள்வனவு உத்தியோகத்தர், ப.நோ. கூ.சங்கம், பளை), ம.லோரன்ஸ் (ஜெயப்பிரதா நகைமாடம், யாழ்ப்பாணம்), ம.அலோசியஸ் (Unicef Jaffna), ம.அருள்நேசன் (கனடா), வி.ஜூடா (யாழ்ப்பாணம்) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (15.02.2005) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3.30 மணியளவில் மிருசுவில் புனித நீக்கிலார் ஆலயத்துக்கு எடுத்துச்செல்லப்பட்டு, இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு, மிருசுவில் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*புகையிரத வீதி, மிருசுவில்.* (42109)(43-16-17) தகவல்: நாதன் றாஜினி (மனைவி).

### சின்னையா லோகநாதன் (லோலா)

(இளைப்பாறிய ஊழியர், சீமெந்துக் கூட்டுத்தாபனம், புத்தளம்)



உரும்பிராயைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னையா லோகநாதன் 13.02.2005 ஞாயிற்றுக்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னையா - கனகமுத்து தம்பதிகளின் புதல்வனும் இணுவிலைச் சேர்ந்த காலஞ்சென்ற செல்லையா செல்வநாயகம் தம்பதிகளின் மருமகனும் சந்திராதேவியின் அன்புக் கணவரும் சதீஸ்வரன் (லண்டன்), தனுஷா (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும் சாந்தகுமாரின் (கனடா) மாமனாரும் மிதுலாவின் பேரனும் காலஞ்சென்ற நடராஜா (இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்), தங்கமலர் (உரும்பிராய்), இராசமலர் (கனடா), காலஞ்சென்ற துரைராஜா, நேசம்மா (சுவிஸ்), காலஞ்சென்ற சீதாலெட்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரரும் மகேஸ்வரி (இணுவில்), பரமேஸ்வரி (கொழும்பு) காலஞ்சென்ற யோகம்மா, சண்முகலிங்கம் (கொழும்பு), இந்திராதேவி (இணுவில்), கமலநாதன் (உரும்பிராய்) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் புதன்கிழமை (16.02.2005) மாலை 4 மணிக்கு பொரளை ஜயரத்ன மலர்சாலையில் வைக்கப்பட்டு, தகனக் கிரியைகளுக்காக பொரளை கனத்தை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*174,6/11 மெசெஞ்சர் வீதி,*
*கொழும்பு -12*
*தொ.பே. 2393682, 077 6307428* (சி-40981)(43-16-17) தகவல்: மனைவி.

### கதிரவேல் முத்தையா



புங்குடுதீவு 3ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த கதிரவேல் முத்தையா 14.02.2005 அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கதிரவேல் - சிவகாமிப்பிள்ளையின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - சின்னக்குட்டியின் அன்பு மருமகனும் கதிராசிப்பிள்ளையின் அன்புக் கணவரும் சண்முகநாதன் (பிரான்ஸ்) ஜெயராணி ஆகியோரின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்றவர்களான வேலாயுதபிள்ளை, சரவணை, பொன்னுச்சாமி, நல்லதம்பி, பொன்னம்மா மற்றும் நாகம்மா ஆகியோரின் அன்புச் சகோதரனும் இராசலெட்சுமி, காலஞ்சென்ற முத்துகுமாரு ஆகியோரின் அன்பு மாமனாரும் பார்வதி, நாகம்மா, அன்னம்மா, தங்கம்மா, காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை, மற்றும் நாகலிங்கம் ஆகியோரின் மைத்துனரும், கல்பனா, சோபனா, பிரவினா, ராஜேஸ்கண்ணா, சுரேஸ்கண்ணா, சரோஜ்கண்ணா, உருத்திரக்கண்ணா, தாரணி ஆகியோரின அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுகொள்கின்றோம்.

*3ம் வட்டாரம், புங்குடுதீவு.* (42116)(43-16-17)
தகவல்
மனைவி, மக்கள்,
பேரப்பிள்ளைகள்
மு.உருத்திரக்கண்ணா (பேரன்).

## அரசுக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எமது தலைமை இல்லை.

எனவே, இவ்வாறு ஆயுதக்குழுக்களை கிழக்கில் இருந்து அகற்றுவதன் மூலம் தமிழ் மக்களையும், புலிகளையும் திருப்திப்படுத்தி, பேச்சுக்கான நல்லெண்ண புறச்சூழலை அரசு உருவாக்க வேண்டும்.

அடுத்தது - ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட பகுதிகளுடன் மீள்கட்டமைப்புத் தொடர்பான விடயத்தில் பிரதேச ரீதியாக உருவாக்கப்படவிருக்கும் பொதுகட்டமைப்பு சம்பந்தமாக, அரசு தனது பிடிவாதப் போக்கை விடுத்து, விட்டுக்கொடுத்துச் செயற்பட முன்வரவேண்டும். புலிகளின் அதிக பங்களிப்புடன் கூடிய பொதுக்கட்டமைப்புக்கு - பொறிமுறைக்கு - இணங்குவதன் மூலம் நல்லெண்ண புறச்சூழலை அரசு ஊக்குவித்து உருவாக்கமுடியும்.

ஆனால், அரசு விட்டுக்கொடுப்பதற்காகவோ, இணங்கிவருவதற்காகவோ, இறங்கி வருவதாகவோ இல்லை. சுமுகநிலையை ஏற்படுத்தும் நினைப்பே அரசிடம் இல்லை.

புலிகள் பொறுமையின் எல்லையில் நிற்கிறார்கள். தங்களால் இயன்ற அதிகபட்ச விட்டுக்கொடுப்போடு பொறுமையைக் கடைப்பிடிக்கிறார்கள். பேச்சுக்கான சமாதானச் சூழலை ஏற்படுத்துவதற்கு வாய்ப்பளித்துத் காத்திருக்கிறார்கள்.

இணங்கிப்போகும்படி இலங்கை அரசை சர்வதேச சமூகம் அழுத்தம் கொடுப்பதே இப்போதுள்ள ஒரேவழி. அந்தப் பொறுப்பை நோர்வே முன்னேடுக்க வேண்டும்.

- இவ்வாறு புலிகளின் அரசியல் ஆலோசகர் பாலசிங்கம் தெரிவித்தார். (எ-க)

## முஸ்லிம்களுக்கும்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சம்மேளனத் தலைவர் சட்டத்தரணி ஏ.எல்.ஏ. ஜவாத், எம்.வை.அப்துல்காதர்.எம்.லெப்பை ஹாஜி உட்பட 15 பேரும், அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்த முன்னாள் சம்மாந்துறைப் பிரதேச சபைத் தலைவர் ஐ.எம்.இப்ராஹீம் தலைமையிலான 15 பேரும் பங்குகொண்டனர். காலை 10.30 மணிக்கு ஆரம்பமான சந்திப்பு மூன்று மணி நேரம் நடைபெற்றது.

அங்கு தொடர்ந்து பேசிய தமிழ்ச்செல்வன் தெரிவித்ததாவது:

தமிழ், முஸ்லிம் சமூகத்தின் ஒற்றுமையைக்கண்டு அச்சமடைந்த சிங்களப் பேரினவாதம் பிரித்தாளும் சூழ்ச்சியைக் கையாண்டது. அந்த ஒற்றுமையின் மூலம் விடுதலைப் புலிகள் சுதந்திர தாயகத்தை மீட்டெடுத்து விடுவர் என்ற அச்சத்தின் காரணமாகவே பேரினவாதம் இரண்டு சமூகங்களையும் பிரித்து வைத்தது.

விடுதலைப் புலிகள் தமிழ் மக்களுக்கானதொரு விடுதலை அமைப்பு என்று தப்பான அபிப்பிராயத்தை முஸ்லிம் மக்கள் கைவிட வேண்டும். அது தமிழர்களுக்கு மட்டும் உரித்தான அமைப்பல்ல. முஸ்லிம் சமூகத்திற்கும் உரித்தான அமைப்பு. இந்தக் கருத்தில் எமது தலைவர் பிரபாகரன் மிகவும் உறுதியாகவுள்ளார். இதனால்தான் சமாதான உடன்பாடு கைச்சாத்திடப்பட்டவுடன் தலைவர் செய்த முதல்பணி.முஸ்லிம் சமூகத்தின் தலைவர்களைச் சந்தித்து அவர்களின் பிரச்சினைகளைக் கேட்டறிந்தது.

நாம் துரதிஷ்டவசமான முடிவுகளை சில சந்தர்ப்பங்களில் எடுத்துள்ளோம். வடக்கிலிருந்து முஸ்லிம்களை வெளியேற்ற வேண்டிய சூழல் ஏற்பட்டது. விடுதலைப் போராட்டம் உக்கிரமடைந்த காலகட்டத்தில் வடக்கில் முஸ்லிம்களுக்குள் ஒழிந்திருந்து போராட்டத்தைப் பவீனப்படுத்த அரசு எத்தணித்தது. அந்தச் சூழலில் முஸ்லிம் மக்களுடன் போரிடவோ, யுத்தம் செய்யவோ நாம் விரும்பவில்லை. அதனாலே தான் அவர்களை வெளியேற்ற வேண்டி ஏற்பட்டது - என்றார்.

புலிகளின் மூத்த உறுப்பினர் வே.பாலகுமார்.மட்டு-அம்பாறை சிறப்புத் தளபதி பானு. அரசியல்துறை பொறுப்பாளர் இளந்திரையன்(மார்ஷல்),நீதி நிர்வாகப் பொறுப்பாளர் பரா.சட்டத்தரணி ஜவாத். வை.எம். அப்துல் காதர். ஐ.எம்.இப்ராஹீம் உட்படப் பலரும் நிகழ்வில் பேசினர். (எ-க-7)

## அறுத்தகூட...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பெற்ற பகிரங்க கூட்டம் ஒன்றில் வைத்து ஜே.வி.பியின் பெயரைக் குறிப்பிடாமல் ஜனாதிபதி குமாரதுங்க அக்கட்சியை வாங்கு வாங்கென்று வாங்கியிருந்தார்.

''கூட்டமைப்புக்குள் இருந்துகொண்டு காலைவாருவோர் - கூட்டமைப்பில் இருக்கப் பிடிக்காதோர் - அதிலிருந்து வெளியேறலாம்.

''புலிகளின் தலைவர் பிரபாகரனுடன் எமது அரசு இணக்கத்துக்கு வரமுயலும்போது, அந்த உடன்பாட்டில் உள்ள ஒரு சொல்லை - ஒரு வார்த்தையை-காட்டி எமது அரசைக் கலைத்துவிடப் போகிறார்கள் என அவர்கள் அச்சுறுத்து கின்றார்கள்.

''இந்த அச்சுறுத்தலுக்கெல்லாம் நான் மசிய மாட்டேன் - என்று ஜே.வி.பி.க்கு கசையடிப் பாணியில் அக்கூட்டத்தில் வைத்துத் தாக்குதல் கொடுத்திருகிறார் ஜனாதிபதி.

இப்படிப் பகிரங்கமாக ஜனாதிபதி தூக்கியெறிந்து பேசிய பின்னரும் அவரது கூட்டமைப்பில் நீடித்து இருந்து, அவரது அரசுக்கு முண்டு கொடுக்க வேண்டுமா? என்ற கருத்து ஜே.வி.பி.யின் கீழ் மட்டத்தில் உருவாகித் தீவிரமடைந்திருப்பதாகக் கூறப்படுகின்றது.

இந்தச் சந்தர்ப்பத்திலேயே அரசுக் கூட்டிலிருந்து தமது கட்சி வெளியேவந்துவிடவேண்டும் என்ற கருத்து ஜே.வி.பி. கீழ் மட்டத்தில் மேலோங்கி வருகின்றது என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

அரசுக்கும், புலிகளுக்கும் இடையில் இணக்கம் ஏற்படாமல் முட்டுக்கட்டை போடுபவர்கள் ஜே.வி.பியே என்ற சாரப்பட நேரடியாகவே ஜனாதிபதி குற்றஞ்சுமத்தியிருக்கும் இச்சமயத்தில் -

அரசுக் கூட்டமைப்பிலிருந்து வெளியேறி அந்த அரசை கவிழச்செய்தால் அமைதி முயற்சிக ளைக் குழப்பியவர்கள் ஜே.வி.யினரே என்ற குற்றச்சாட்டு - நிரந்தரப்பெயர் - நிலைத்துவிடும் ஆபத்து இருப்பதால், அது குறித்து உரிய பதில் நடவடிக்கை எடுக்கும் வரை அரசிலிருந்து வெளியேறுவதைத் தாமதிக்க வேண்டும் என்று சில ஜே.வி.பி. தலைவர்கள் கருதுகின்றார்களாம்.

இவ்வளவு தூரம் ஜனாதிபதி கேவலமாகத் தூக்கிஎறிந்து பேசிய பின்னரும் ஆளும் கூட்டமைப்பில் நீடித்தால் ஜே.வி.பி.யின் தன்மான உணர்வுக்கு அது பாதிப்பை ஏற்படுத்துவதுடன், பதவிக்காக சுயநிலைப்பாட்டை இழந்தவர்கள் என்ற அவப்பெயர் தமக்கு வந்துவிடும் என்று வேறு சில ஜே.வி.பி. தலைவர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர். (எ-க)

## யாழ். நகரில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குழுவின் யாழ்.மாவட்டத் தலைவர் றொனி பேர்சனிடம் இரண்டு மகஜர்கள் கையளிக்கப்பட்டன. இந்த மகஜர்களை யாழ். மாவட்ட முச்சக்கர வண்டிகள் சங்கத் தலைவர் எஸ். சிவராசா, யாழ்.மாவட்ட தனியார் போக்கு வரத்துச் சேவைச் சங்கங்களின் ஒன்றியத் தலைவர் சிங்க அரியரட்ணம் ஆகியோர் கையளித்தனர்.

பேரணியில் சென்ற வாகனங்கள் யாவும் கண்காணிப்புக் குழு அலுவலகப் பகுதியில் வீதியோரம் தரித்து நின்றதால், அவ்வீதியில் போக்குவரத்தில் நெரிசல் ஏற்பட்டது. இதனால் போக்குவரத்துப் பொலீஸார் அப்பகுதியில் பணியில் ஈடுபட்டனர்.

இதேவேளை -

மேற்படி, இரு விடயங்களையும் முன்வைத்து கூட்டுறவு அமைப்புகளின் தொழிற்சங்கங்கள், யாழ்.மாவட்ட சனசமூக நிலையங்களின் சமாசம்,யாழ்.மாவட்ட அன்னையர் முன்னணி,காணாமற்போனோர் பாதுகாவலர் சங்கம் என்பன இணைந்து இன்று கண்டனப் பேரணி நடத்தவுள்ளன. காலை 10 மணிக்கு நல்லூர் ஆலய முன்றிலில் ஆரம்பமாகும் பேரணி கண்காணிப்புக்குழு அலுவலகத்தைச் சென்றடையும். (10-12-30-86-88 111)

## வெலிகந்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சாவடிக்குள் புகுந்து அங்கு காவற்கடமையில் இருந்த இராணுவத்தினரையும் அவர்கள் மிரட்டிவிட்டுச் சென்றுள்ளனர் எனக் கூறப்பட்டபோதும், அப்படியொரு சம்பவம் அங்கு நிகழவில்லை.

கௌசல்யன் உட்படப் புலிகளின் உறுப்பினர்கள் கொல்லப்பட்டதற்கு பழிவாங்கும் அடிப்படையில் வெலிகந்தப் பகுதியில் புலிகளின் ஊடுருவல் அதிகரித்துள்ளது என எமக்குத் தகவல் கிட்டியுள்ளது - என்று அவர் மேலும் கூறினார். (எ-க)

---

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்

### கதிரவேலு கந்தசாமி

தோற்றம் 09.08.1922 மறைவு 27.02.2004

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரிவால் துயருறும்:
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

புலவனார் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம். (42121)

---

## மரண அறிவித்தல்கள்

### அபிசாயினி சிவகரன்

கோண்டாவில் மேற்கை வசிப்பிடமாகக் கொண்ட அபிசாயினி சிவகரன் நேற்று (14.02.2005) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் சி.சிவகரன் (ஆசிரியர், வேலணை கிழக்கு மகா வித்தியாலயம்) - சி.அமுதா (ஆசிரியை, கோண்டாவில் இந்து மகா வித்தியாலயம்) ஆகியோரின் அன்பு மகளாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (15.02.2005) செவ்வாய்க்கிழமை அவரின் இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, கோண்டாவில் கிழக்கு, கட்டையாலடி இந்துமாயனத்தில் பிற்பகல் 2 மணிக்குத் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சி.சிவகரன்
(தந்தை).

*தாயகம் சிறுவர் இல்லம் அருகில்,*
*பொற்பதி வீதி, கோண்டாவில்.* (29-16-17)

### திருமதி சின்னத்தம்பி முத்துப்பிள்ளை



வேலணை கிழக்கு, முதலாம் வட்டாரம் சாட்டியைச் சேர்ந்த திருமதி சின்னத்தம்பி முத்துப்பிள்ளை நேற்று (14.02.2005) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பியின் அன்பு மனைவியும் சாட்டியைச் சேர்ந்த பூமணி, பாலசிங்கம், செல்வராசா ஆகியோரின் அன்புத் தாயாரும் வீரசிங்கம், சறோஜினிதேவி, செல்வராணி ஆகியோரின் அன்பு மாமியாரும் காரைநகரைச் சேர்ந்த சின்னப்பிள்ளை, காலஞ்சென்ற கண்மணி, கந்தசாமி, வள்ளிப்பிள்ளை, காலஞ்சென்ற செல்லத்துரை ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று பிற்பகல் ஒரு மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக சாட்டி இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
கி.விஜயகுமார்
(லண்டன்- பேரன்).

*7 ஆம் வட்டாரம்,*
*சாட்டி,வேலணை.* (42119)(29-16-17)

### சரவணமுத்து கந்தசாமி

**(முன்னாள் தலைவர், அச்சுவேலி ப.நோ.கூ.சங்கம், முன்னாள் இயக்குநர், வலி.கிழக்கு வடபகுதி ப.நோ.கூ. சங்கம்)**

ஆவரங்கால் மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சரவணமுத்து கந்தசாமி 14.02.2005 இல் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சரவணமுத்து - சின்னத்தங்கம் தம்பதியினரின் மகனும் காலஞ்சென்ற செல்லத்துரையின் (யூனியன்) சகோதரனும் பொன்னம்மாவின் அன்புக் கணவரும் தேவாம்பிகை அம்பாள், ஜெகதீஸ்வரி, பராசக்தி, இராசலட்சுமி பரமானந்ததேவி, சுவர்க்கலோகநாதன், நடராசா (பிரான்ஸ்) ஆகியோரின் தந்தையும் வேலுப்பிள்ளை, செல்வரத்தினம், சதாசிவம், யோகநாதன், வசந்தாதேவி, திலகேஸ்வரி ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.02.2005) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் ஆவரங்கால் கருதடி மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சு.வேலுப்பிள்ளை
(மருமகன்).

*வன்னியசிங்கம் வீதி,*
*ஆவரங்கால் மேற்கு.* (42118)(29-16-17)

---


A/L 2006 கணக்கீடு
திரு. பாலேஸ்வரன் B.B.A.(F.M.Spl.)
கம்பெனி
Tue,Thu 4.30-5.30 SLT
ஆரம்பம் 16-02-2005 - இல் 4.30 மணி
திரு
கோண்டாவில்


## தாயகம் சிறுவர் இல்லம்

## தேவை

எமது சிறுவர்களுக்கு விஞ்ஞானம், ஆங்கிலம் ஆகிய பாடங்களைப் போதிப்பதற்கு ஆசிரியைகள் தேவை. நேரில் வரவும்.

16.02.2005 புதன்கிழமை
நேரம் மு.ப. 10 மணி

பொற்பதி வீதி,
(காளிகோயில் அருகில்),
கோண்டாவில்.

(சி-40986)(29-16-17)


கொழும்பு விலையில்
கணனிகள் !!!
தரம் தராதரம் அதன் மூலம்
நிரந்தரம் என்பது எமது
தாரக மந்திரம்
CeSCO


விபரம் 14 ஆம் பக்கம் பார்க்க


குறுகிய காலத்தில் World Class தராதரம் City & Guilds 'International London' (U.K.) Examination June 2005 இற்கான வகுப்புகள்

இன்று மாலை (15.02.2005) 5.00 மணிக்கு ஆரம்பம்
1.Electrical and Electronic Engineering
2.Telecommunication System Engineering
3.Construction Engineering (Civil)

ஆரம்ப வகுப்புகள் **K.Chandirabose**
1.Eng. (Lond.) MIIE (Lond.) அவர்களால் நடத்தப்படும்.

7 ஆம் திகதி கலந்துரையாடலில் பங்குபற்றியோர் அழைக்கப்படுகின்றனர். பங்குபற்றாதோர் தொலைபேசி மூலம் அனுமதிகளைப் பெற்றுக் கொள்ளலாம். (சி-40951)

***Jaffna Technical Institute** 07, பலாலி வீதி, யாழ்ப்பாணம்.*
*T.P.: 021 222 3335, 011 2361587, 0112 506803*


---

## மரண அறிவித்தல்கள்

### வைத்திலிங்கம் சுப்பிரமணியம்

இணுவில் தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வைத்திலிங்கம் சுப்பிரமணியம் நேற்று (14.02.2005) திங்கட்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மகன்,
பேரப்பிள்ளைகள்.

*பரராசசேகரப் பிள்ளையார் கோயிலடி.*
*இணுவில் தெற்கு.* (சி-40988)(29-16-17)

### கர்ணன் ஹேசிகா



கோண்டாவில் கிழக்கைச் சேர்ந்த ஹேசிகா கர்ணன் நேற்று (14.02.2005) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் சி.கர்ணன் (சமுர்த்தி அலுவலர், கோப்பாய்), ஜெயாலினி (நுண்கலைப் பீடம் நடனம் மூன்றாம் வருடம்) தம்பதியினரின் அன்பு மகளாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.02.2005) செவ்வாய்க்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கொட்டைக்காடு இந்துமயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சி.கர்ணன் (தந்தை).

*கோண்டாவில் கிழக்கு,*
*கோண்டாவில்.* (42120)(29-16-17)

### சுப்பிரமணியம் அமிர்தலிங்கம்



பெரியவிளானைப் பிறப்பிடமாகவும், சில்லாலையை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் அமிர்தலிங்கம் நேற்று (14.02.2005) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவாகளான சுப்பிரமணியம் - இராசம்மாவின் அன்பு மகனும் செல்லத்தம்பி - செல்லம்மா ஆகியோரின் மருமகனும் புஸ்பராணியின் அன்புக் கணவரும் சித்திரா, ராசன் கரன், காந்தன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் மகிந்தனின் மாமனாரும் ஆவார் .

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.02.2005) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக ராசமூறுக்கு இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மனைவி, மக்கள்,
மருமகன், சகோதரர்கள்.

*சில்லாலை வீதி,*
*பண்டத்தரிப்பு* (42117)(29-16-17)

*இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் [பிறைவேட்] நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 15.02.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.*